R/Armour Street
509.

Office of the Registrar of Books & Newspapers
7-MAR 1956
CEYLON.

Registered at the G. P. O: as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 15

சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO—12.

BEREC
TRADE MARK

ப்ளாஸ்டிக் பெரெக் பவுடர்கள் இங்கிலாந்தில் தயாரிக்கப் பட்டவை.

அதிக பிரகாசமான வெளிச்சத்தையும் நீண்ட உழைப்பையும் அளிக்கிறது.

புதகம் 9 மன்மத ஆடி மாசி மாதம் 14 திகதி 26-2-56 சுமித்ருக்ஷமை ரஜப் பிறை 13 இதழ் 39



தனிச் சிங்களக் கொடியே தேசியக் கொடியாகும்!

யு. என். பி. மேலிடத்தின் அந்தரங்கமானமுடிவு

(நமது நிருபர்)

இலங்கையின் 'தேசியக் கொடி'யிலிருந்து சிறுபான்மை மக்களை 'பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக' இணைக்கப்பட்ட நிறக்கோடுகள் அகற்றப்படும் என்று நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

தனிச்சிங்களக் கொடியையே நாட்டின் தேசியக் கொடியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என யு. என். பி. தலைமைப்பீடம் அந்தரங்கமாக தீர்மானித்திருப்பதாகவும் நம்பப்படுகிறது.

தனிச் சிங்களக் கொடியையே தேர்தல் பிரச்சாரங்களில் உபயோகிப்பது என்று யு. என். பி முடிவு செய்திருப்பதாக நமக்கு கிடைத்த செய்தி தெரிவிக்கிறது. தேர்தல் முடிந்ததும் இன்றுள்ள தேசியக் கொடியில் காணப்படும் கோடுகளை அகற்றி விடுவது என்ற ஒரு தீர்மானத்தை யு. என். பி. பாராளுமன்றத்தில் கொண்டுவரலாம் எனத் தெரிகிறது.

யு என் பி. அதிகாரத்திற்கு வந்தால் தனிச்சிங்களக் கொடியே தேசியக் கொடியாக ஏற்றுக் கொள்ளப்படும் என்பதாக தேர்தல் வேலைகளில் ஈடுபட்டுள்ள யு. என் பி. அபேட்சகர்கள் தமது தொகுதிகளில் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்துள்ளார்கள். "சிங்கக் கொடி தேசியக் கொடியாக வேண்டுமானால் எங்களை தேர்ந்தெடுங்கள்" என்று இவர்கள் பகிரங்கமாக கூறிவருகிறார்கள்.

தனிச் சிங்களக் கொடியே நாட்டின் தேசியக் கொடியாக இருக்கவேண்டுமென ஹம்பாந்தோட்ட பாராளுமன்றப் பிரதிநிதியாயிருந்த திரு சார்லிஸ் எதிரிசூரிய மூன்று கோரியிருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். என்றாலும் மொழிப் பிரச்சினையில் யு. என். பி. மகாநாடு முடிவுக்கு வரும்வரை

(9-ம் பக்கம் பார்க்க)

தமிழில் தந்திகள் அனுப்பும் திட்டம் நிறுத்திவைக்கப்படுகிறது!

(நமது நிருபர்)

தமிழ்ப் பேசும் பிரதேசங்களிலிருந்து தமிழிலும், சிங்களம் பேசும் பிரதேசங்களிலிருந்து சிங்களத்திலும் தந்திகள் அனுப்புவதற்கான ஒரு திட்டத்தை கார்ச் மாதம் 15ந் தேதியுடன் ஆரம்பிப்பதென்று அரசாங்கம் முன் தீர்மானித்திருந்தது. இதை ஒட்டி ஏற்கனவே பல நடவடிக்கைகளை தபால் இலாகா எடுத்து வந்தது.

ஆனால் தபால் இலாகாவுக்கு அரசாங்கம் அனுப்பியுள்ள ஒரு உத்தரவில் சிங்களத்தில் தந்தி அனுப்புவதற்கான திட்டத்தை மார்ச் மாதம் 15ந் தேதிலிருந்து நடைமுறைக்கு கொண்டு வருமாறும், தமிழ் தந்திகள் பற்றிய திட்டத்தை நிறுத்தி வைக்குமாறும் ஆணை பிறப்பித்துள்ளதாம்.

கனி மகாநாட்டில் ஒரு மொழித் தீர்மானத்தை நிறைவேற்றிய பின் உடனடியாக அரசாங்கம் எடுத்துள்ள இந்த நடவடிக்கை எதிர்காலத்தில் அரசாங்கம் கடைப்பிடிக்கவிருக்கும் கொள்கையை தெளிவாகக் காட்டுகிறது என்று கூறப்படுகிறது. அரசாங்கத்தின் சில இலாகாக்களிலிருந்தும் தமிழ் ஒதுக்கப்படும் என்றும், நாற்றுக்கு நூறு தமிழ்ப் பேசும் பிரதேசங்களில் கூட தமிழ்ப் பேசும் மக்கள் அரசாங்கத்துடனும், பொது வாழ்வுடனும் சம்பந்தப்

(9-ம் பக்கம் பார்க்க)

தொய்வு

ஓயாத இருமல், சுவாசத் தொய்வு, (Asthma) சளிக் கட்டு, மூச்சுத் திணறல், பீனிசம், கக்குவான், மார்புவலி, தொண்டை ரணம் போன்ற கொடிய நோய்களுக்கென்றே பிரான்சில் (France) தயாரிக்கப் பட்டுவந்திருக்கிறது இந்த அபூர்வ ஔஷதம். இரவு பகல் நித்திரையின்றி துன்புற்றோர் பலர் பூரண குணமடைந்திருக்கின்றனர் இந்த மருந்தினால்.

எங்கும் கிடைக்கும்.



உடனே வாங்கிச் சாப்பிடுங்கள் லெப்ஸ் பெக்டோரல்

கேட்லாக் இலவம்

வெல்டன் ஏஜன்சீஸ்,
170, ஆட்டுப்பட்டித்தெரு
கொழும்பு போன்: 2885.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் பிரமாதமாக நடைபெற்றது இதுபற்றிய முழு விபரங்களும் உள் பக்கங்களில் வெளியாகியுள்ளன. படவிபரங்கள்:

(1) பண்டத்தரிப்பு சந்தியில் ஒரு காகமும் கறுப்புக் கொடியும் தவிர வேறு ஒரு ஈயுமாடவில்லை. (2) சங்கானைப் பகுதியில் வீதிகளில் போடப்பட்டிருந்த மரச்கட்டைகளை பொலீஸார் அகற்றி பொலீஸ் ஸ்டேசனுக்கு முன் குவித்தனர். (3) யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் மூடப்படாதிருந்த ஒரு கடை மக்களின் வேண்டுகோளின்படி மூடப்படுகிறது. (4) இணுவில் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் யு. என். பி. அரசாங்கத்திற்கு மக்கள் பாடைகட்டி பார்வைக்கு வைத்தனர். (5) பஸ் நிலையத்தில் வண்டிகள் வரங்கிடந்தன. ஒருவர் கூட பிரயாணம் செய்ய முன்வரவில்லை. இறுதியில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது (6) தமிழ் மக்களின் உரிமைப் போரில் சிங்கள சகோதரர்களும் கலந்துகொண்டனர்: யாழ்ப்பாண நகரத்திலுள்ள சிங்கள நண்பர்களுக்கு சொந்தமான சிற்றி பேக்கரியும் கதவடைப்புச் செய்தது.

படம்; சபாஸ்

மக்களின் போஷண நிலை படுமோசமடைந்துள்ளது

(நமது நிருபர்)

தேச மக்களின் போஷண நிலை படுமோசமாகி வருகிறது.

இதுபற்றி நீண்ட பரிசிலனை நடத்திய குடிஜன மதிப்பு—புள்ளி விபர இலாகாக்களின் தீர்ப்பே மேற்கூறியது.

இரண்டு இலாகாக்களும் வெளியிட்டுள்ள அறிக்கையில் பல்வேறுமாறு தெரிவித்துள்ளன: "ரோமப்புர மக்களின் மூன்று ஒரு பகுதிக்கு மேற்பட்டவர்கள் தினசரி போதிய உணவு பெற முடியாத நிலையிலேயே இருக்கிறார்கள். அவர்களின் பொருளாதார நெருக்கடியே இதற்குக் காரணம். பெருவாரி மக்களை உட்கொள்ளும் உணவில் எவ்வித புஷ்டியான சத்துக்களுமே கிடையாது"

ஏராளமான கர்ப்ப

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக் கருவிகளில் நடு நாயகமாகத் திகழும் நாகசுரம்

நாக சர்ப்பத்தை மகிழ்விக்கும் ஸ்வரங்கள் கொண்டதால் அப்பெயர் பெற்றதா?

நாகஸ்வர அமைப்பு விதிகள் பற்றி சில விபரங்கள்

எஸ். ஆர். ஞானசுந்தரம்

இன்றைய உலகில் செவிக் கின்பந் தரும் எத் தனையோ இசைக்கருவிகள் வளர்ந்து வருகின்றன; அந்த வாத்திய இசைக்கரு விகளிலே அதிலும் துளைக் கருவிகளில் ஒரு தனிச்சிறப் புடன் விளங்குகின்றது இந்த நாகசுரம். இக்கருவி நம் தமிழ் நாட்டில் வெகு காலமாக இருந்து வருகின்ற தென்பதற்கு சிறிதேனும் ஐயமின்று!

இவ்வாத்தியம் 14 ம் நூற் றாண்டிலிருந்து வழங்கி வரு வதாகச் சிலர் கூறுகின்றார் கள். நம் தமிழ் நாட்டுக் கோவில்களிலும், திருவிழாக் களிலும், சமூக சமய சடங் குகளிலும் ஏனைய சோபன வைபவங்களிலும் நிகழும் மேளவாத்தியக் கச்சேரிக ளில் நாகசுர இசைக்கு முத லிடம் கொடுக்கப் பட்டுவருகின்றது. இவற்றை சங்ககால காவியங்களான சிலப்பதிகாரம், மணி மே கலை போன்ற நூல்களிலு லும், பிற ஆதாரங்களிலு லும் ஆன்றோர் நமக்கு நுகர் வித்துள்ளனர்.

இக்கருவி இருக்கு வேதத் திலிருந்து உண்டானதென்று கூறப்படுகின்றது. தமிழ் நாட்டு ஆராய்ச்சியாளர் திராவிட நாட்டிலிருந்தே இக்கருவி உற்பத்தியான தெனவும் கூறுகின்றனர். இவ்வாத்தியத்தை குறிப் பிட்ட ஓர் சமூகத்தார் தங் கள் வாழ்க்கைத் தொழிலா கக் கொண்டு போற்றி வளர்த்து வருவது குறிப்பி டத்தக்கது. இன்னும் இவ் வாத்திய இசையால்தான் சாதாரண பாமர மக்களும் உண்மையான தெய்வீகத்திய சங்கீதத்தை என்றும் கேட்டு ஆனந்திக்கக்கூடியதாக யுள் ளது.

நாக சர்ப்பத்தை மகிழ் விக்கும் ஸ்வரங்களை எழுப்பு வதாலும் இதற்கு 'நாக சுரம்' எனப் பெயர் வந்த தென்றும் கூறப்படுகிறது. இக்கருவிக்கு 'நாகஸ்வரம், நாதஸ்வரம், நாதசுரம், 'நாகசின்னம்' நாசின்னம், நாயனம், எனப்பல பெயர் கள் வளங்கி வருகின்றன.

16 ம் நூற்றாண்டிலியற்றப் பெற்ற 'கூளப்ப நாயக்கன் காதல்' என்னும் நூலில் இதன் பெயர் 'நாகசுரம்' என்றே கூறப்பட்டுள்ளது. இதன் உண்மையான பெயர் என்ன என்பதை ஆராய்ந்த பின் இக்கருவிக்கு 'நாகசுரம்' என வழங்குவதே சரியான பெயர் என பல அறிஞர்க ளும் ஒப்புக் கொண்டுள்ள னர்.

இவ்வாத்தியத்தின்மகிமை ஒசையின்றி எந்தவிதமான மங்கள கருமங்களும் நடை பெறுவதில்லை சோபிப்பது மின்று. இது நம் தாய் தமிழ் பண்பாட்டில் உயர்வான கொள்கை. இதன் நாதமே இசையை எங்கும் பரவச் செய்துள்ளது: அன்றியும் இசையோடுசம்பந்தப்பட்ட எத்தனையோ நுணுக்கங்களை கண்டு பிடிப்பதற்கும் இவ் வாத்தியமே பேருதவியாய் அமைந்துள்ளது.

இந்த வாத்தியத்தை மூன்று (3) பகுதிகளாகச் செய்து அமைத்து வாசித்து வந்தனர்: அதாவது:-

1: மேல் அணை, (2) கீழ் அணை, (3) உளவு: (நடுப் பகுதி)

மேல் அணை கீழ் அணை தங்கம், வெள்ளி, பித்தளை லோக அமைப்பாலும் மூன் றுவதான உளவு (நடுப்பகுதி) 'ஆச்சா' என்னும் மரத் தால் செய்யப் பெற்றதும் ஆகியவையே. ஆனல் தற் காலம் முழுவதும் மரத்தால் செய்யப் பெற்றமர நா கசுரத்தையே பாவிக்கின்ற னர்.

இவ்வாத்தியத்தின் சுரஸ் தான அமைப்பு, ஒருஸ்தாயி சுரங்களையுடையது: அதா வது:-

1: உளவின் (நடுப்பகுதி) மேல் பாகத்தில் இசைப்பகு திகின் சப்தங்கள் உண்டா கும் ஏழு (7) துவாரங்களும் உளவின் அடிப்பாகத்தில் பிரம்ம சுரமான ஐந்து (5) வெற்றுத் துவாரங்களும் அமைத்திருக்கும்: இதுவே தமிழ் பண்பாட்டின் சாஸ் திர முறையாகும்.

இக்காலத்தில் சில வித் வான்கள் பிரம்ம சுரமென் னும் ஐந்து (5) சுரங்களை யும் அடைத்துவிட்டு, கீழ் அணைக்கும் உளவுக்கு மிடையே தனரக் குளாய் பொருத்தியும் வாசிக்கின் றார்கள். இப்படிச்செய்வது சாஸ்திர முறைப்படி அமைந்த நாகசுரத்திற்கு தீங்கு செய்வதாகும்.

இவ்வாத்தியத்தை வாயில் வைத்து நாதமுடன் நன்கு வாசிப்பதற்கு இன்றியமை யாத பொருளாக விளங்கு வது 'நறுக்கு' இதை சீவாளி' யென்றும் கூறுவர். நறுக்கு இன்றேல்இவ்வாத்தியத்தை வாசிக்கவியலாது. இந்த நறுக்கு தென் இந்தியாவில் 'கொன்னிடம்' என்னும் இடத்தில் காவேரி ஆற்றுப் படுகையில் விளையும் கொறுக்கை நாணல், என்னும் தட்டைப் புல்லை பலவித முறையில் பாகம் பண்ணி செய்யப் படுகின்றது. இந்த நறுக்கை கருவியுடன் பொருத்தி வாசிப்பதற்கு கெண்டை யும் சேர்த்து உபயோகிக் கப்படுகிறது. இக்கெண்டை மெல்லிய செப்புத் தகட்டை சிறு குழாயாகச் செய்து இரண்டு (2) கிரட்டைச் சில்லைச் சேர்த்து நூலினுல் சுற்றி இணைக்கப்பட்டிருக் கும். இக்கெண்டையில் லாது தனி நறுக்கை வாத் தியத்தில் பொருத்தி வாசிக்க முடியாது. இக் கெண்டை சீவாளி இணைப் பைத்தான் 'கெண்டை சீவாளி' யெனக் கூறுகின் றனர். இக்கெண்டை சீவா ளியை பதப்படுத்தி பொ ருத்தி வாசிப்பதற்கு யாவுத் தத்தத்தால் செய்யப்பெற்ற குச்சிகளும், நாகசுரத்தில் நூல்கட்டித் தொங்கவிடப் பட்டிருக்கும்.

இவ்வாத்தியத்திற்கு ஒரு ஸ்தாயி சுரங்களே வாசிக்கக் கூடியதாக அமைத்திருப்பி னும் வாசிக்கும் போது காற் றின் உதவியினுலும், உதட் டின் பிடிப்பாலும் இரண்டரை ஸ்தாயிவரை யில் வாசிக்கப் பெற்று வரு கின்றது. இவ்வாத்தியத்தில் சட்சம், சுத்தரிடபம், சதுர் சுருதிரிடபம், சாதா ரண காந்தாரம், அந்தர காந்தாரம், சுத்த மத்திமம், பிரதி மத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், சதுர் சுருதி தைவதம், கைசிகி நிடாதம், காகலி நிடாதம் போன்ற பன்னிரண்டு (12) சுரஸ்தா னத்தில் அமைந்த மூப்பத்தி ரண்டு (32) சுருத்தாராகங் களும், சென்னிய ராகங்க ளும், சாடவ ஒளடவ, வக் கர வர்ச்சிய, பாசாங்க, தேசிய, இராகங்களும் சரச மாய் வாசிக்கப்பெற்று வரு வது இதன் இயற்கையான குணமென்று சொல்லலாம்.

உயர்தர நாகஸ்வரக் கலை ஞர்கள் வாசிக்கும் போது நாகசுரத்துக்கு ஆதார சுருதி யாக அமைந்திருக்கும் ஒத்து நாயன சுருதியுடன் ஒன்றி ஒவ்வொரு சுரஸ்தானங்களி லும் நின்று அமைதி பெற்று ஏழிசையாய் இசைப்பயனுய் உடைய இறைவனின் எழிலை யும் உருவையும் தனது நாக சுரத்தில் அமைத்து விடுகி ருர்கள்.

முற்காலத்தில் நாகசுர வித்துவான்கள் பெரும் பாலும் கையாள்வது திமிரி நாகசுரமாகும். [illegible] சூழ்நிலைகள் அக்காலத்தில் பெரும்பாலும் இருந்தே வந்த தன. இத்தகைய பெரிய கலைஞர்களின் சங்கீதத்தை ராமரமக்களான குடிஜனங் கள் அதிகமாகக் கேட்க சந் தர்ப்பம் இல்லாமலே யே இருந்து வந்தது. ஆனல்குடி சனங்களின் இசைத் நாகத்தை தீர்த்து வைக் கவே இவ்வாத்தியசையை பேருதவியாக விளங்கி வந் தது. இன்னும் இந்த நாக சுரம் குடிமக்களை தன்வயப் படுத்தி அவர்களின் இதய பீடத்திலமர்ந்து ஆட்சி செலுத்துமை காரணமா கவே இதை ஆன்ருேர் "குடிகளின் இசையரசன்" எனப் பொதுவாக குறிப் பிட்டிருக்கின்றனர். இது உண்மை உதாரணமே!

வங்காளி பாஷை!

பாகிஸ்தானில் ஆட்சி மொழி ஆகும்

வங்காளி, உருது, ஆகிய 2 மொழிகள் பாகிஸ்தான் நாட்டின் ஆட்சி மொழிக ளாக இருக்கும். பாகிஸ் தான் அரசியல் நிர்ணய சபையின் கூட்டத்தில் இவ் வாறு முடிவு செய்யப்பட் டது.

வங்காளியைஆட்சிமொழி ஆக்க பாகிஸ்தான் சர்க்கார் இதுவரை மறுத்து வந்தது. ஆனல் "வங்காளி மொ ழியை ஆட்சி மொழியாக்" என்று கிழக்கு பாகிஸ்தான் முஸ்லிம்கள் (வங்காளிகள்) நடத்தி வந்த கடும் போ ராட்டத்துக்கு கடைசியில் பாகிஸ்தான் சர்க்கார் பணிந்து விட்டது.

"ரெனி"

மூலிப் பலவீனம், நரம்புத் பலவீனம், மறதி, மயக்கம், நித்திரை பங்கம், இந்திரிய கலிதம், மூலச்சூடு, நீரேவரட்சி, உஷ்ணம், ஊரல், தடிப்பு, சொரி, உடம்பு கைகால் நடுக்கம், இருதயத் துடிப்பு, பித்த மயக்கம், வயிற்று நோவு, இரத்தச் கொதிப்பு போன்ற நோய் களை நீக்கி இரத்தத்தையும் சுத்திசெய்து தாதுவையும் கட்டுப்படுத்தும்.

கிடைக்குமிடம்:

சென்ற் மேரி வைத்தியசாலை

401, செட்டியார் தெரு. கொழும்பு.

தமிழில் தபாற் கல்வி

★ ஆங்கிலம்
★ சிங்களம்
★ ஹிந்தி

ஆகிய ஆறு மாதங்களில் போதிக்கப்படுகின்றன:

G. C. E.-கு உரிய
62 ஆங்கிலக் கட்டுரைகள் ரூ: 8-00
50 தமிழ்க் கட்டுரைகள் ரூ: 8-00

விவரங்களுக்கு எழுதுக

S. KUMARASWAMY, B. A. (Cey.).
SHANTI COLLEGE,
7 - 18th Lane, Colpetty.
COLOMBO-3.

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம்

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை, என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களிலிவலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சுவலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் நீரும்; நிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை' தேய்த்து வந் தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக் குப் பிரகாசத்தையும் கொடுக்கும்; சகல வியாதி களுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இல வசமாக அனுப்புவோம்;

பெரியது ரூ. 5-50 சிறியது ரூ. 3-00
வி. பி. பி. செலவு வேறு;

புரொப்ரைட்டர்: எம். பொன்னையா

ஆனந்தா வைத்தியசாலை

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் பேரறிஞர் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை

தமிழகம் தந்த தலை சிறந்த ஆராய்ச்சி வல்லுனர்

ஆங்கிலத்தில் தமிழிலக்கிய சரிதம் எழுதி தமிழுக்கு அகிலப் புகழ் தந்தார்

பேராசிரியர் திரு வையாபுரிப் பிள்ளை அவர்களுடைய பெற்றோர் வசித்து வந்தது திருநெல்வேலி நகரைச் சார்ந்த தாமிரபருணித் கரையில் விளங்கும் சிக்கநரசய்யன் கிராமம். இங்கே 13-10-1888 தேதியில் திருவோணத் திருநட்சத்திரத்தில் பிறந்தார். கல்விப் பருவத்தில் திருநெல்வேலியிலேயே சிறப்பாக விளங்கிய உபாத்தியாயர் கணபதி பிள்ளையிடம் ஆரம்பக் கல்வி பெற்றார். இவர் தந்தை ஸ்ரீ சரவணப்பெருமாள் பிள்ளை. சைவ சாஸ்திரங்களில் மிகவும் வல்லவர். சிவ நெறிச் செல்வர். சைவ சம்பந்தமான சில நூல்களை இளமையில் கற்கும் பேறும் இவருக்கு வாய்த்தது. தேவாரம் முதலிய அநேட் பாடல்களை இனிமையாகத் தினமும் பாடி வந்தார்.

ஆரம்பக் கல்வியின் பின் ஆங்கிலப் பாடசாலைப் படிப்பும் திருநெல்வேலியிலேயே தொடர்ந்தது. சரித்திரப் பேராசிரியர் திரு. க. அ. நீலகண்ட சாஸ்திரியார், அட்வகேட் திரு பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், பி. திரு ஆகியவர்கள் பிள்ளையவர்களுடன் கற்றஒரு சாலை மாணவர்கள்; பலரும் தோழர்கள். பாடசாலையில் எம். எஸ். சுப்ரமணியக் கவிராயரும் சிவராம பிள்ளையும் இவருக்குத் தமிழாசிரியர்கள். பள்ளியைத் தவிரவும் தனிப்படச் சில தமிழ்ப் பெரியார்களிடத்திலும் தமிழ் நூல்களைக் கற்கும் பேறு இளமையில் அவருக்கு வாய்த்தது. அவர்களில் ஒருவர் பாம்பன் திருக்குமரகுருதாச சுவாமிகள். சுவாமிகள் குறுக்குத் துறையில் சில காலம் தங்கியிருந்த போது அவரையடுத்து பிள்ளையவர்கள் பயன்பெற்றார். பிள்ளையவர்களிடத்தில் சுவாமிகளுக்கு மிகுந்த பிரியம் உண்டு. இவ்வாறே யாழ்ப்பாணம் சுவாமிநாதப் பண்டிதர் அங்கு வந்து பல காலம் இருந்தார். இவரிடமும் பாடம் கேட்டுத் தமது தமிழ்க் கல்வியைப் பெருக்கிக்கொண்டார்.

பி. ஏ. வகுப்பில் பெற்ற பேறு

திரு பிள்ளையவர்கள் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பி. ஏ. படிக்கச் சேர்ந்தார். சரித்திரத்தையும் பொருளாதாரத்தையும் சிறப்புப் பாடமாகக் கொண்டிருந்தார். இங்கே தமிழ் நாட்டில் சிறந்து விளங்கிய சுவாமி வேதாசலம் என்னும் மறைமலை அடிகள் இவருக்குத் தமிழாசிரியர். தமிழ்க் கல்வியில் பிள்ளையவர்கள் இறந்துள்ளமை கண்டு இவரிடம் அடிகள் மிகுந்த அன்பு காட்டினார். கல்லூரித் தமிழ்ச் சங்கத்தின் காரியதரிசியாகவும் அமர்ந்து சிறந்த முறையில் பணிபாற்றினார். சென்னையில் தி. த. கனகசபைத் தரம் பிள்ளை முதலிய தமிழ்ப் பெரியோர்களோடெல்லாம் பழக்கம் நேர்ந்தது.

பி. ஏ. பரீட்சையில் திருவையாபுரி பிள்ளை தமிழில் தமது மாகாணத்திலேயே முதன்மையாகத் தேர்ச்சி பெற்று சேதுபதி தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றார்.

கல்லூரியில் படிக்கும் பருவத்திலேயே ஒலைச்சுவடிகளில் அமைந்த நூற்சுவடிகளை வாசிக்கும் நிறமை பெற்றிருந்தார். அதில் வெளிவந்த நூல்களையும் பழம் பிரதிகளோடு ஒப்பிட்டுக் கற்க வேண்டும் என்ற விருப்பம் அவருக்கு எழுந்தது. முதன் முதல் சி. வை. தாமோதரம் பிள்ளை வெளியிட்ட கலித் தொகைப் பதிப்பை கலித் தொகை ஓலைச் சுவடி பெற்று ஒப்பிட்டு வாசித்தார். பி. ஏ. பரீட்சை முடிந்த விடுமுறை ஆராய்ச்சிதான் முக்கியத்துவம் அடைந்தது. 1923ல் புதிதாக 'நெல்லை கம்பர் கழகம்' ஒன்று நிறுவி அதில் கம்பன் விழாவும் சிறப்புற நடத்தினர்கள். இவ்விழாவிற்குத் தலைமைதாங்கியவர் மகா வித்வான் ரா. இராகவையங்கார் இவ்விழாவில் 'கம்பன் திருநாள்' என்பது பற்றிய பாவலர் கட்டுரை ஒன்றை பிள்ளை அவர்கள் வாசித்தார். எல்லோராலும் இவரது கட்டுரை புகழ்ந்து போற்றப்பட்டது. 'செந்தமிழ்' தமிழைத் தவிரவும் சென்னையில் தமது நண்பர் கூட்டாக நடத்திவந்த 'தமிழர் நேசன்' பத்திரிகையிலும் கட்டுரைகள் எழுதி வரலானார்.

திருவனந்தபுரம் வாழ்க்கை

1912-ம் ஆண்டு ஜூன் மாதம் திருவையாபுரிப் பிள்ளைக்குத் திருமணம் நடந்தேறியது. அவர் மனைவியார் ஊர் திருவனந்தபுரத்தை அடுத்த பாளையாமபுரம் திருவையாபுரிப் பிள்ளை திருவனந்தபுரத்தில் வசித்து அங்குள்ள சட்டக் கல்லூரியில் பயின்று வந்தார். சட்டப் பரீட்சை தேறிய பின் திருவனந்தபுரம் நீதிமன்றத்திலே வக்கீல் தொழில் நடத்திவந்தார். அக்காலத்தில் இவருக்குப் பல தமிழன்பர்கள் நண்பராயினர். நீதிபதி கே. ஜி. சேஷையர், கவி மணி தேசிகவிநாயகம் பிள்ளை முதலியோர் இவர்களில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர்கள். ஞாயிற்றுக்கிழமைதோறும் புத்தன் சந்தையிலுள்ள சைவப் பிரகாச சபையில் தமிழன்பர்கள் ஒன்று கூடி திருக்குறள் முதலிய இலக்கியங்களை முறைப்படி ஆராய்ந்து வந்தார்கள்.

இளமையில் பிள்ளையவர்கள் தமது தந்தையார் தூண்டுதலால் கற்ற சம்ஸ்கிருதப் பயிற்சியை பெருக்கிக் கொண்டார்.

தமது தொழில் துறைக்காகப் பிரதேச மொழியாகிய மலையாளமும் கற்றுக் கொண்டார். பதிப்பாசிரியர் என்ற தகுதியையும் எழுத்தாளர் என்ற சிறப்பையும் முதல் முதலாக அவர் அடைந்தது இந்த ஊரில்தான்.

1922ம் வருஷம் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை மனோன்மணீயத்தை இரண்டாம் பதிப்பாக வெளியிட்டார். 1891ல் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை தாமே வெளியிட்ட பதிப்பு கிடைத்ததற்கரியதாக இருந்தது. சர்வகலாசாலையார் பாடமாக மனோன்மணீயப் பகுதிகளை வைத்தபோது மூலத்திலும் உரையிலும் சில பல மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. எல்லாவற்றையும் ஆராய்ந்து நல்ல பதிப்பித்து வெளியிட்ட இவர் பதிப்பு போற்றிப் பாதுகாக்கத்தக்கது. "செந்தமிழ்" பத்திரிகையில் பலவகையான ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடிக்கடி எழுதி வந்தார். பழைய ஏடுகளைத் தொகுத்தலும் அதனை ஆராய்தலும் இடைவிடாது செய்து வந்தார்.

திருநெல்வேலி வாழ்க்கை

1923ம் வருஷ ஆரம்பத்தில் தமது ஊரிலேயே வக்கீல் தொழில் நடத்த எண்ணிக் குடும்பத்துடன் திருநெல்வேலி சென்றார் திரு டி. 1கே சிதம்பரநாத முதலியார், சக்ரபாணி நம்பியார், வேதநாயகம் பிள்ளை, அனந்தராம அய்யங்கார் முதலிய தமிழ் அன்பர்களோடு அடிக்கடி தமிழ்பற்றிய ஆராய்ச்சிகள் நிகழ்த்திவந்தார். இதே கம்பராமாயண ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தார்.

சென்னை சர்வகலாசாலையின் தமிழ்த் துறைத் தலைவர்

அகராதி வேலை முடிந்த நிலையில் தமிழாராய்ச்சித் துறைத் தலைவர் பதவி காலியாயிருந்தது. இப்பதவியில் திரு வையாபுரிப் பிள்ளை நியமிக்கப்பட்டார். இந்த வேலையில் 1946வரை சுமார் பத்து ஆண்டுகள் அமர்ந்து திறம்படத் தமிழாராய்ச்சித் துறையிலிருந்து கொண்டே தமிழகராதியின் அனுபந்தத் தொகுதியாகிய 7-வது தொகுதியையும் பதிப்பித்து வந்தார். இதில் திரு இராகவையங்கார் முதலியோர் துணைவர்களாயிருந்தார்கள். 1938ல் இத்தொகுதி பூர்த்தியாகியது. 1938ம் ஆண்டு அரசாங்கத்தார் பேராசிரியருக்குராவ்சாகிப் பட்டம் அளித்து கௌரவித்தார்கள்;

இக்காலத்தில் ஜெர்மன், பிரெஞ்சு பாஷைகளையும் முறையாகக் கற்றுவந்தார். ஜெர்மன் மொழியில் தேறி தேர்ச்சிப்பத்திரம் பெற்றார். பிரெஞ்சும் தக்கபடி தெரியும். சர்வகலாசாலை மூலமாகப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. ஆராய்ச்சித் துறைக்கு வந்த பலருக்கு அத்துறையில் தக்க வழிகாட்டியாய் அமைந்து அவர்கள் எடுத்துக்கொண்ட பொருள் பற்றி ஆராய்ந்து எழுத வழிகாட்டியுள்ளார். இலக்கியம் பற்றியும் இலக்கணம்பற்றியும் மொழிபற்றியும் கவிதைகள் முதலியன பற்றியும் பற்பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் அவ்வப்போது எழுதி பற்பல பத்திரிகைகள் மூலமாக வெளியிட்டு வந்தார்; சிறு கதைகளும் ஏகதேசமாகப் பத்திரிகைகளுக்கு எழுதிவந்தார்;

ஓய்வுக்குப் பின்

ஓய்வு பெற்ற பின், தமது கட்டுரை, கதை முதலிய வற்றையெல்லாம் நூல் வடிவில் தொகுத்து வெளியிடத் தொடங்கினார்; இலக்கியச் சிந்தனைகள் தமிழின் மறுமலர்ச்சி, சிறுகதை மஞ்சரி, தமிழர் பண்பாடு இலக்கிய உதயம் (இரண்டு தொகுதி) இலக்கிய நீரம், -தமிழ்க் கடல் மணிகள் என்பன வெளிவந்தன 1946ல் நாகபுரியில் நடந்த கீழ்த்திசை மகாநாட்டில் திராவிடப் பகுதிக்குத் தலைமைத்தாங்கித் தாம் நிகழ்த்திய ஆங்கில உரையை Research inDravidian Languages என்ற தனி நூலாக வெளியிட்டுள்ளார். இதன் தமிழ் மொழிபெயர்ப்பு 'திராவிட மொழிகளின் ஆராய்ச்சி' என்ற தனி நூலாக வெளிவந்துள்ளது. 1949ல் திருவிதாங்கூர் சர்வகலாசாலையார் அழைப்பிற்கிணங்க அங்கு சென்று 'தமிழிலக்கியச் சரித்திரக் கால'பற்றி ஆறு சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். பேச வேண்டிய காலத்திற்கு முன்பாகவே இப்பொருள் பற்றி விரிவாக ஆராய்ந்து எழுதி முடித்தார். இந்த விரிவான ஓர் இலக்கிய சரிதம்.

திருவனந்தபுரம் சர்வகலாசாலைப் பேராசிரியர்

இந்த சர்வகலாசாலையில் மூன்று பேராசிரியராக இருந்த திரு மு இராகவையங்கார் 1951ல் ஓய்வு பெற்ற போது சர்வகலாசாலையார் அப்பதவிக்குப் பிள்ளையவர்களை விரும்பி அழைத்தனர். மூன்று ஆண்டு அப்பதவியிலிருக்க ஒப்புக்கொண்டு அப்பதவியை ஏற்றுக்கொண்டார். "கலிய காலம்" பற்றிய தமிழாராய்ச்சியை சர்வகலாசாலையில் சார்பில் அரங்கேற்றி தொடங்கினார்கள். அங்கிருந்த போதும் சென்னையில் தமது நூற்பதிப்பு வேலைகளைக் கவனித்து வந்தார். 'இலக்கிய மணிமாலை' வெளிவந்தது;

சென்னைக்கு திரும்புதல்

1954 செப்டம்பரில் பேராசிரியர் வேலையிலிருந்து ஒய்வு பெற்றார். பின்னர் சென்னை சாந்தி நகரிலுள்ள தமது இல்லத்திற்குக் குடும்பத்துடன் திரும்பினார். பேராசிரியர் வேலையிலிருந்து திருவனந்தபுரத்திலிருந்து புறப்பட்ட பொழுது அவ்வூர் தமிழன்பர்கள் பேராசிரியர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டி வழங்கியது குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலத்தில் தமிழிலக்கிய சரிதம்

ஸ்ரீ வையாபுரிப்பிள்ளை தமிழிற் போலவே ஆங்கிலத்திலும் அவ்வப்போது பல கட்டுரைகள் வெளியிட்டிருக்கிறார். 1946-ம் ஆண்டு முதல் இந்திய சரித்திர காங்கிரஸ் (Indian History Congress) என்ற சபையினுடன் தொடர்பு கொண்டிருந்தார். இச்சபை இந்திய அரசாங்கத்தின் ஆதரவில் சரித்திர நூல்களைப் பகுதி பகுதியாக வெளியிட்டு வருகிறது. இத் தொகுதிகளில் தமிழிலக்கியச் சரிதம்பற்றி எழுதும் பொறுப்பை வையாபுரிப் பிள்ளை ஏற்றுக்கொண்டார்;

பேராசிரியர் அவர்களுடைய பதிப்புகள் எல்லாவற்றிலும் நூற்பொருள் விளக்கத்துக்கு இன்றியமையாத அகராதி ஆராய்ச்சிக் குறிப்புகளே முதலியனவெல்லாம் தெளிவாகத் தரப்பட்டுள்ளமை காணலாம். இதுவரை 38 நூல்களுக்குமேல் பதிப்பிக்கப்பட்டுள்ளன. சங்க நூல்களே, காவியங்களே, இலக்கணங்களே, பிரபந்தங்களே முதலியன இவர் பதிப்பில் உள்ளன. இவற்றுள் "சங்க இலக்கியம்" பதிப்

(12-ம் பக்கம் பார்க்க)

ரிஜிஸ்டர் No 7614 டிரேட் மார்க்

இதனால் சுகமாகும் வியாதிகள்:—

தலைவலி, தடுமல், மண்டைக் குத்து, காய்ச்சல், கை கால் உளைச்சல், திரேகவலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, கபம், இருமல், வாய்வு வலி, அஜீர்ணம், வயிற்றுப் பொருமல், சோம்பல், அசதி, உற்சாகமின்மை, முதலிய வியாதிகளைப் போக்கி உலுறுதி பெறச் செய்கிறது

இலங்கை சோல் ஏஜண்டு

எம்.ஏ.ஆர்.எஸ்.மனுவேல் நாடார் & கோ
34, பிரட்டியார் தெரு, கொழும்பு-11

ஹெட் ஆபீஸ்-193, காலி ரோட், கொழும்பு. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையற்ற மாஜி யு. என். பி.

தமிழர்களுக்கு வழக்கறிஞர் சங்கம் அபயமளிக்கிறது

மணமகனில்லாத திருமணத்தைப்போன்று தமிழரசுக் கட்சி இல்லாமலாவது தமிழர் முன்னணியென்றை அமைப்போமென முயன்று அதிலும் படுதோல்வியடைந்த போலித் தலைவர்களினைப் புனர்ஜென்மம் பெற்ற சில முன்னாள் யு. என். பி தமிழ் எம். பீக்கள் இன்று தம்மைத் தடுத்தாட்கொளும்படி யாழ்ப்பாண வழக்கறிஞர் சங்கத்திடம் சரணடையடைந்திருக்கின்றனர். அந்தப் பிரமுகர்களில் ஒரு சிலரது அந்தரங்க ஆலோசனையை அரங்கேற்றுவதில் சமீபகாலமாக அக்கறை கொண்டுழைத்து வரும் வழக்கறிஞர் சங்கமும் அப்பதவிப் பிதற்றல் பிடித்த வர்களை அஞ்சாதீர் என அபயகரத்தையும் நீட்டியுள்ளதாம். எதிர்வரும் பொதுத் தேர்தல் நாடகத்திலே ஆடுவதற்கு மேடையின்றி அங்கலாய்ப்புக்கொண்டு திரிந்த அந்த வேடம் மாறிகளினை அரங்கேற்றுவதற்கான திட்டம் சுறுசுறுப்புடன் உருப்பெற்று வருவதாக அந்தரங்கமான தகவலொன்றின் மூலம் அறியக்கிடக்கிறது.

குறித்த வழக்கறிஞர் சங்கம் தமிழ் மக்களின் எதிர்காலத் தலைவிதியை நிர்ணயிக்கப்போவதாக சொல்லிக்கொண்டு எடுத்துவந்த நடவடிக்கைகளின் விளைவாகப் பொதுத் தேர்தலில் தனது சார்பில் அபேட்சகர்களை நியமிக்க முடிவு செய்து அதற்குரிய சட்ட திட்டங்களையும் தயாரித்துவிட்டதாம். இவற்றையெல்லாம் நிறைவேற்றி வைக்க அது போலிப்பேரவையொன்றையும் உருப்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. குறித்த சட்ட விதிகளின் முன்னேற்பாடாகக் குறிப்பிட்டவரையோ சிலரை மட்டுமே அபேட்சகர்களாகத் தெரிவு செய்வதற்கேற்ற வகையில் அமைக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. அரசியற் கட்சிகளைச் சேர்ந்த எவரும் அபேட்சகர்களாக அனுமதிக்கப்படமாட்டார்களென்றும் அரசியற் கட்சிக்காரர் யாராவது அபேட்சகர்களாக வர விரும்பினால் கட்சித் தொடர்பைத் துண்டித்தவிட வேண்டுமெனவும் அவ்விதிகள் கூறுகின்றனவாம். அத்தகு சட்ட விதிகளைப் பொதுப்படையாக வைத்துக்கொண்டு பார்க்குமிடத்து அந்தரங்க நோக்கம் எதுவென்பது புலனாகிறதென விஷயம் தெரிந்தவர்கள் மத்தியில் பேசிக்கொள்ளப்படுகிறது.

முன்னணி முகாம் எதையும் அடைக்க முடியாமல் முகம் வாடித் திரும்பிய முன்னாள் யு. என். பி தாசர்களில் ஒருசிலர் சமீபத்தில் சுபேச்சைப் பல்லவியையாவது பாடுவோமெனப் பக்கமேளங்களைத் தயார் செய்ய முயன்றதும் அவை சுதி சேராமற்போனதும் பலரும் மறிந்து பரிகசித்த சங்கதியாகும். இன்று அவர்களெல்லாம் வழக்கறிஞர் சங்கத்தின் அமைப்பொன்றின்மூலமாக முன்னணிப் போர்வையில் அபேட்சகர்களாக நிற்கப்போகிறார்களாம். அதுபற்றி தகவல் மிக விரைவில் வெளியாகவிருக்கிறதாம். இருந்தாலும் சூட்டுக்குமேல் சூடு பட்டதிலல் உண்டான மாசு மறுக்களையெல்லாம் அந்தப் போர்வையினுல் மறைத்து மக்களை ஏமாற்றிவிட முடியாதென வாழ்ப்பாணத்து வாக்காளர் மத்தியில் பேசிக்கொள்ளப்படுகிறது.

குறித்த தேர்தல் நாடகத்தை நடத்துவதில் திரு ஜி ஜி பொன்னம்பலத்தின் நண்பனை ஒரு அட்வக்கேட்தான் அதிக அக்கறையோடு ஓயோடித் திரிகிறாராம்.

தமிழ் மக்களை ஆக்கிர மூட்டும்

வேலையில் வகுப்பு வாதிகளின் கையாட்கள் ?

அரசாங்கத்தின் அதர்மச் செயலுக்கு வருத்தம் தெரிவிக்கும் வகையில் வட இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியில் அகிம்சா முறையில் நடைபெறும் செயல்களைக் குழப்பியடிக்குமாறு சிங்கள வகுப்புவெறித் தாபனங்கள் காடையர்களும் பகைத் தூண்டி விட்டிருப்பதாகத் தெரிகிறது. இத் தூண்டுதலின் பயனாகவே கடந்த சுதந்திர தினத்தன்று பரந்தனில் அசம்பாவிதமான சம்பவமொன்று நடந்ததாக அறியப்படுகிறது.

அங்குள்ள கடைவீதியில் தமிழ் மக்கள் கட்டியிருந்த கறுப்புக் கொடிகளைச் சில வாலிபர்கள் இரவில் அறுத்தெறிய முயன்றனர். அதைத் தடுக்க எடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை அந்தக் காடையர் கூட்டம் ஒரு வகுப்புக் கலவரத்துக்கு வித்திடும் வகையிற் பயன்படுத்தப் பார்த்தனர். தமிழ் மக்கள் காட்டிய எல்லைமீறிய பொறுமையினால் அந்த எண்ணம் இறுதிவரை பலிக்காமற் போய்விட்டது.

இச்சம்பவத்தை வைத்துக்கொண்டு கிளி நொச்சிப் பொலீசார் அங்கு தமிழினத்தின் விடுதலைப் போரில் தீவிரமாயீடுபட்டுழைத்து வருபவர்கள் மீதெல்லாம் அடக்குமுறையைக்கையாள முயன்றிருக்கின்றனர். குறித்த சம்பவத்தோடு எவ்வகையிலும் சம்பந்தப்படாத நால்வரை அவர்களது செய்து அனுவசியமான குற்றச்சாட்டுகளெல்லாம் சுமத்தி அவர்கள் மீது வழக்கும் தொடர்ந்திருக்கிறார்கள். அத்தப் பொலீஸ் நிலையத் தலைமையதிகாரி ஒரு சிங்களவர் என்ற காரணத்தினால் சட்டம் தன் பாதையை விட்டிறங்கிச் செல்கிறதெனவும் அது விரோதமாயிருப்பதாயும் அப்பகுதியிலுள்ள தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அகஸ்தியர்

பொன்னுங்காணி தைலம்

வைத்திய முறைப்படி
தயாரிக்கப்பட்டது
குணம், மணம் நிறைந்தது



தேகச்சூடு, மேகச்சூடு முதலிய உஷ்ண வியாதிகள், கண் எரிவு, சிரசூலை, காமாலை, பீனிசம் முதலியவைகளுக்கு சிறந்தது.

ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க் 1/4 பாட்டல் 1க்கு விலை ரூ. 3-25

அகஸ்தியர் ஆயின்ட்மென்ட்

சகலவிதமான பத்து, படை, சொறி, சிரங்கு, கரப்பான் முதலியவைகளுக்குச் சிறந்தது.

புட்டி 1-க்கு விலை ரூ. 1-00

அகஸ்தியர் பதிமருந்து

உயர்தரமான பல மருந்துகள் சேர்த்து ஒரே மருந்தாகத் தயாரிக்கப்பட்டது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் இருக்கவேண்டிய முதல் மருந்து.

புட்டி 1-க்கு விலை ரூ. 1.25

விபரங்கள் அடங்கிய நோட்டீஸ் ஒவ்வொரு புட்டியிலும் இருக்கின்றன.

சப் ஏஜண்டுகள்:
கணேஷையர் மெடிக்கல் ஸ்டோர்ஸ், 14, ராகவைஜர் ஆள்கமுனை
G. S. சுமதிரத்ன, ரத்ன ஸ்டோர்ஸ், புப்பரஸ்ஸ. PUPURESSA
S. விஜயரத்தினம், 201, மெயின் வீதி கண்டி வெலிகுளோய, BELIHULOYA
அலியா மரிக்கார் அன் சன்ஸ், பிரபல பருத்தி வியாபாரம், 160, மெயின் வீதி, நீர்கொழும்பு

V.P.P. ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்

கொழும்பு ஏஜண்ட்:

P. D. எலாரிஸ்,

40, காபோஸ்லேன், புறக்கோட்டை, கொழும்பு

ஏகவினியோகஸ்தர்கள்:

கலதூரியா ஸ்டோர்ஸ்,

43 மாளிகாகந்தை ரோடு, மருதானை, கொழும்பு-10.
தந்தி "AGASTHIAR".

முதலாவது பரிசு மூன்று பேர்களுக்கு

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி இல 23 முடிவுகள்

முதலாவது பரிசு

முதலாவது பரிசு ரூ 600ம் முற்றிலும் சரியான விடையனுப்பிய பின்வரும் மூன்று பேர்களுக்கும் தலைக்கு ரூ 200 விகிதம் சரிசமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

1. ச. செல்வத்துரை
அ. ம. கல்லூரி, காரைதான் குடி.

2. கே. ஏ. சாமுவேல்
எதரப்பள்ளி குரூப், புலதிகோகுப்பிட்டிய.

3 ஆர் அந்தோனிப்பிள்ளை
C/o ஜே. அன்னம்மாவி பார் ரோட், மட்டக்களப்பு.

இரண்டாவது பரிசு

இரண்டாவது பரிசு ரூ 300ம் ஒரு பிழையுடன் கூடிய விடைளனுப்பிய பின்வரும் 20 பேர்களுக்கும் தலைக்கு ரூ 15 விகிதம் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

11 திருமதி மங்கையர்க்கரசி செல்வத்துரை, கல்லுப்புடுங்கி, தெல்லிப்பளை 2 ஜி ஏ. ராஜா, C/o டி. பாலநாதன், பார் ரோட், மட்டக்களப்பு. 3 திருமதி த. சுந்தையா, சூலாம்பத்தை, தெல்லிப்பளை 4. பூ எம். அராபா, 1வது டிவிசன், மருதமுனை. (கி மா) 5 வே. விஜயகம், ஒட்டமாவடி, வாகரைச்சேனை. 6 ஆ. செல்வரத்தினம்மா, 139 டிவாஸ்லேன், கிருஷ்ணப்பாஸ், கொழும்பு. 7. வீ. களஞ்சியையா, லெஜர் வதிதை, புதுளை 8 எஸ். எம். சுந்தசாமி C/o எம். எஸ். இராசையா, 176, கொழும்பு வீதி, கண்டி. 9 எஸ் கே. சதாசிவ அய்யரி, சென்றல் காலேஜ், மட்டக்களப்பு 10 செல்வி பொன்மலர் வேலாயுதம், மூர்த்தநாயனார் கோயிலடி, ஆனைக்கோட்டை.

11. கே. நடராசா, 5 சுருட்டுக்கடை, தலாவை 12. எம் ஏ. எம். எம் பலீல், கப்புவத்தை, வெலிகாமம். 13 பி கே மூஸ்தபா 2ம் குறுக்குத் தெரு, பக்களம். 14 கே. தவமணி, C/o எம் எஸ். இராசையா, 176, கொழும்பு வீதி, கண்டி. 15. மு வீரக்குட்டி, ஆசிரியர், அரசினர் கனிஷ்ட பாடசாலை, தலவாக்கொல்லை. 16. எம். எஸ். எஸ். எட்வர்டு. 23744, ஜம்பட்டா தெரு கொழும்பு 13 17. பி. காசிப்பிள்ளை, தம்பிலுவில், திருக்கோவில்.

(கி மா.) 18. ஜி. ஏ. மருதமுத்து, இ. செ. அ. மகா தோட்டம், நாகவில், பளாலி, புத்தளம். 19 க. அருளானந்தம், அரசினர் வைத்தியசாலை, கல்முனை (கி. மா.) 20. வே. அமலையா, ஆசிரியர், காரைதீவு (கி. மா.)

விசேஷப் பரிசு

அதிகப்படியான கூப்பன்களனுப்பியதற்காக விசேஷப் பரிசு ரூ 100ம் 306 கூப்பன்களனுப்பிய பின்வரும் நேயருக்கு அளிக்கப்படுகிறது:

செல்வி பொன்மலர் வேலாயுதம்

மூர்த்தியையர் கோவிலடி, ஆனைக்கோட்டை.

இப்பரிசுகள் சம்பந்தமாக இனியேதும் கோரிக்கைகள் வந்தால், அவைகளும் பரிசீலனை செய்யப்பட்ட பிற்பே, இப் பரிசுத் தொகைவிபரங்களை முடிவாகத் தீர்மானிக்கப்பட்டதாகும்.

பிழைப்பணமின்றி வரும் கோரிக்கைகள் கண்டிப்பாக பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

திருக்குறட் போட்டித் தேர்வு

திருக்குறட் போட்டித் தேர்வு சம்பந்தமாக எழுதப்பட்ட கேள்விகளுக்கு விளக்கம் தரும் முகமாக பின்வரும் அறிக்கையை தமிழ் மறைக்கழகம் வெளியிட்டுள்ளது.

"திருக்குறட் போட்டித் தேர்வு விஞ்ஞான யாவும் திருக்குறட் செய்யுள்களைப் பற்றியனவாகவே யிருக்கும் கருத்தை விளக்கிய பின் மனனஞ் செய்வது இவ்வாகவிருக்கும் எனபதை யாவரும் அறிவர். அன்றியுங் குறள்களைப் பிழையின்றிப் பாடமாக்குதற்கும் எழுதுதற்கும் அவற்றின் கருத்தை அறிந்திருத்தல் இன்றியமையாதது. தேர்வுக்குத் தோற்றபவர்கள் பிழைகளின்றி விரைவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். குறள்களை எழுதிப் பயின்று கொள்வது நன்று!!

—

திருவள்ளுவர் திருநாள் விழா

அகில இலங்கைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் 26-2-56 ஞாயிற்றுக்கிழமை மாலை வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் திருவள்ளுவர் திருநாள் விழா சங்கத் தலைவர் வித்துவான் திரு வ. மு. கனகரத்தினம் தலைமையில் நடைபெறும்.

அவ்வமயம் "திருவள்ளுவர் காட்டும் நீதி" எனபது பற்றி நியாயவாதி திரு இ. பொன்னையாவும், "வள்ளுவரும் பெண்களும்" எனபதுபற்றி செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியும், "நான்காணும் திருவள்ளுவர்" என்பதுபற்றி திரு ஆரையம்பதி சு. அமரசிங்கமும் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

திரு கோடகநல்லூர் எஸ் இராமசுவாமி ஐயர், செல்வி லலிதா கிருஷ்ணமூர்த்தி, செல்வி மனோரஞ்சிதம் சதாசிவம் முதலியோர் புல்லாங்குழல் கச்சேரியும், திருமதி சண்முகவல்லி செந்திநாதையர் இசைவிருந்தும், சைவமங்கையர் சங்கீத நடனக் கல்லூரி மாணவிகளின் நடனமும் நடைபெறும்.

ஹர்த்தால் போராட்டத்தில் தொழிலாளர் குதித்தனர்

காலிசேன்துறைப் பட்டின சபையில் இறந்த சில அங்கத்தினர்களுக்கு உத்தியோக பூர்வமான முறையில் ஹர்த்தால் அனுஷ்டிக்க வேண்டாம் என்று பிரேரணையை நிறைவேற்றிய போதும் காலிசேன்துறையில் உள்ள பெரிய சிறிய கடைகள் எல்லாம் மூடப்பட்டன.

ஹர்த்தாலை அனுஷ்டித்த தமிழ் அரசுக் கட்சியினருடன் ஒத்துழைக்கும்படி தனிப்பட்ட தொழிலாளிகளும் தமிழ் அபிமானிகளும் பல ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டனர். அளவெட்டிச் சுருட்டுத் தொழிலாளர்கள் வெளியிட்ட "தமிழுத் துரோகிகளே கேளுங்கள்" எனும் துண்டுப் பிரசுரம் ஒன்றிலிருந்து உதாரணமாகச் சில வாசகங்கள் இங்கே தரப்படுகின்றன. "சாத்வீக போராட்டத்தில் தமிழனின் உரிமையைக் கேளடா!..... இமயத்தின் உச்சியிலும் சுமரிமுனையிலும் ஓலிக்கவேண்டிய உயர் மரபு களிலும் ஒப்பாரமாயிருந்தவர் நம் தமிழ் அன்னை..... தமிழ்ப் பேசும் பிரதேசங்களில் சிங்களவரைக் குடியேற்றக் கும்மாளம் போட்டாய்..... ஏழைத் தமிழர்களின் உண்ண உணவினறி உடுக்கத் துணியின்றி கூக்குரலிட்டதைச் செவிமடுத்தாயா? ..... பட்டத்துக்கும் பதவிக்கும் உன் சகோதரரை நாடுகடத்த எண்ணிய நயவஞ்சகரோடு சட்டம் வகுத்தாய்....."

பாடசாலைகள் மூடப்பட்டன

இப்பகுதிகளில் உள்ள பாடசாலைகள் எல்லாம் மூடப்பட்டன. அளவெட்டி அருணோதயக் கல்லூரி போன்ற சில பாடசாலைகள் வகுப்பு நடத்த முயன்றும் பொதுமக்களின் கொதிப்பைக் கண்டு புதிதாக மூடிவிட்டனர். இதுதொகுதிப் பிரதிநிதி திரு. சு நடேசன் பேருக்கு முகாமைக்காரராக இருக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியுமே

(13ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாணம் முழுவதும் பரிபூரணமான ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது

தாய் மொழியைக் காத்து தமிழ் மக்களின் ஏகோபித்த எழுச்சி

எங்கும் கறுப்புக்கொடி-கதவடைப்பு-'பிரேதங்கள்' தகனம்

பெப். 20— காமல் ஒடமுயன்றபருத்தித் துறை பஸ்கம்பனிக்குச் சொந்தமான பஸ் வண்டிகள் பல தாக்கப்பட்டுச் சேதமடைந்தன. அவற்றை ஓடச்செய்வதில் செல்வாக்கிழந்த அரசியல் தலைவர் ஒருவர் பெரும் சிரத்தை காட்டினராம்.

சாவகச்சேரிப்பகுதியில்பஸ் போக்கு வரத்தை நடத்துவதிலும் ஹர்த்தால் நடத்துவோரைக் கைது செய்வதிலும் வேடம் மாறிய பெரியார் ஒருவர் பகீரதப் பிரயத்தனப்பட்டதும் அவர் செயலுக்கு மதிப்புக்கிடைக்காமற்போனதும் குறிப்பிடத்தக்கது.

ஞாயிற்றுக்கிழமை இரவே இந்த அடங்காப்பிடாரி பஸ் கம்பெனிகளை எதிர்பார்த்து வீதியெங்கும் தடைசெய்யப்பட்டிருந்தது.

தன் அண்டப்புழுகுகளால் மக்களை ஏமாற்ற முயன்ற தினகரன் உடனடியாக வாசகர்களிடமே ஏமாற்றத்தைத் தேடிக்கொண்டது. ஹர்த்தாலன்றும் மறுதினமும் தினகரன் சந்தி சந்தியாகக் கிழித்துச் சாக்கடையில் வீசப்பட்டது. சம்பந்தப்பட்ட காரியாலயத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடந்தது. தினகரனே விற்கமுடியாதென ஏஜண்டுகள் சிலர் அங்குதிருப்பிக் கொடுத்த தொடு கண்டனமும் கூறினர். நகரில் தொங்கவிடுவதற்கான தினகரன் பகிஷ்கரிப்புப்படுதாக்களுமிகவிரைவில் எதிர்பார்க்கலாமென ஒரு தகவல் கூறுகிறது. பல பொதுஸ்தாபனங்கள் லேக் ஹவுஸ் பத்திரிகைகளைப் பகிஷ்கரிப்பதெனத் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாக அறியப்படுகிறது.

இந்த ஹர்த்தாலை முறியடிப்பதில் எதிர்கட்சிகளை மகத்தான ஏமாற்றத்தைக் கண்டனர். தொழிலாளர் சங்கங்களின் பேரால் எதிர்ப்பறிக்கை விட்டவர்கள் கூட அன்று தங்கள் கடைகளைப் பூட்டி விட்டு நிம்மதியாக வீட்டிலிருந்தார்கள். சாப்புச் சிப்பந்திகள் சங்கத்தின் எதிர்ப்பறிக்கையைச் சாப்புச் சிப்பந்திகள் மதிக்காமல் ஹர்த்தாலில் கலந்து கொண்டார்கள் ஒப்பாரி நடையில் திரு. வீ. வீரசிங்கம் மாஜி எப்பியும் மற்றும் சில இடது சாரி அரசியற் கட்சிக் காரர்களும் பொது மக்களுக்கு உபதேசம் செய்து வெளியிட்ட துண்டுப் பிரசுரங்கள் செல்வாக்கிழந்த வெறுங்காகிதங்களாகி விட்டன வென்பதை அப்பிரகிருதிகளே உணர்ந்திருக்கக்கூடும் மக்கள் இடக்கத்தின் மகத்தான சக்தியைக் கண்டு போலும் யு. என். பி. தாசர்கள், இடது சாரிகள் இவர்களேவரும் வாலைச் சுருட்டிக்கொண்டு அன்று ஒதுக்குப்புறமாக இருந்து விட்டார்கள்.

சகல பாடசாலைகளும் ஆசிரியர்களும் இது விஷயமாகப் பெரும் ஆதரவு தர மறுத்த கல்லூரி அதிபர்கள் சிலர் மாணவர்களின் வற்புறுத்தலுக்கு அடிபணிய வேண்டியதாயிற்று பொதுமக்கள் தம் உணவுப் பிரச்னையைக் கூட இது விஷயத்தில் மறந்து விட்டார்களென்பதை ஆங்காங்கு பூட்டிக் கிடந்த கூட்டுறவுப் பண்டசாலைகளும் மொத்த விற்பனவு ஸ்தாபனங்களும் எடுத்துக் காட்டின.

இந்த வெற்றிகரமான இயக்கத்தை முறியடித்து விடுவதற்குச் சாதகமாகச் சில சுதேராதிகள் அசம்பாவிதசம்பவங்களை உண்டாக்க முயன்றனராயினும் அவ்வளவு தூரம் வெற்றிகிட்டவில்லை எப்படியும் கட்சிக்குக் கெட்ட பெயரை உண்டாக்கவேண்டுமென்ற எண்ணம் பெரும் பாலும் தோல்வியடைந்தது.

ஏரிக்கரை வான்களே கறுப்புக் கொடி போட்டு ஓடின

பஸ்களில் பிரயாணிகள் ஏற மறுத்தனர்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒப்சேவர் பத்திரிகையை விற்பனை செய்யும் வான் வல் வெட்டித் துறையினூடாகச் சென்ற போது கறுப்புக் கொடியுடன் சென்றது. இதைக் கண்ணுற்ற இளைஞர் பலரும் ஆச்சரியமடைந்தனர். மற்றும் வானைப் போக்கு வரத்தைத் தடுப்பதற்காக பெருந்தெருக்களில் இடையிடையே கற்குவியல்களும், மரக்கட்டைகளும், தங்கூரமும் வைக்கப்பட்டிருந்தன. பருத்தித்துறை யாழ்ப்பாணம் பஸ் கம்பெனியைச் சேர்ந்த ஒருபஸ் மட்டும் பொலீசாருடன் பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறை உடுப்பிட்டி வழியாக வல்லைமட்டும் சென்று பிரயாணிகள் எவரும் ஏறாததினால் பருத்தித்துறைக்கு உடனே திரும்பிவிட்டது. வேறு பஸ் போக்குவரத்து ஒன்றும் நடைபெறவில்லை. வல்வெட்டித் துறையிலும் அயல் கிராமங்களிலும் கடைகள், சந்தைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. ஆரம்ப பாடசாலைகள் ஒன்றாவது நடைபெறவில்லை. சில உயர்தர பாடசாலைகளிலும் தலைமை ஆசிரியர்களின் நேற்றைய மிரட்டலுக்குப் பயந்து 10 வீதத்துக்கும் குறைவான மாணவர்களே சென்றார்கள். மீன்பிடிக்கும் தொழிலாளர்களில் ஒருவராவது மீன்பிடிக்கச் செல்லவில்லை.

வல்வெட்டித்துறை இலவச வாசிகசாலையைப் பூட்டும்விடயமாக ஹர்த்தால் ஆதரவாளர்களுக்கும், ஹர்த்தாலை எதிர்க்கும் கம்யூனிஸ்ட் அனுதாபமுடைய வாசிகசாலைத் தலைவர் நிர்வாகிகளுக்குமிடையே சிறு சண்டை நடைபெற்றதில் பத்திரிகைகள் கிழிக்கப்பட்டன. கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. சற்றில் வாசிகசாலை பூட்டப்பட்டது. இந்நிலைமையை அறிந்த கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வல்வெட்டி ஐக்கிய பண்டகசாலை மனேஜர் உடனடியாகவே பண்டகசாலையை மூடிவிட்டார்.

தெருக்களில் கடோலாக அட்டைகளும் கறுத்தக் கொடிகளும் வீடுகளில் கறுத்தக் கொடிகளும் காட்சியளிக்கின்றன. ஹர்த்தாலை எதிர்த்துக் கம்யூனிஸ்ட் கட்சிக் காரர்களின் பிரசாரம் ஒரிடத்தும் பலனளிக்கவில்லை பொதுவாக 1953-ம் ஆண்டில் நடைபெற்ற அரசி ஹர்த்தாலிலும் பிறப்பாகவே இந்த ஹர்த்தால் தொண்டாடப்பட்டதாகப் பலரும் கூறுகின்றார்கள்.

பிற்பகல் சிங்களவரைப் போன்று செய்யப்பட்ட ஒரு பொம்மையை நெஞ்சில் கத்தியினால் குத்திக்கொன்று சந்நியிலிருந்து மயானத்துக்குப் பாடையில் வைத்துச் சென்று அங்கே தகனம் செய்தார்கள்.

தென்மராட்சி:

பல இடங்களில் கொத்தலாவலை பொம்மைகள் தொங்கின

சாவகச்சேரி "சுதந்திரன்" நிருபர் கடமையாற்றிக் கொண்டிருக்கும்பொழுது கைது

சாவகச்சேரியிலுள்ள ஸ்ரீலங்கா பேக்கரியையும், இளைநோக்கியிலுள்ள மற்றொரு பேக்கரியையும் தவிர ஏனைய முஸ்லிம், சிங்கள, தமிழ்மக்களின் அனைவருடைய கடைகளும் மூடப்பட்டிருந்தன. பெரும்பான்மையான வீடுகளிலும் கடைகளிலும் கறுப்புக் கொடிகள் கம்பீரமாகப் பறந்துகொண்டிருந்தன.

இப்பகுதிகளில் ஓடிக் கொண்டிருந்த பஸ் வண்டிகளில் பிரயாணிகள் இருக்கவில்லை. சில கம்பனிகளுக்குச் சொந்தமான பஸ்வண்டிகள் நண்பகலுடனேயே நிறுத்தப்பட்டுவிட்டன. வடலங்கை ஒன்றி பஸ்கம்பனியைச் சேர்ந்த சில பஸ்களே சேவை செய்துகொண்டிருந்தாலும் அவைகள் சில வற்றில் கறுப்புக் கொடிகளை பறக்கவிடப்பட்டிருந்தன. ஏனைய கார், பைசிக்கள் முதலிய வண்டிகளில் தமிழரசுக் கொடிகளும் கறுப்புக்கொடிகளும் பறந்து கொண்டிருந்தன. தென்மராட்சி தமிழரசுவாலிப முன்னணி உபதலைவர்களில் ஒருவரான சங்கீத பூஷணம் திரு. சி. குமாரசாமி மௌனவிரதம் அனுஷ்டித்தார்.

இத்தொகுதியிலுள்ள [illegible] தமிழ்ப் பாடசாலை [illegible] மூடப்பட்டிருந்தன. சாவகச்சேரியிலுள்ள இரு கல்லூரிகளிலும் ஆசிரியர்கள் மட்டுமே சென்றிருந்தனர். மாணவ, மாணவிகள் வெகு குறைவாகவே சென்றனர். மாணவர்கள் இல்லாததினால் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அரை நேரத்துடனேயே மூடப்பட்டது.

சாவகச்சேரியிலுள்ள தேவேந்திராப் படமாளிகையிலும் இரவு படம் காண்பிக்கப்படவில்லை. பல கடைகளைத் திறப்பிப்பதிலும், படம் ஓடச் செய்வதிலும், பல பாடசாலைகளை நடைபெறச் செய்வதிலும் இப்பகுதிப் பிரதிநிதி திரு. வி. குமாரசாமி எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் ஒன்றும் பலனளிக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

மீசாலை புத்தூர் சந்தியிலும், மட்டுவிலிலும் கட்டியிருந்த கொத்தலாவலையின் பொம்மைகளை பொலீசார் அறுத்துப் பொலீஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். பொலீசார் தென்மராட்சித் தொகுதி முழுவதும் பாரா கொடுத்துக் கொண்டிருந்தனர்.

மாலை 3 மணியளவில் சாவகச்சேரியிலுள்ள இரு [illegible] சுதந்திரன் நிருபர் திரு. வி. கே. தலைவ சிங்கத்தையும் இன்னும் எம். அஸீஸ் என்னும் ஒரு முஸ்லிம் வாலிபரையும் கைது செய்தனர்.

பொலீசார் இவர்களைக் கைது செய்தது நகரம் எங்கும் காட்டுத்தீபோற் பரவியது. பல நூற்றுக் கணக்கான பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் பொதுமக்களும் பொலீஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர். அவர்களை அவ்விடத்தைவிட்டு அகற்றுவதில் பொலீசார் மிகுந்த பிரயாசப்பட்டனர்.

இவர்கள் கைது செய்யப்பட்ட செய்தி தென்மராட்

(13-ம் பக்கம் பார்க்க)

இலக்கிய விருந்து!

"மலர்"

பிப்ரவரி இதழ் விற்பனையாகிறது

அன்பு கணபதி
கி. வி. சிற்றரசு
மயில் சிவமுத்து
ஓ இரா கிருட்டினசாமி
திராவிடப்பிரகாசன்
இரா. சண்முகம்
மா. ரா. வரதக்கோவன்
வித்வான் இரா. சொக்கலிங்கம்
கோவை கு. இரத்தினம்
புலவர் 'அரசு'
இரா. சொக்கலிங்கம்
திரு. வி. க.
இரா. பார்த்திபநேசன்

இன்னும் பலர் எழுதியுள்ளனர்!

★

விலை சதம் 30.

வருட சந்தா ரூ 3-00

ஏஜண்டுகள் இல்லாத இடங்களில் ஏஜண்டுகள் தேவை.

மோகன்ஸ்,
74, டேம்வீதி, கொழும்பு]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39வயதில் 40000 நூல்களைப்படித்த அதிசய மனிதர்

நிமிடத்திற்கு 783 வார்த்தைகளை வாசிப்பார்

சொல்போர்க் பற்றி ருசிகரமான தகவல்கள்

நா. மு. குமாரசிங்கன்

உலகுக்கு ஓர் வரப்பிரசாதமாய், அறிஞர்களுக்கு ஓர் புதிராய், மக்களுக்கு ஓர் அதிசயமாக விளங்குகிறார் விற்பன்னர் அட்றியான சொல்பேர்க் (Adrian Solberg). 207 968, 849 இந்த இலக்கத்தை எந்தக் கூடிய எண்ணால் வகுக்கலாம் என்று அவரிடம் வினவினால் பத்தே வினாடிகளில் சரியான பதில் வரும்!

அவரது ஞாபகசக்தியைப் போல் உலகில் வேறெவருக்குமே கிடையாதெனத் துணிவாகக்கூறலாம். 98 பொருள்களின் 'அணுநிலை'யை அவரிடம் கேட்டால் உடனுக்குடன் பதிலிறுப்பார். எட்டு நிமிடங்களில் எகிப்து சாம்ராஜ்யத்தை அரசாண்ட 33 பரோக்களின் (Pharoah) வாழ்வில் நடந்த முக்கிய சம்பவங்களைக் கோர்வையாக (சரியான ஆண்டு, மாதம், திகதியுடன்) பிழையின்றிக் கூறுவார்!

அவருக்கு வயது 39. ஆறடி உயரம். ஸ்தூல சரீரம். எந்நேரமும் முறுவலித்த முகம். ஹாஸ்யப் பேர்வழி. அவர் காரிலேட்ட விரும்பார்—காரணம், பொன்னான நேரம் விரைவிடும் - அந்நேரத்தில் பலநூல்களை படித்துவிடலாமல்லவா? அவர் இதுவரை படித்த நூல்களின் தொகை 40,000. யாவும் சரித்திரமும், தத்துவமும் இன்னபிறவும். அவற்றில் ஒன்றுகூட நாவலில்லை!

அநேகமாக அவர் படிக்கும் நூல்கள் விஞ்ஞானம், கலைக்களஞ்சியம் முதலியவையாகவேயிருக்கும். அவர் நிமிடத்திற்குச் சராசரி 783 வார்த்தைகள் படிப்பார் என்றால் பாருங்களேன்!

அவர் அலுவலகத்திலிருந்து வரும்பொழுதே இல்லாளிடம் "இன்றைவு என்ன சாப்பாடு?" என்று வினவிக் கொண்டே வருவார். அதற்கு மனைவி ஓர் நீளமான கட்டுரையைக் கொடுத்து "இதைப் படியுங்கள். நான் சமையல் தயார் செய்கிறேன்" என்பாள். அவள் முட்டையை 'சோசருக்குள்' போடுமுன் "என்ன சாப்பாடு" என்று மறுபடியும் வந்துவிடுவார். "நான் வாசிக்கும் வேகத்தை குறைக்கவல்லவை எனது பழந்தைகளின் பழலை மொழியேதவிர வேறெதுவுமில்லை" என அடிக்கடி கூறுவார் சொல்பேர்க் அவர்கள். ஐக்கிய அமெரிக்காவில் 'கடல்படைத்துப்பாக்கிப் பாக்டரி'யில் ஓர் பொறிஞராக 4,000 பவுண்டுகள் வருடாந்த சம்பளத்தில் கடமையாற்றுகிறார்.

ஐக்கிய அமெரிக்காவில் நடாத்தப்படும் அநேக பரீட்சைகளுக்கு எழுதுவார் சொல்பர்க். 1954ம் ஆண்டு வரையும் 248 பரீட்சைகளில் சித்தியடைந்த சர்டிபிக்கட்டுக்கள் வைத்திருக்கிறார். பரீட்சையில் அவர் எடுக்கும் மார்க்குகளின் சராசரி எவ்வளவு தெரியுமா? இதுவரை நூற்றுக்கு 94லிலும் மேலாகவே எடுத்துள்ளார். அவர் 'போட்டோக்கலை'யில் 99 மார்க்குகள் பரீட்சையில் வாங்கினாலும், அவருக்குப் போட்டோ பிடிக்கத் தெரியாது. பரீட்சார்த்தமாக வாவது பிடித்துப் பார்க்கவில்லையாம் அவரைத் தேடி 600க்கும் மேலான உத்தியோகங்கள் வந்தன. காரணம் அவரது 'மூளையின் விசித்திரம்' அவருக்குப் பரீட்சைகள் எடுப்பது ஓர் பொழுதுபோக்காம்!

சொல்பேர்க் வானசாஸ்திரம், பொதுவுடமைச் சித்தாந்தம், தத்துவஞானம், எகிப்திய சரித்திரம், பரிணாம தத்துவம் முதலிய தலையங்கங்களில் சொற்பெருக்காற்றும் காலங்களில் தான் அவரின் வாழ்க்கையே யாற்றியமைக்கும்படியான சம்பவம் நேரிட்டது — அது தான் காதல். அவருடைய காதலுக்கு எதிர்ப்புச் சக்திகள் உருவாகவில்லை. எளிதில் காதல் திருமணமாக மலர்ந்தது.

இவரின் காதல் இவ்வாறு தான் சம்பவித்தது. சொல்பேர்கின் பேச்சில் தன்னையே பறிகொடுத்திருந்தாள் ஜோன் கொச்சனக். இவரது விரிவுரைகளுக்குத் தவறுதவறாது கடைசிவரை பொறுமையுடன் இருந்து கேட்கும் ஜீவன் இவள் ஒருவள்தான். இவளுக்குப் பல சந்தேகங்கள் உதிக்கும். நிவர்த்திக்க சொல்பேர்க்கை நாடுவாள்.

ஒரு நாள் தத்துவக்களஞ்சியத்தையே அவளுக்கு இரவலாகக் கொடுத்தார். அவரி அதிர்ஷ்டமோ என்னவோ அது திரும்பிவரவில்லை. ஆனால் அந்த நூல் அவருக்கு அடிக்கடி தேவைப்பட்டது. நூலைக் கேட்க அவளை நாடினார். இப்சம்பவங்கள் காதலுக்குவித்திட்டது நூல்கள் நீர்ப்பாய்ச்சி 'காதல் செடி'யை வளர்த்து, 24 நாட்களுக்குப் பின்பு 'மண'மாக பழுத்துக் குலுங்கியது!

திருமணம் நடந்த நாளன்று 'தேன்மதி'களிக்க எங்கு செல்வோமென்ற பிரச்னையே இருவரிடையேயும் கிளர்ந்தது. அதற்கு சொல்பேர்க், "ஏன் பாரிஸ் மியூடா செல்வோமே. இது 360 தீவுகளைக் கொண்டது, 21 சதுரமைல் விஸ்தீரணம். இது முதலில் 1610ம் ஆண்டு யூவான் டி பெர்மியூடஸ் ஸால் கண்டுபிடிக்கப்பட்டது....." என்று அவள் நிறுத்தச் சொல்லும்வரை அதைப்பற்றிய விபரங்களை அடுக்கிக்கொண்டேபோனார். இச்சம்பவத்தை சொல்பேர்க் தனது பேச்சுக்களிலும், நண்பர்களிடமும் அடிக்கடி சொல்லிச் சிரிப்பார்!

"எனக்குப் பிடிக்காதவை நாவல்கள் அவற்றை நான் படிப்பதில்லை. படித்தால் சலனம் இருக்காது. வாசிப்பவை எனக்கு நிம்மதியிருக்காது நான் படித்த ஒரே ஒரு நாவல் "ரோசி ஒவ்ரேடி தனது கனவும் படலைஎப் படிக் கண்டாள்" என்ற நீளமான தலைப்புள்ள நீளமான நாவல். அதே எனது நாவல் வாசிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தது" என்கிறார் சொல்பேர்க்!

எங்களுக்கெல்லாம் நண்பர்களுடைய ஒன்றிரண்டு டெலிபோன் நம்பர்களே நினைவு வைத்திருப்பதென்பதே முடிவதில்லை. ஆனால் இந்த அதிசயமனிதர் சொல்பேர்க்கோ, தனது நண்பர்கள், அறிமுகமானவர்கள், பேஞ்சு சிநேகிதர்கள் பல பிரபலஸ்தர்களின் முதலியவர்களின் டெலிபோன் நம்பர்களைத் தலைகீழ்ப் பாடம்!

சொல்பேர்க்குக்கு உலகிலுள்ள எல்லா நாடுகளின் தலைநகரமும் மனப்பாடம். பைபிளிலுள்ள கதைகளையெல்லாம் வரிசைக்கிரமமாகச் சொல்லுவார். அணுத்தொடங்கி பரமாண்டம்வரை விபரங்கள் தெரியும்!

ஆனால் இந்த "ஞாபகசக்தி" மன்னருக்கு, சில பிரபல பேச்சாளர்களுக்கு பேசும்பொழுது, சில "கரடு முரடான" வார்த்தைகளை 'கொன்னே' கட்டுவது போல், சில விடயங்களில் தடுமாறுவார். கனடாவைப் பற்றிய விபரங்களை அவர் மனதில் தரிப்பதில்லை.

கனடாவின் பிரதம மந்திரியாரென அவரிடம் வினவினால் 'ஸ்டூபன் லோறன்ட்' என பிழையாக நவிலுவார். கனடாவிலே பத்து மாகாணங்களையும் சரியாகச் சொல்வதே தெரியாது. நியூபவுண்ட்லண்ட் பற்றிய விபரங்களோ இம்மியும் பிசகாமல் சொல்லுவார். ஆனால் "நோவியாஸ் கொட்டியா" வை "கேட்பிறிட்டன் தீவு" என்று சொல்லுவார்!

உலகப் பிரசித்த "நாயகரா அருவி" அமெரிக்காவிலிருந்தும் அவரது உள்ளம் கவர்ந்தது. "நயேரட் பெயர்வாவி" இது 1,200 சதுரமைல்கள் விஸ்தீரணமும் 165 அடி ஆழமும் கொண்டதென அடிக்கடி தன் நண்பர்களிடம் பிரஸ்தாபிப்பார்!

அவருக்கு ஒரே ஒரு கவலையுண்டு. என்னதெரியுமா? ஆராய்ச்சியாளர்கள் 'பவிஸ்தீவின்' விஸ்தீரணத்தை இன்னும் சரியாகக் கண்டுபிடிக்கவில்லையாம். ஒருவர் 195 000 சதுரமைல்கள் என்றும் மற்றவர் 216 000 மைல்களெனவும் கூறுகின்றனர். தனக்கு அதன் சரியான விஸ்தீரணம் தேவைப்படுகிறதாம்!

எண்ணிறந்த நூல்களையும், அறிவுக்களஞ்சியங்களையும் படித்து அவற்றை ஞாபகம் வைத்திருக்கும் இந்த விற்பன்னர் ஒரே ஒரு விடயத்தில் ஞாபகமறதியாக இருப்பார். "அவர் காரியாலயம் செல்லும்பொழுது இன்று தேவையான சாமான்களின் பட்டியல் கொடுத்து அவற்றை வாங்கிவரச் சொன்னால் அத்தப் பணத்திற்கு நூல்கள் வாங்கிக் கொண்டு இவற்றை மறந்து விட்டு வருவார்" என்கிறார் திருமதி சொல்பேர்க். இவை எவற்றையும் படிக்கும் பொழுது "இதுவுமொரு விநோதப் பிரகிருதி" என்று விழிப்பதைத் தவிர நம்மால் வேறென்ன சொல்ல முடியும்?

மாதர் பகுதி:

எங்களுக்குச் சம அந்தஸ்து வேண்டாம்

ஆண்களோடு சரிநிகர் சமானம் பெண்களுக்கு அழிவையே தேடித்தரும்

(திருமதி அம்பி. பாக்கியநாதன்)

"நாணமும் அச்சமும் இந்த நாய்களுக்கு வேண்டுமாம்" என்று கொதித்தான் பாரதி. "ஆணுக்குப் பெண் இங்கு இளைப்பில்லைக் காணீர்" என்று மார் தட்டி 'ஆணும் பெண்ணும் சரி' எனக் கொள்வதால் இந்த வையம்தழைக்குமாம்" என்று பெண் விடுதலைக் கும்மி பாடினான் அந்த புத்துலகக் கவிஞன். அவனது புரட்சிக் கருத்துக்கள் தமிழகத்தின் சிந்தனை ஓட்டத்தையே திருப்பின.

ஆனால் இதோ "எங்களுக்கு சம அந்தஸ்து வேண்டாம்" என்று வாதிக்கிறார் திருமதி அம்பி பாக்கியநாதன். புதுமையின் பேரால் சில நவீன நாரீமணிகள் நடந்து கொள்ளும் விதத்திலிருந்து தனது வாதத்திற்கு ஆதாரம் தேடுகிறார் திருமதி அம்பியின் கருத்துக்கள் "கிருதயுகக்" கண்ணோட்டத்திற்கு மாறுனவை—எதிரிடையானவை. என்றாலும் அவர் எழுப்பும் பிரச்னைகளுக்கு மாதரினம் நேர்மையான பதில் தரக் கடமைப்பட்டுள்ளது. புதுமைப் பெண்ணின் இலட்சிய வாழ்வை வரையறுத்து—நவீன நாகரீகத்தின் நடப்பை தனிமைப்படுத்த வேண்டும். இந்த பொறுப்பை சகோதரிகள் செய்வார்களாக.

நான்கு விசேட குணங்கள் அமையப் பெற்றவள்தான் பெண். அந்த அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய நான்கு குணநியமங்களில் ஒன்றுதானும் இல்லாமல் போகும் சமயத்தில் பெண்மைக்கு இழுக்கு வந்துவிடுகிறது. இந்த நிலையில் சமூகத்தில் ஆண்களோடு பெண்களும் தோளோடுதோள் நின்று சரிநிகர் சமானமாக வாழவேண்டுமென்று எண்ணுவதோ, அன்றி கூக்குரலிடுவதோ வீண் அழிவைத் தேடிக் கொள்வதற்கு முயற்சிப்பதேயாகும்.

ஆணின் மனைவி என்ற பதத்தில் ஆணுக்கு அளிக்கப்பட வேண்டிய மரியாதையும் மதிப்பும், குடும்பவாழ்வில் பெண்களுக்கு என்றுமே அமைத்திருத்தல் வேண்டும். அதேபோன்று அண்ணன், தங்கை, அல்லது தம்பி, அக்காள் என்பவர்களுக்கிடையிலும் ஆண்களோடு பெண்கள் முரண்டுக்கு நில்லாமல் ஒதுங்கி அடக்கமாக நடந்து வாழ்வு நிலையில் பெண்களின் பெருமையை நிலைநாட்டுதல் வேண்டும். குடும்ப ஒழுங்கு குலைந்து போவதற்கும், அது உருப்படியாகச் சீரழிவதற்கும் அந்தக் குடும்பத்திலுள்ள பெண்களே காரணமாக இருப்பார்கள். இந்த நிலையில் சம அந்தஸ்து அழிவையே தேடித்தரும்.

பிறவியிலேயே பெண்கள் ஆண்களைவிட பலதுறைகளிலும் குறைவுபட்டவர்களென்பதை நாம் மனமார ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். தொழில் துறைகளென்றுஎன்ன, வேறு முயற்சிகளென்று என்ன பெண்கள் ஆண்களைப் போன்று நடந்து கொள்ளுவது அசாதியமாகும். கல்வி முன்னேற்றம், விஞ்ஞான வளர்ச்சி இவைகளைக் காரணமாகக் காட்டி, மாதர் சங்கங்களையும், பெண்கள் இயக்கங்களையும் ஸ்தாபித்து புரட்சி செய்யும் தோரணையில் எங்களுக்கு ஆண்களோடு சம அந்தஸ்து தரவேண்டு பெண்கள் போட்டுக் சல் போடுவது நமது பாட்டுக்கு

முயற்சி-இது எமக்கு வேண்டவே வேண்டாம்.

மேலும், பெண்கள், ஸ்பணி, தையல், சமையல் கலைகளில் தம்மைப் போதிய அளவு திறமை சாலிகளாக்கி அந்த வேலைகளில் முன்னேற்றமடைவதை விட்டு பொலீஸ் உத்தியோகத்திலும் வேறுபாதைகளிலும் ஆண்களோடு போட்டியிட்டு நிற்பது வெட்கக் கேடு. உதாரணமாக ஒரு பெண் பொலீசை எடுத்து பாருங்கள் எவ்வளவுதான், அவள் தன்னை உடைகளில் மூலம் பொலீஸ் உத்தியோகத்தராக அமைத்துக் கொண்டாலும், அவள் எடுத்து வைக்கும் ஒரு அடியிலேயே அவளின் பெண்மையும், பதுமைத் தன்மையும் புலப்படுவிடும் என்றால், பெண்கள் உத்தியோகம் பார்த்தல் கூடாதென நான் கூறவரவில்லை. பெண்களின் உடல் நிலைக்கும், கட்டுப்பட்டவாழ்வு முறைக்கும் ஒத்ததாக அமைதியான கலை சம்பந்தப்பட்ட வேலைகள் மட்டுமே பெண்களுக்கு உகந்தது.

தாலாட்டி, பாலூட்டி பசும்தாயைவளர்ப்பு அந்தவேலைக்கு வேறொரு வேலைக்காரப் பெண்ணை அமர்த்திவிட்டு, மற்றை போல வெளியே சென்று வேறுவேலைகளில் ஈடுபடும் பெண்கள், காரணம் கேட்கப்படும்போது 'ஆண்களோடு சரிநிகர் சமானம் எங்களுக்குமுண்டு' என்று பதிலிறுத்தால் அதைவிட அவமானம் பெண்குலத்துக்கு வேறென்ன இருக்கிறது?

கல்வியிலேயும், அறிவிலும் சில பெண்கள் ஆணைவிட அசகாய சூரிகளாக இருப்பார்கள். அந்தக்காரணத்தைக்காக ஆணை இழிவு படுத்தி திப்பேசவோ, பணிவுபடுத்தி நடத்தவோ முயற்சித்தல் கூடாது. ஆண் செய்வதை யெல்லாம் அப்படியே நாமும் செய்யவேண்டுமென்று நினைத்து ஐம்பதுக்கைம்பது கேட்டால் அது அர்த்தமற்ற கோரிக்கை.

இன்று நாட்டையாளும் ராணியாகவுள்ளவிஸபெத் தன் கணவனுக்கு எவ்வளவு அடக்கமும், ஒழுக்கமும் உள்ளவராக இருக்கிறார். ஆனால் ராஜ்ய பாரத்தை நிர்வகிக்கும் பொழுது மட்டும்தான் அவர் மகாராணி மற்ற நிலையில் அவளோர் பெண்ணல்லவா?

ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமானமாக வாழவேண்டுமென்பது, குடும்பக் கடமையை ஏற்று நடத்தும் பெண்கள் மறுப்பதையே குறிக்கும். பெண்கள் படித்து விட்டால் அடுப்பூதும் வேலையில் ஈடுபடக் கூடாதென்று ஒரு தப்பான அபிப்பிராயம் பெண்களிடம் தலைதூக்கிறது. இவையெல்லாம் ஆண்களோடு சம அந்தஸ்து வேண்டுமென்று அறிவற்ற கோரிக்கை கிளப்பப்பட்ட பின்னர்தான் தலை தூக்கியுள்ளது.

அத்துடன் இன்றைய கலாரிமாணவிகள் விளையாட்டுப்பந்தயங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் முறை ஒழிக்கவேண்டும். தமிழ் பண்புக்கும், கலாசாரத்துக்கும் ஒவ்வாத முறையில் பெண்குழந்தைகள் ஒப்டப்பந்தயங்களிலும் நீச, உயரப் பாய்தல்களிலும் பங்கு கொள்ளுதல் முற்றும் பொருந்தாத தொன்றாகும். பெண்மை ஒழிக்கப்படும் நிலையில் பகுத்தன்மை பொருந்திய உடல் நிலைக்கு பெண்களை தம்மை விளையாட்டுப்பந்தயங்களில் ஈடுபடுத்திக்கொள்வது இன்

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியக் கட்டுரை:

இலக்கியவானில் இதய பவனி

(எஸ். வி. எஸ். செல்வநாயகம்)

தமிழ் நெஞ்சத் சோலையில் உலாவினேன்: இயல் கடலையும் இசை ஆற்றையும் தாண்டினேன். அங்கே பேரொளி கண்டேன். பெருந்திறல் கண்டேன், இன்பமே கண்டேன். இறவினையைக் கண்டேன். தமிழ் அணங்கின் திருவுரு கண்டேன். என் வயம் இழந்தேன்:

இசை ஆறு கணீர் கணீர் என்னும் கன்னிய ஒலியுடன் ஒடுகிறுள்—இல்லை, ஆடுகிறுள், ஆடிப் பாடுகிறுள். அதனுள் முழுகினேன் நான். அதன் மங்கல ஒலியில் தமிழ் ஒலி கேட்டது: கவி ஒலி ஒன்றது. பாரதியின் புது மெலிக்க பாபண் இசைத்தது. "வந்தே மாதரம் என்போம், எங்கள் மானிலத் தாயை வணங்குதுமென்போம்" என்ற சீர் அடியை இக்கடலின் ஒவ்வொரு அலையும் தலைசாய்த்து, கைகூப்பி ஒலித்தது. "பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள் பாரத நாடு" என்று தென்றல் காற்றில் மிதந்தோடிவந்த அலைகள் எதிர் ஒலி செய்தன. "மன்னும் இமயமலை எங்கள் மலையே" என்ற கம்பீரமான ஓர் அலை கணீர் எனக் கூறிக் கடலில் அகன்றது. "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்று ஓர் இலை பெண் அலைகள்கைகோர்த்து குமிழ்நடனம் புரிந்தன.

இதனிடையே தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களின் தேய்ந்த தோற்றம் இவ்வாறிணிடையே தோன்றியது. "மலரும் மாலையும்" அணிந்து கொண்டு தரும் பெண மெலிந்த தேகத்துடனும் துலங்கிடும் குளிர்ந்த பார்வையுடனும், கிழப்பருவத் தோற்றத்துடனும் காட்சி தந்தார் அவர். "மலரும் மாலையும்" அணிந்து கொண்டு நிற்கிறுயே! உனக்கா இவ்வளவு கிழப்பருவம்!" என்று உசாவினேன். "தேவி"யிடம் இருந்த 'மலரும் மாலையும்' கழன்று ஆற்றில் மிதந்து, என்னிடம் வந்தது; கடிதில்பெற்று அணிந்து கொண்டேன். அதனுள்ளே "திருவள்ளுவர்" காட்சி தந்தார். "கம்பர்" கவி செய்தார்; 'ஔவை' அமுதம் சமைத்தார்; 'பாரதியும் பட்டிக்காட்டானும்' வாகவமாய் பேசிக்கொண்டிருந்தார்கள்; 'வெண்ணிலா' பண்ணிசை பாடிற்று; 'குறிஞ்சி' ஒன்று ஏதேதோ புலம்பிக் கொண்டிருந்தது; "பகலும் கன்றும்" மூறையே முத்தம் கொடுக்க, முட்டிக் குடித்தது. எலி ஒன்று முட்ட உண்டு நிட்டமாய் இறந்தது; அன்னரது பரம்பொருள் நிலைகோட்டும் பரந்த முகம் "ஆசிய ஜோதி"யாகப் பரிணமித்தது. அங்கே புத்தரின் புனிதவாடைவீசிற்று. என் உளம் அதில் லயித்தது:

ஆற்றின் கறுப்பாறைவிளிம்பில் நாமக்கல் கவிஞர் தோன்றினர். அவரில் நிறைந்து மூன்று கதிரொளிகள் பரந்தன. ஒன்றில் "சங்கொலி" கேட்டது. உள்ளே 'காவேரி' லட்சுமி ஆடினுள்; 'காந்தி' மதி எனத் தோன்றினர்; கடவுளர்கள் தத்தம் தன்மைபற்றிப் பான்மையாகப் பேசினர்கள்; மற்றக் கதிரில் தேன்வாடை கான்றது; தமிழ்மணம் வீசிற்று; அந்தத் 'தமிழ்தேனை' அள்ளிப் பருகினேன்; நூறுண்டு பசியாப் பான்மை பூண்டேன். மற்றக் கதிரொளியில் 'தமிழன் இதயம்' தெரிந்தது. அதை உற்று நோக்கினேன். "தமிழ்தாய் நெஞ்சொடு இருக்கினுள்" "உத்தமனி காந்தி" ஒளிவிசி நின்றுன். தமிழருக்கு "ஒரு மருந்து" ஆக்கப்பட்டிருந்தது. 'சுதந்திரக் கொடி' பறந்தது! பெண்கள் "கதாதாரகும்மி" ஆடினர்; பாடினர்: "தமிழ் இசை" உலகெலாம் பரந்தது "இலக்கிய இன்பம்" தேனிலும் இனித்தது.

மச்சங்கள் போன்ற இசை ஆற்றில் வாலகமாய் இறுதுரம் நீங்கினேன். பாரதி "வீரமாநகரா?" என்று வியந் தேன். இன்னும் நெடிது சென்றேன். "திருக்காவலூர்க் கோவில்" தென்பட்டது. அங்கே ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் 'திருவள்ளுவர் நூல் நயம்' 'சிலப்பதிகார விளக்கம்' 'கம்பன் கவி இன்பம்' முதலியன பற்றிப் பேருரைகள் செய்தார்கள், ஈற்றில் திரண்டிருந்த மக்களுக்கு உற்சாகம் ஊட்டும் பொருட்டு "கம்பர் கவிதைக் காட்சிகள்" காட்டப்பட்டது. திரளாக மக்கள் குவிந்திருந்தனர்: ஆடினர்; பாடினர்; மகிழ்ந்தனர். அன்னுரை மேலும் பகிழ்விக்கும் பொருட்டு "தமிழ் விருந்து" பகிர்ந்து அளிக்கப்பட்டது: ஆ! இன்னுரை என்னவளவு "தமிழ் இன்பம்"

இக்கடல் அலைகளினிடையே அரசியல் வாடை வீசிற்று: அரசியல் வாடையா? இது யாங்ஙனம் இயலும் என வியந்தேன். "அரசியல் அலைகள்" தானே என எண்ணினேன் அதனிடையே ஓர் 'மலர்விழி' யாள் என் முன்னே தோன்றினுள்: 'தமிழ் நெஞ்சமும்' 'பாவை' உள்ளமும் ஒருங்கே அமைந்தவள் அவள். 'கண்ணகி' 'மாதவி' முதலியோரின் தெவ்விய ஒளி இவள் முகத்தில் வீசிற்று. 'கி. பி. 2000' இல் வசிக்கவேண்டியவள் எங்ஙனம் இங்கு வந்தாள் என்று வியந்தேன். "நீ யார்?" என்றேன். "நான் தமிழ்த்தாய்" என்றுள். "தமிழ்த்தாயா? நீ இளமையாய் இருக்கிறுயே!" என்றேன். "நான் என்றும் இளமையானவள்" என்றுள். "தமிழ்த்தாய் என்றும் இளமையானவளா?" என்றேன். "ஆம்" என்றுள். "தமிழ்த்தாய் என்றும் இளமையானவளாயின் நீ தமிழ்த்தாயல்ல" என்றேன். "நான் தமிழ்த்தாயே" என்றுள். "நீ தமிழ்த்தாயாயின் நான் தமிழ்த்தாயின் மகனல்ல" என்றேன். "நான் தமிழ்த்தாயின் மகனே" என்றுள். "நான் தமிழ்த்தாயின் மகன

சுதந்திரன்
SUTANTIRAN

1956 பெப்ரவரி மாதம் 26ந் திகதி

194 ஏ, தர்டீ தெரு, கொழும்பு போன்: 3411 த: பெ.1183

மழைக்காளான் சங்கங்கள்

மழைக்காலம் ஆரம்பித்ததும் காளான் என்ற ஒரு பூண்டு உளுத்துப்போன குப்பை கூழங்கள் நிறைந்த இடங்களில் முளைப்பதை நேயர்கள் அறிவார்கள்; பல ஹீனமான சொத்தைப் பொருளினுல் ஆக்கப்பட்ட இப் பூண்டு மழைக்காலம்போய் வெய்யில் காலம் வந்ததும் உளர்ந்து மடிந்து விடுவதைக் காணலாம்;

தேர்தல் காலம் வரும்போதும் மழைக்காளான்கள் மாதிரி பற்பல சங்கங்களும் சபைகளும் தோன்றுவதுண்டு. முன்னணி, மகாசபை, மாமன்றம் என்ற பெயர்களுக்கு தமிழில் பஞ்சமுமில்லை, அத்தகைய பெயர்களைச் சூட்டிக் கொள்வதற்கு நாட்டில் தடைகளுமில்லையாகையால் அலங்கார நாமதேயங்களோடு—ஏமாந்த மக்களை மயக்கக் கூடிய மோகனப் பெயர்களோடு—இந்த மழைக் காளான்கள் குடைவிரிப்பதுண்டு;

தேர்தல் காலங்களில் தலைதூக்கும் இந்த மழைக் காளான் சங்கங்களை சோடாப் புட்டிச் சங்கங்கள் என்றும் சொல்லலாம்; சோடாப்புட்டி திறக்கப்படும் போது "புஸ்" என்று சீறிக்கொண்டு கிளம்பும். ஆனல் மறுகணம் எல்லாம் அடங்கி அமைதிகண்டுவிடும்; தேர்தல் காலத்தில் ஆரம்பிக்கப்படும் சங்கங்களும், சபைகளும், மகாசபைகளும், மாமன்றங்களும், ஐக்கிய முன்னணிகளும், முதியோர் சபைகளும் ஆரம்பத்தில் பெரிய முழக்கத்தோடு சீறிக்கொண்டு ஆரம்பிப்பதுதான் வழக்கம்; "எங்கள் நோக்கம் வானத்தை வில்லாய் வளைப்பது, மணலைக் கயிறாய்த் திரிப்பது, தமிழ் மக்கள் அனைவரையும் ஒரு குடைக்கீழ் கொண்டுவருவது" என்று சொல்லிக் கொண்டுதான் ஆரம்பிக்கின்றன; ஆனல் அடுத்த கணம்.....!

இப்படியாக தேர்தல் காலங்களில் மட்டும் முளைத்தெழும்பி, ஆரம்ப சூரத்தனம் காட்ட முற்படும் சங்கங்கள் மீதும், அத்தகைய சங்கங்களைக் கூட்டும் தலைவர்கள்மீதும் தமிழ்ப் பொதுமக்கள் ஒருபோதும் நம்பிக்கை வைத்தல் கூடாது. தமிழ் மக்களை ஆட்டிப் படைக்கும் சூத்திரதாரிகளாகத் தங்களை ஆக்கிக் கொள்ளவிரும்பும் இந்தப் பிரகிருதிகளுக்கு உண்மையில் தமிழ் மக்கள் மீதும் அவர்களுடைய நலவுரிமைகள்மீதும் அக்கறையிருந்திருந்தால் அவர்கள் இத்தகைய சங்க(ட)ங்களை ஏற்படுத்துவதற்கு ஒரு பொதுத் தேர்தல் வரும்வரை காத்திருக்க வேண்டியதில்லை. எப்போதோ தமிழ் மக்களை ஒன்று சேர்த்து அவர்கள் நலவுரிமைக்காகப் பாடுபட்டிருக்கலாம். தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்திற்கும், தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் இடங்களுக்கும் நீண்டகாலத் தொட்டே ஆபத்து உருவெடுத்து வந்திருக்கிறது. அப்போதெல்லாம் "கட்சிக் கொள்கைகளற்ற மாபெரும் ஐதாபனம்" ஒன்றைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற பரோபகார நற்சிந்தனை இவர்களுக்கு உதிக்காததேனே?

புதிதாக ஆரம்பமாகும் எந்த ஒரு ஸ்தாபனத்தினாலும் தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கைவைக்க வேண்டுமானல் முதலில் அந்த ஸ்தாபனம் தேர்தலை முன்னிறுத்தி ஆரம்பிக்கப்பட்டதல்ல என்பதை ஆய்ந்து அறிந்து கொள்ளவேண்டும். இரண்டாவதாக அந்த ஸ்தாபனம் தங்களுக்கு வேண்டியவர்களைப் பாராளுமன்றத்தில் புகுத்திவிடுவதற்காக ஐக்கியம், தேசியம் என்ற வேஷங்களைப்போட்டு மக்களை ஏமாற்றவில்லை என்பதைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். மூன்றுவதாக ஐக்கியம், தேசியம், முதியோர்சபை என்ற மயக்குவார்த்தைத் திரைக்குப் பின்னல் யாரோ ஒரு அரசியல் தந்திரியின் கருக்குக் கயிறு இணைக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதை யூகித்து அறிந்து கொள்ளவேண்டும். இந்த மூன்று உண்மைகளையும் ஆராய்ந்தபின் பிரஸ்தாப ஸ்தாபனம் பிரகடனப்படுத்தும் நோக்கங்களையும், கொள்கைகளையும் ஸ்திரமாக அனுஷ்டிக்கிறதா என்பதை சில வருடங்கள் அவகாசம் கொடுத்துப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும். இவ்வளவையும் முறைப்படி செய்யாமல் உணர்ச்சிவசப்பட்டு ஸ்தாபனத்தின் பெயரில் மயங்கினல் தமிழ்ப்பேசும் மக்கள் தங்களைத் தாங்களே ஒரு பயங்கரமான பொறிக்குள் சிக்கவைத்துக் கொண்டவர்களாவார்கள்;

மட்டக்களப்பில் தமிழ்ப் பேசும் மக்கள் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் ஒரு ஸ்தாபனம் அண்மையில் தோன்றியதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாயின. இந்த ஸ்தாபனம் நல்லெண்ணத்தோடு, நல்ல நோக்கத்தோடு உதயமாகியிருக்கலாம். இதை நாம் ஆட்சேபிக்கவில்லை; ஆயினும் நாம் மேற்கூறிய பரிசோதனைகளைக்கொண்டு இந்த ஸ்தாபனத்தையும் உரைபோட்டுப் பார்த்து காலத்தால் தீர்மானிக்க வேண்டியது அங்கு வாழும் தமிழ்ப் பேசும் மக்கள் கடனுகும்.

நாம் இத்தலையங்கத்தைத் தீட்டும் சமயத்தில் யாழ்ப்பாணத்தில், அகில இலங்கைத் தமிழ் மகாசபை என்னும் பெயரில் கட்சிக் கொள்கையற்ற மாபெரும் ஸ்தாபனம் ஒன்றை ஆரம்பிக்கும் நோக்கமாக ஒரு பொதுக் கூட்டம் நடைபெறவிருக்கிறது என்று பத்திரிகை மூலமாகத் தெரிகிறது. இந்த ஸ்தாபனமும் மேற்படி பரிசோதனைகளுக்குட்பட்டேயாக வேண்டும்.

இந்த ஸ்தாபனப் பொதுக் கூட்டத்திற்கு அட்வகேட் திரு எம். பாலசுந்தரம் தலைமைவகிப்பார் என்று தெரிகிறது. கட்சிக் கொள்கையற்ற கூட்டத்திற்கு திரு பாலசுந்தரம் எப்படித் தலைமைதாங்க முடியும் என்பது நமக்குத் தெளிவாகவில்லை. திரு பாலசுந்தரம் முன் ஒருகால் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் விரோதியாக விளங்கியவர். ஆனல் சமீபகாலத்தில் அவருக்கும், தமிழ் காங்கிரஸிற்கும் தாளைக மாறி பல தமிழ்க் காங்கிரஸ் பொதுக் கூட்டங்களில் பங்குபற்றியவர் என்பது பகிரங்கமான விஷயம். இத்தகையவர் தலைமைதாங்கும் கூட்டம் கட்சிக் கொள்கையற்றதாக விளங்க முடியுமா?

அடுத்தபடியாக இந்த மகாசபையின் முதல் நோக்கம் ஒவ்வொரு தொகுதியிலும் [illegible] ஒழுங்கு செய்து பாராளுமன்றத்துக்குப் போட்டியின்றி தெரிவு செய்வதாகும். அனுப்ப ஒரு அபேட்சகரைத் தெரிவு செய்வதாகவோ. அடுத்தபடியாகத் தான் மக்களின் கபீட்சத்திற்குப் பணியாற்றப்போகிறார்களாம்!

முதற்கண் தேர்தலை முன்னிறுத்தியே இம் மகாசபை ஆரம்பிக்கப்படுவதால் நமது ஐதாந்தப்படி இதுவும் ஒரு மழைக்காளான்தானே என்ற எண்ணம் தோன்றுகிறது.

"சமஅந்தஸ்து அல்லது தமிழ் இராஜ்யமே இதன் கோரிக்கையாகவிருக்கும்" என்று மேற்படி பத்திரிகைச் செய்தி இந்த மகாசபையின் நோக்கத்தை விளக்குகிறது. இந்நோக்கம் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம், திரு வி. குமாரசாமி கோஷ்டியின் நோக்கமாக இருந்து வருவதைத் தமிழ்ப் பேசும் மக்கள் அறிவார்கள். ஒரு சபையின் நோக்கத்தை நிர்ணயிக்க வேண்டியது அந்த சபையில் கூடும் மக்களுடைய உரிமையாகும். சபை கூடுமுன்னரே, சங்கம் உருவாகு முன்னரே, மகாசபை ஆரம்பிக்கப்படு முன்னரே சபையின் நோக்கம் தனித் தமிழ் நாடு கோருவது என்று இருக்குமானல் இந்த ஸ்தாபனத்தில் கட்சிக் கொள்கைகள் அற்ற தன்மை எப்படியிருக்கிறது என்பதைத் தமிழ் மக்கள் தீர்மானித்துக்கொள்ள வேண்டியதுதான்;

இப்படிப்பட்ட மழைக்காளான் சங்கங்களினுல் தமிழ்ப் பேசும் மக்களுக்கு எதுவிதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை என்பதை நாம் வற்புறுத்திக் கூற முடியும். தமிழ் மக்கள் இந்த சோடாப் புட்டித் தேர்தல் சங்கங்களில் கருத்தையும் காலத்தையும் செலவிட்டு அவம்போக்காமல் கடந்த பல ஆண்டுகளாக நிலையாக நின்று தமிழ் உரிமைப் போராட்டம் நடத்தி வரும் கட்சி எதுவென்று கண்டறிந்து அதோடு சேர்ந்து உழைத்து தமிழ் மொழியையும், தமிழ்ப் பேசும் இனத்தையும் காப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களனிப் படுகொலை!



திருகோணமலையில் திக்கெட்டும் ஹர்த்தால்

தமிழரசுக்கட்சி தன்மானம் காத்தது

திருகோணமலை சனி 18-2-56 பிற்பகல் பெரிய மைதானத்தில் திரு இராஜவரோதயம் தலைமையில் நடைபெற்ற தமிழ் அரசுக் கட்சி கூட்டத்திற்கு மக்கள் வெள்ளம்போல் கூடியிருந்தனர். இதுபோன்ற ஜனத்திரள், இங்கு நடந்த வேறு எந்தக் கூட்டத்திற்கும் இதுவரை சமூகம் அளித்ததில்லை என்று பேசும் அளவுக்கு கூடியிருந்தது. திருவாளர்கள் செல்வநாயகமும், அமிர்தலிங்கமும் காலம் கடந்தே கூட்டத்திற்கு வந்தார்கள்; அந்த ஜனத்திரளில் அவர்கள் "மோட்டாரை" விட்டிறங்கி நேராக மேடையை நோக்கி நடந்து வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது. கூட்டத்தினர் கையொலிகள்மூலம் தங்கள் அன்பையும், ஆதரவையும் தெரிவித்துக் கொண்டார்கள். இருவரும் மக்களை வணங்கியபடி வந்து மேடையில் அமர்ந்துகொண்டார்கள்; திரு செல்வநாயகம் பேசுகையில் "இலங்கையில் இனி தமிழுக்கு இடமில்லை என்றுல் தமிழ் மொழிக்கு இடமில்லை என்று மட்டும் அர்த்தமாகிவிடாது; அதைப் பேசுகின்ற தமிழ் மக்களுக்கும் இடமில்லை" என்றுதான் பொருள்" என்றுகூறி தொகொண்டுதானிருக்கிறன" என்று உணர்ச்சி ததும்ப பேசினர்; அவர் தொடர்ந்து "ஹர்த்தால்" பற்றி பேசுகையில் "தமிழ் புறக்கணிக்கப்படும் இந்த நேரத்தில் எங்கள் எதிர்ப்பை அகிம்சை முறையில் அரசாங்கத்துக்கு உணர்த்தவே இந்த "ஹர்த்தாலை" மேற்கொண்டோம்" என்று கூறினர்.

"ஹர்த்தால்" சம்பந்தமாக வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் இந்து விநியோகிக்கப்பட்டன. "ஹர்த்தால் வேண்டாம்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட ஒரு துண்டுப்பிரசுரத்தில் பல பிரமுகர்களின் பெயர்களும் காணப்பட்டன. ஆனல் "இலங்கையில் சமாதானமும் நல்வாழ்வும் எல்லா மக்களுக்கும் நல்க வேண்டுமென்றும் கடவுளை அன்று பிரார்த்திக்க வேண்டுமென எல்லோரையும் பணிந்து வேண்டிக்கொள்ளுகிறோம்" என்ற வாசகங்கள் "ஹர்த்தால் வேண்டாம்" என்ற துண்டுப்பிரசுரத்தில் காணப்படும் இறுதி வாசகங்களாகும். இது "ஹர்த்தால்" என்றுல் ஏதாவது அசம்பாவிதமான செயல்கள் நடைபெறும்; ஆகவே அது வேண்டாம். ஆனல், பிரார்த்தனை மூலம் "ஹர்த்தாலை அனுஷ்டித்துக்கொள்ளலாம்" என்ற கருத்துப்பட ஹர்த்தாலுக்கு மறைமுக ஆதரவு கொடுத்தது போல் இருந்தது.

"அரசாங்கத்தின் செவிகளைத் திறக்க, ஹர்த்தாலே சரியான முறையாகும்; தேசிய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க, மாபெரும் பொதுக் கூட்டங்களைவிட சக்திவாய்ந்த மார்க்கம் இது" இக்கருத்து 1919ம் ஆண்டு கூறப்பட்ட கருத்துக்கும் இந்தக் கருத்தைக் கூறியவர் உலகம் போற்றும் உத்தமர் காந்தி ஆவார். பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்ட எதுவாலுலும் அதற்கு உத்தமர் காந்தியரின் ஆதரவு கிடைத்திருக்க முடியாது "நூற்றுக்கு நூறு பலாத்காரம் அற்றது" என்று அவர் கருதிய காரணத்தால் தான் ஹர்த்தால் கொள்கைக்கு அவர் ஆதரவு கிடைத்திருக்கிறது. அரசினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், ஒரு இன மக்களுக்கு அதிருப்தி [illegible]

(9-ம் பக்கம் பாரீர்)

சேர் கந்தையாவின் நிலை என்ன?

★

மன்னுர்த் தொகுதிக்குப் போட்டியிடுவாரா?

★

அடுத்த வாரம்
அரசியல் கட்டுரை

கிழக்கு மாகாணத்தில் நூற்றுக்கு நூறு வீதம் ஹர்த்தால்

எங்கும் அமைதியும் கட்டுப்பாடும் நிலவியது

கிழக்கு மாகாணம் முழுவதும் ஹர்த்தால் நூற்றுக்கு நூறுவீதம் அனுஷ்டிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தின் மூலை முடுக்குகளெல்லாம் விசேஷ பொலீஸ் கோஷ்டியினர் கண்ணீர் புகையும் கையுமாகவே சோதனை போட்டு திரிந்தனர். ஆனால் குறிப்பிடத்தக்கதாகவெவ்விதமான அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை. மட்டக்களப்பு பட்டினம் உட்பட பல பகுதிகளிலுமுள்ளபெருவாரியான கடைகள் மூடப்பட்டிருந்தன. தோடு கறுப்புக் கொடிகள் உயரப் பறக்கவிடப்பட்டிருந்தது. பெருவாரியான பள்ளிக்கூடங்களில் குறிப்பிடக்கூடிய அளவிற்கு மாணவர்கள் தென்படாததோடு சில இடங்களில் பாடசாலை மாணவர்கள் கறுப்புக் கொடியும் கையுமாக ஊர்வலம் சென்றனர்.

அடுத்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்புத் தொகுதிக்கு சமஷ்டிக்கட்சி அபேட்சகராகப் போட்டியிடப்போவதாகக் கூறப்படும் மட்டக்களப்பு மாவட்ட தமிழரசு வாலிப முன்னணித் தலைவர் திரு செ. இராசதுரை தலைமையில் மட்டக்களப்பு பகிரங்க முற்றவெளியில் 50 பேர் ஒரு நாள் உபவாசம் அனுஷ்டித்தனர். திருக்கோயிலில் தமிழுக்காக தாடிவளர்ப்புஇயக்கத்தலைவர் திரு அரியநாயகத்தின் தாயார் திருமதி மேரி தலைமையில் பல பெண்களும் ஒரு நாள் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர். மட்டக்களப்புப் பகுதியில் பல போக்கு வரத்து நடைபெற்றபோதிலும் பஸ்கள் பூராவும் காலியாகவே சென்றதை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்புப் பகுதியிலுள்ள மீன் பிடிகாரர்கள் மீன் பிடிக்கச் செல்லவில்லை. இதனால் மார்க்கட்டுகள் மூட வேண்டியதாக இருந்தது. தோடு காய் கறி அரிசிவேறு சாமான்களும் இதே கதிதான். வீதிகளில் கூட பாதசாரிகளைக்காண்பது துர்லபமாகவே இருந்தது. பல இடங்கள் பிரமாண்டமான பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன.

சாய்ந்தமருதிலுள்ள இளைஞர் சங்கத்தினர் ஹர்த்தாலின் முக்கிய பங்கெடுத்தனர். அதிகாலையிலே சைக்கிளில் கறுப்புக் கொடிகளை சகிதம் ஒரு பிரமாண்டமான ஊர்வலத்தை நடத்தினர். காரைதீவு வாலிபர்கள் பகிரங்கவீதிகளில் கறுப்புக் கொடிகளை கட்டும் முயற்சியில் ஈடுபட்டு பூரணமாக வெற்றியும் பெற்றார்கள். சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பொத்துவில், வாகரை, வாகைச்சேனை, கதிர்காமம் ஆகிய இடங்களிலும் ஹர்த்தால் அமைதியான முறையில் அனுஷ்டிக்கப்பட்டது.



சமீபத்தில் மட்டக்களப்பில் நடந்த தமிழரசுக் கட்சியின் பிரமாண்டமான பொதுக் கூட்டமொன்றில் செல்வி செல்வநாயகி அமரசிங்கம் பேசிக்கொண்டிருப்பதை படத்தில் காண்க. கூட்டத்திற்கு திரு செ. இராஜதுரை தலைமைவகித்தார்.

திரிசிங்கள பெரமுனைக்குள் குத்து வெட்டு!

யு. என். பியா? சுதந்திரக் கட்சியா?

தமிழ்ப் பேசும் மக்கள் மீது இன்று அவிழ்த்துவிடப்பட்டுள்ள வகுப்பு வெறி இயக்கத்தின் ஆரம்ப சூத்திரதாரிகளான திரி சிங்கள பெரமுனையினர் இரு கோஷ்டிகளாகப் பிரிந்து ஒருவருடன் ஒருவர் முட்டி மோதி வருகிறார்கள் என்று தெரிகிறது.

யு. என். பியைப் பொறுத்து திரிசிங்கள பெரமுனை கைப்பிடிக்க வேண்டிய கொள்கையை நிர்ணயிப்பதிலேயே இந்த குத்துப்பாடு வெட்டுப்பாடு ஆரம்பித்துள்ளது என்று நம்பப்படுகிறது.

கண்டியைச் சேர்ந்த நபர்களின் தலைமையில் உள்ள திரி சிங்கள பெரமுனையின் ஒரு பகுதி யு. என். பியை ஆதரிக்கவேண்டும் என்றும், மற்றப் பகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஆதரிக்க வேண்டும் என்று அடம் பிடிப்பதாக தெரிய வருகிறது.

திரிசிங்கள பெரமுனையின் இந்த இரு கோஷ்டிகளும் இப்போது பகிரங்கமாக ஒன்றுடன் ஒன்று மோத ஆரம்பித்து விட்டன. தனித் தனி கூட்டங்கள் நடத்தி ஒன்றின் மீது ஒன்று வசை பாடி வருகின்றன.

இந்த ஸ்தாபனம் ஆரம்பிக்கப் பட்டபோதே இதை யு. என். பியின் கையாட்களது ஸ்தாபனம் என்று பல அரசியல் அவதானிகள் அம்பலப் படுத்தினார்கள். ஒரு அன்னிய நாட்டு தூதரால யம் இதற்கு அந்தரங்கமாக ஆதரவளித்து வருவதாக அவ்வப்போது வெளி வந்த செய்திகள் கூறின.

யு. என். பி எதிர்ப்புச் சக்திகளை முறியடிக்கவும், தனிச் சிங்கள வெறியை கட்டவிழ்த்து விடவும் யு. என். பி முன் கூட்டியே திட்டமிட்டு தனது கையாட்களைக் கொண்டே இந்த ஸ்தாபனத்தை ஆரம்பித்தது என்றும், இன்று தான் விரும்பிய நிலை நாட்டிலே ஏற்பட்டதால் இந்த இயக்கத்திலுள்ள யு. என். பி கையாட்களை நேரடியாகவே யு. என். பியில் சங்கமமாகிவிடலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழில் தந்திகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட சகல அலுவல்களையும் சிங்களத்திலேயே செய்யநிர்ப்பந்திக்கப்படுவர் என்பதையே இது வெளிச்சமாக்குகிறதுஎன்றும் மேலும் கருதப்படுகிறது.

இந்த நிலையில் தமிழ்ப் பேசும் மக்கள் தாங்கள் அனுப்பும் தபால்கள், மற்றும் பொது வாழ்விலும், ராஜ்ய தொடர்புகளிலும் தமிழையே நூற்றுக்கு நூறு உபயோகிக்க வேண்டும் என்றும், இதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் ஒரு முகப்பட்ட பகிஷ்கார நடவடிக்கைகளில் இறங்குவது நல்லதைன்றும் பலவட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்ப் பேசும் மக்களின் தாய் மொழியை எந்த விதத்திலும் பாதுகாத்தே தீருவார்கள் என்பதை புலனுக்கவும், தமிழ் மக்கள் தங்களின் சகல வேலைகளையும் தமிழிலே செய்வது அரசாங்கத்தின் மீது நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தவும் உதவும் என்றும் கூறப்படுகிறது.

மக்கள் கொதிப்பு!

யாழ்ப்பாணம் பெப். 21

தமிழ் மக்களைச் சூழ்ந்துள்ள இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உண்மைச் செய்திகளை மறைத்தும் திரித்தும் நடந்தது ஒன்றாயிருக்க நடக்காத செய்திகளை வெளியிட்டும் பத்திரிகா தருமத்திற்கு மாறான முறையில் தமிழ் நாட்டிலிருந்து சாபக்கேடாக வெளியாகும் கருங்காலிப் பத்திரிகைகளான தினகரனையும் தமிழ் மக்களனைவரும் ஒரேமுகமாகப் பகிஷ்கரிக்கவேண்டும் "எனும் மன்றம் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களனைவரையும் கேட்டுக் கொள்கிறது"

என்ற தீர்மானம் நல்லூர் முத்தமிழ் மன்ற பொதுக் கூட்டத்தில் நிறைவேறியது.

திருகோணமலை...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுமானால், அதனை அரசினருக்கு அறிவுறுத்தி—தங்கள் கண்டனத்தை தெரிவித்து, அரசினரை நல்வழிப்படுத்துவதற்கு பெரும் பொதுக் கூட்டங்களிலிட சகிதவாய்ந்த மார்க்கமான ஹர்த்தாலை மேற்கொள்ள வேண்டுமென்பது உத்தமனின் உள்ளக்கிடக்கை. பலாத்காரத்திற்கு உட்பட்ட முறையை எவ்வாறு ஆதரிக்கமாட்டாரோ, அதைப்போன்ற மக்களாட்சி நடைமுறைக்கு, ஹர்த்தால்முரண்பட்ட ஒன்றாக இருக்குமானால், அனைத்தும் உத்தமர் காந்தியார் ஒருகாலும் ஆதரிக்க முன்வந்திருக்கமாட்டார். எனவே அவர் ஆதரவுக்கு பாத்திரமான "ஹர்த்தாலை நாம் மேற்கொள்வது மக்களாட்சி முறைக்கு ஒத்ததேயாகும். இதன் அடிப்படையிற்தான் திருகோணமலை தமிழரசுக் கட்சியினர் வெளியிட்ட "பெப்ரவரி—20" என்ற துண்டுப்பிரசுரம் நாம் ஹர்த்தாலை அனுஷ்டிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டது.

20-2-56 அன்று தமிழ்ப் பேசும் மக்களின் கடைகளும் தொழில் நிலையங்களும் மூடிக்கிடந்தன. பல இடங்களில் கறுத்த கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. விவேகானந்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அன்று கடற்கரையில் மேற்கொள்ளவில்லை. இரண்டு பாடசாலைகள், அன்று பள்ளிக்கூடம் நடத்தவில்லை. ஏனைய பள்ளிக்கூடங்கள் நடைபெற்றபோதிலும் மாணவர்கள் போதிய அளவு இல்லை. பலர் உபவாசம் இருந்தார்கள். சம்பல் தீவைச் சேர்ந்த சுமார் 25 பேர்கள் கோஷ்டியாக விக்னேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று மாலை 5 மணிவரை உண்ணாவிரதம் இருந்து சத்தியாக்கிரகம் அனுஷ்டித்தனர்.

—சேரன்

தீவுப்பகுதி திரண்டது!

ஹர்த்தாலன்று சரவணை ஜன சமூக நிலையத்தில் இருந்து, சோல்பரி அறிக்கை வைத்த பிரேதப் பெட்டி ஒன்று ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. தீவுப் பகுதியே இதுவரை கண்டிராத அளவு பெருந் தொகை ஜனங்கள் கலந்து கொண்ட இவ்வூர்வலம் புளியங்கூடற் சந்தியை அடைந்தபோது அங்கே பெருந்திரளான சனங்கள் உற்சாகமாக வரவேற்பளித்தனர். பின்னர் அவ்வூர்வலம் வேலணை ரஸ்தா வழியாகச் சென்ற போது ஏராளமான பெண்களும் ஆண்களுமாக தமிழரசு வாழ்கவென்ற ஜெய கோஷம் செய்து வரவேற்றனர். சுமார் 5 மைல் தூரம் நடந்த இவ்வூர்வலம் வேலணைதெற்கு கடற்கரையை அடைந்து அங்கே சோல்பரி அறிக்கை தகனம் செய்யப்பட்டது. அங்கே வாலிப முன்னணித் தலைவர் திரு. எஸ். சதாசிவம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தனிச் சிங்களக் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது சம்பந்தமாக ஒரு தீர்மானத்திற்கு வருவதை அரசாங்க கட்சிஒத்திவைத்தது. களனி மகாநாடு தனிச் சிங்களத்தை ஏற்றுக் கொண்டிருப்பதால் தனிச் சிங்கக் கொடியை நாட்டின் தேசியக் கொடியாக ஏற்றுக் கொள்ளும் காலம் வந்து விட்டதென்று யு. என். பி மேலிடம் தெரிவித்துள்ளதாம்.

பொதுத் தேர்தல் முடிவதற்கு முன்னரே தனி பௌத்தம் பற்றியும் ஒரு தீர்மானத்திற்கு வருவது சம்பந்தமாக யு. என். பி. காரியக் கமிட்டி ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

கொழும்பில் ஹர்த்தால்

ஹர்த்தாலுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக அரசாங்க சேவையாளரை ஆண்டுறையதினம் ஏதும் அடையாளம் ஒன்றை அணிந்து செல்லவேண்டுமென சமத் தமிழ் சமசமாஜக் கட்சி மன்றத்தினர் கேட்டுக் கொண்டிருந்தனர்.

இதன் விளைவாக கொழும்பில் உள்ள தமிழ் பேசும் அரசாங்க சேவையாளரில் அனேகம்பேர் கறுத்த கழுத்துப் பட்டியும் கறுத்த பூக்களையும் அணிந்து காரியாலயங்களுக்குச் சென்றனர். ஒரு சிலர் காரியாலயங்களுக்குப் போகாமல் இருந்தனர். இன்னும் சிலர் உண்ணாவிரதம் இருந்தனர். இதனால் அரசாங்க சேவையிலுள்ள தமிழ்ப்பேசும் மக்கள் தமது தாய்மொழியில் எவ்வளவு பற்று வைத்திருக்கின்றார்கள் என்பதைக் காட்டிவிட்டார்கள். இது ஒரு மகத்தான வெற்றியென்றே கூறவேண்டும்.

இதைவிட சமசமாஜக் கட்சி மன்றத்தில் சேர்ந்து கொண்ட கழகங்கள் தமது பகுதிகளில் ஹர்த்தாலை அனுஷ்டித்தார்கள். கொழும்பில் உள்ள உறுப்புக் கழகத்தினர் அன்றைய தினம் உண்ணாவிரதம் இருந்ததுமின்றி கறுத்தப் பூக்களையும் அணிந்து கொண்டு கொழும்பு பூராவும் கூடிச் சென்றனர்.

மக்களின் போஷண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்திரீகள் இரத்தமின்மையால் பலவித வியாதிகளுக்கும் இரையாகி வருவதாகவும் இதற்கு உணவுச் சத்து பற்றாக்குறையே காரணம் என்றும் அறிக்கை மேலும் கூறுகிறது. சமீபகாலமாக பிறக்கும் குழந்தைகளில் பெருவாரி வளர்ச்சியுறாத நிலையில் பிறப்பதற்கு போஷாக்குக் குறைவே காரணம் என்றும் தெரிகிறது.

இத்தப் பிரச்சினை நாட்டின் பொருளாதார நிலையுடன் பிணைந்திருப்பதாகவும், பெருவாரியான பொதுமக்களுக்கு நல்ல வாழ்க்கைத் தரம் அமைத்து தராதிருக்கு மட்டும் இந்த போஷாக்குக் குறைவு சாபக்கேட்டை தீர்க்க முடியாதென்றும் கூறப்படுகிறது. ஒரு நாட்டின் உண்மையான செல்வம் அந்த நாட்டு மக்களே என்றும் மக்களின் பொதுவான சுகாதாரம் பாதிக்கப்பட்டு ஒரு வது நாட்டின் எதிர்காலத்திற்கு பேராபத்தாக முடியும் என்றும் மேலும் கூறப்படுகிறது.

'சுதந்திரன்'
சந்தா விபரம்
1--1--1956 முதல்
வருட சந்தா ரூபா 8-00
ஆறு மாத சந்தா ரூபா 4-50
விபரங்களுக்கு எழுதவும்:-
சர்குலேஷன் மானேஜர்,
"சுதந்திரன்"
194ஏ, தட்டாதெரு, கொழும்பு-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 24.

ரொக்கப் பரிசு-ரூ 100.00

முதலாவது பரிசு ரூ. 600-00 | இரண்டாவது பரிசு ரூ. 300-00
அதிகப்படியான விடைகள் அனுப்புபவருக்கு விசேஷ பரிசு ரூ. 100-00

முடிவு திகதி 14-3-56 பி. ப. 5 மணி | சரியான விடை 18-3-56ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றோர் விபரம் 25-3-56ல் பிரசுரிக்கப்படும் | பரிசு பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை 7-4-56ல் செக்மூலம் அனுப்பப்படும்

இடமிருந்து வலம்

1. இதை விட்டுக் குழப்பினால் மருத்தாலும் குழந்தைகள் அருந்திவிடும்
2. வானம்
4. இதன் பால் பிணியாளருக்கும் உகந்தது
5. காலாற மெல்ல நடத்தல்
6. இதன் காய் கறிக்குதவும்
7. பெண்களுக்கு இதன்மேல் உள்ள மோகம் அதிகம்
8. திருச்செந்தூர்
9. பாரதத்தின் பிரதமர்
10. இதற்குப்தசம் காதில் உரைத்தாலும் அவுலக் குரல் போலாதென்பது பழமொழி
11. பலம்
13. இலக்குமி
14. எத்தச் சிறிய காரியத்திற்கும் இது படுபவர்களும் உண்டு
16. குற்றம்
17. இது வேதனை தரும்
18. அழகான பெண்கள் இதனால் செய்த சிலைலைப்போன்றவர்கள் என்று புலவர்கள் வர்ணிப்பார்கள்
20. மதுரை
21. ஒப்பு
22. இது உள்ள இடத்தில் கார் ஓடாது
23. கண் மருந்து

மேலிருந்து கீழ்

1. பழங்காலத்து இராஜகுமாரர்கள் பல.....கற்றிப் பார்த்த பின்னர்தான் பட்டந் தரிப்பார்கள்
2. கலியாணப் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் இது எடுப்பது ஒரு சம்பிரதாயம்
3. கமந்து செல்லல்
4. சிங்கோனாச் செடியின் இதிலிருந்து "குயினின்" என்ற மலேரியா மருந்து செய்யப்படுகிறது
5. கதிர்காமத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு மலை
7. பெண்களின் இது பல புலவர்களின் பாடல்களுக்கு இலக்காகியிருக்கிறது
8. அழகு பொருந்திய வளமை
10. இதைத் தலையில் வைத்து ஆடுவது ஒரு கலை
12. மாமியின் மகன்
14. காற்று வீசாவிட்டால் மரக்கிளைகள் இது கற்றுக் கிடக்கும்
15. மிளகு போட்டுத் தயாரிக்கும் இது ஜீரணசக்தியைக் கொடுக்கிறது
19. வாழை
20. பங்கு
21. .....என்றால் கூட்டு என்று பொருள்



பிரவேசக் கட்டணம் சதம் 50



இரண்டு கட்டங்களுக்கும் பிரவேசக் கட்டணம் ரூபா 1-00 செலுத்தினால் இந்த மூன்றாவது விடையை இனாமாக அனுப்பலாம்.



பிரவேசக் கட்டணம் சதம் 50

பெயர்.....

விலாசம் .....

.....

அனுப்பும் மொத்த கூப்பன்களின் தொகை.....

கட்டணத்தின் தொகை ரூ..... சே.....

போஸ்டல் ஆடர் வவுச்சர் இலக்கங்கள்.....

போட்டி அனுப்பும் விலாசம்:

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 24,
த. பெ. இ. 1183, கொழும்பு-12

ஒரு கூப்பன் மட்டுமே நிரப்பியிருந்தாலும் இம்மாதிரி கூப்பன்களுடனுள்ள முழுப்பத்திரமும் அனுப்பப்படவேண்டும்.

கலாமேதை.....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுத்தறிவற்ற மக்களை மத்தியிலே மேதை பீர் முஹம்மது ஸாஹிபு ஒலியுல்லா அவர்கள் எதிர்ப்புக்கும், ஏசலுக்கும், தூஷணத்திற்கும், துன்பத்திற்கும் இலக்கானார் என்றாலும் தான் கண்ட உண்மையை பிறருக்கு எடுத்துரைக்காது பின்வாங்கி ஓடவில்லை. மாறாக வளர்ந்தார்கள், முன்னேறினார்கள்.

எனவே அத்தகைய சன்மார்க்கப் பணியிலே சற்றும் சலிக்காது, சறுக்காது வீடுகளிலே, மேடைகளிலே, கூட்டங்களிலே, தோணல்புத்தி படைத்தவர் மத்தியிலே, குக்கிராமங்களிலே, குபேரர் வாழும் பட்டணங்களிலே, நல்லார்கள் நடுவிலே, நாலுதிசையிலேயும் அவர்கள் பிரச்சாரப் பணி நடந்து கொண்டிருந்தது. வெற்றி சிறிது கிட்டியது; ஆனால் வேதனையை நிரம்பப் பெற்றார்கள் எனினும் வீழ்ந்து விடவில்லை. முபற்கியிலே பன்மடங்கு வேகங்கொண்டார்களென்பது சரித்திரச் சான்று!

இத்தகைய ஞானமேதையான மகானவர்கள் மிகமிக எழிய வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்கள். வாட்டும் வறுமையிலும், கொட்டும் பசியிலும் துடித்திருக்கிறார்களென்றால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆடை நெய்யும் தொழில் புரிந்து அருந்துணை மனைவியோடு ஆடம்பரமின்றி அன்பு வாழ்வு வாழ்ந்த காலத்தில் தான் அறிவுக் களஞ்சியமான இன்று நம் கண்முன் காட்சிதரும் நன்னெறி நூற்கள் இயற்றியிருக்கிறார்களென்பது குறிப்பிடத்தக்கது.

தனைசேர் ஞானமேதையவர்கள் தவித்திருந்து தவம்புரிந்து ஆண்டவன் அருள்ஜோதியிலே நிரந்தரமாய் திகழ்ந்த நம் குரு மகான் இறைவனை அறிந்து கொள்ளும் மார்க்கத்தை மானிலம்வாழ் மாந்தரவர்களுக்கு மிகமிக அழகாக அற்புதமாகவும். அர்த்தபுஷ்டியோடும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள் ஓர் கவிதையில்.

"கோடி கோடி மானிடர்
குறைவில்லாத ஜோதியை
தேடி வாடி மாண்டனர்
தெளிவு கண்டதில்லையே
பாடி எங்கும் ஓசையாய்
பரந்தெழுந்து நின்றதை
நாடி ஓர் எழுத்திலே
நவின்றுபார் நம்முள்ளே"

என்று பாடிய மேதை மீண்டும்

"காட்டிலே தேடினுல்
காணுது—காணுமுடலி
வீட்டிலே தேடாய் விரைந்து"

என்று இப்படியெல்லாம் பல கவிதைகள் மூலம் உண்மையை சுட்டிக்காட்டி மாந்தர்க்கு ஆத்ம ஞானத்தை வளர்த்து நல்வழி காட்டியாய் திகழ்ந்த ஒலியுல்லா அவர்களின் சிடகோடி என்னிக்கை மிகப் பெரிதென்றே சொல்ல வேண்டும். அத்தகையோர்களினே நமது சிறப்புக்குரிய சதகதுல்லா அப்பா அவர்கள் முக்கியமானவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. இத்தகைய அரிய ஆன்மா ஜோதியாம் அறிவுத்தீபம் ஆக்கிப் படைத்த நம்முன் நடம்புரியும் ஞானநூற்கள் சிலவற்றைக் கவனிப்போம்.

ஞானப்புகழ்ச்சி ஞானமணிமாலை, ஞானப்பால், ஞானப்பூட்டு, ஞானதடனம், ஞானதிறவுகோல், ஞானக்குறம், ஞான உலகுருவு, ஞானதித்தி, ஞானவிகடம், ஞானக்கும்மி, ஞானரத்தினச்

(13ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலக்கதை

பளிங்குச் சமாதி

—மூலம்: சேர் எட்வின் ஆர்னல்ட் ★ தமிழில்: வ. மகாலிங்கம்

நகரத்தின் விளிம்பிலே நீலத் திரைகடலின் கோர அலைகள் முத்தமிடும் பரந்த வெண்மணற் பரப்பிலே ரோஜா நிறப் பளிங்குக் கற்களால் பதிக்கப்பட்ட ஒரு சமாதி. அதன் பக்கத்து நிலமெல்லாம் பக்கமும் தன் செழித்து வளர்ந்த கிளைகளைப் பரப்பி கம்பீரமாக நிற்கும் ஒரு புளியமரம். ரஜபுத்திர மக்கள்—பளிங்கு மண்டபத்திலே படாடோபமாக வாழும் பணம்படைத்தோர் கொடுக்கும் பாமரப் பாட்டாளிகளிருக்—அனைவரும் இருதய சுத்தியுடன் வணங்கி, அன்றலர்ந்த மலர்களை இறைத்துப் பெருமைப்படும் ஒரேயிடம் அந்தப் புனித சமாதி. ரஜபுத்திர வீரம், அன்பு, நியாய உணர்ச்சி அத்தனையும் ஒன்று சேர்ந்து விளங்கும் வெற்றிச் சின்னம் அந்தச் சமாதி. ரஜபுத்திர உள்ளங்களிலும் இதிகாச ஏடுகளிலும் அந்தச் சமாதியின் இரத்தந் தோய்ந்த துயரக் கதை அழிக்க முடியாத வர்ணத்தாற் தீட்டப்பட்டிருக்கிறது.

ஏக்கம் குடிகொண்ட இதயத்தின் படிமக்கலமாக, மாசற்ற பிரதிபிம்பமாக, கவலையின் ரேகைகளால் கீறப்பட்ட முகத்துடன் ஏகாந்தத்தில், சித்தமே வெளித்தில் மிதந்து கொண்டிருந்தார் ஜோதிபுரி மன்னர். மாளிகையின் ஒரு பகுதியிலிருந்து "குவா, குவா" என்ற பாலமணம் மாறாத பச்சிளங் குழந்தை வொன்றின் பரிதாபக் கதறல் ஊடுருவிக் கொண்டு வந்து மன்னரின் சலனவுள்ளத்தைத் துளைத்தது. மன்னரின் ஏகாந்தம் கலைந்தது. அவரையுமறியாமல் அவரது கால்கள் அந்தத் திசையை நோக்கி விரைந்தன. தொட்டிலை ஆட்டிக் கொண்டே ஆராரே பாடிக்கொண்டிருந்த தாதியர் அரசரைக் கண்டு விலகி நின்றனர். உவகின் வஞ்சகம், பேடம், சூது, துரோகம் என்பவற்றின் நிழலே படிந்திராத உள்ளம் படைத்த ஓர் ஆண்குழந்தை தன் சிறிய கால்களையே படித்து விரிட்டுக்கொண்டிருந்தது. ஒருசில நிமிடங்களே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த மன்னரின் கண்கள் தாரைதாரையாக வெள்ளத்தைப் பெருக்கி அந்தக் குழந்தையின் சின்னஞ்சிறு பொன்னுடலை நனைத்துவிட்டன. இடிந்த மனக்கோட்டைகளை மீண்டும் எழுப்பி இன்பவாழ்வுக்கு அடிகோல இந்தக் குழந்தை ஒரு அதிர்ஷ்டவாய்ப்பல்லவா? இருண்ட வாழ்வில் ஒளி வெள்ளத்தைப் பெருக்க இயற்கை தனக்கீந்த ஒரு வினாடி, எல்லோரும் என்ன அலைகளிலே சிதற விட்டுக்கொண்டிருந்த மன்னர் ஏதோ அரவம் கேட்டுத் திரும்பினார்:

"வேந்தே, இதோ ஒருத்தி", என்ற குரல் கேட்டதும் ஒடும் கண்ணீரை ஒத்திவிட்டு வாயிலை நோக்கி மெதுவாக வந்தார்.

தன் உயிருக்குயிரான மனைவி பிரசவித்த இரு நாட்களில் இறந்ததனால் ஒரே துயர வெள்ளத்தில் அமிழ்ந்திருந்த ஜோதிபுரி மன்னர் தன் வம்சத்தை வாழ வைக்கப்போகும் அருமைக் குழந்தைக்காகவே உயிர் வாழ்ந்து கொண்டிருந்தார். அந்த ஆண் குழந்தையைப் பராமரிக்க ஒரு திறந்த அனுபவம் வாய்ந்த தாதி வேண்டுமென நாட்டின் நாலு பக்கமும் ஆட்களை அனுப்பியதன் எதிரொலியாகவே கொண்டுவரப்பட்டவளே இந்தப் பெண். மன்னரி முன்னே அந்த இளம் தாதிப் பெண் வந்து வணங்கிவெழுந்தாள்:

"உன் பெயரி?"

"மோதி"

"தாதி வேலையில் உனக்கு எவ்வளவு கால அனுபவம்?"

"என் வாழ்வு முழுவதும் அதுதான் ராஜ, என் தொழில்"

"இங்கு வேலை செய்ய உனக்கு விருப்பந்தானே?"

"ஆம், ராஜ ஆனல்..."

"ஆனல்?"

"எனக்கும் ஓர் ஆண் குழந்தை கைக்குழந்தையுண்டு. எப்பொழுதும் எனது கடமையில் தவறமாட்டேன்"

"நல்லது இங்கேயே உன் குழந்தையையும் வைத்திரு" இது மன்னரின் பதில்.

மோதி அறிவும் அழகும் சேர்ந்த ஓர் இளம் பெண். அரசபக்தியும், கடமை உணர்ச்சியும், நியாகப் பண்பும் நிறைந்து நங்கள் குருதியோடு, சதையோடு படிந்த ரஜபுத்திர மக்களுக்கு மோதி விதிவிலக்கல்லவே. தன் குழந்தையைக் காட்டிலும் ராணியின் குழந்தையை ஆயிரம் மடங்கு அதிகமான அன்புடன் வளர்த்தாள். ராணியின் குழந்தையின் விளையாட்டுப் பொம்மை யென்றே தன் குழந்தையை அவள் கருதினாள்.

மோதியின் குழந்தையும் இராச விசுவாசத்தில் தன் அன்னைக்கு இளைத்தவனல்ல. ராணியின் குழந்தை பால் குடித்த பிறகுதான் அவன் குடிப்பான். அவளைத் தாலாட்டித் துயில்கொள்ள வைத்த பின்னரே தான் தூங்குவான், தூங்கும் போதும் தன் தளிர்க் கரமொன்றினால் அவளை அணைத்துக்கொண்டே தூங்குவான். வேதனையுணர முடியாத வெள்ளையுவளத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினான் மோதியின் புதல்வன்.

தேசத்துரோகமும், அரசியற் பூசலும், சமூகக் கொந்தளிப்பும், புரட்சிவெறியும் தலைதூக்கியாடிய காலம் அது. ஜோதிபுரி மன்னரின் வம்சத்தையே வேரோடு சாய்க்க வேண்டுமென்று கங்கணங்கட்டிய சில கெடுமதி வாளர் ராணியின் களங்க மற்ற காதற் குழந்தையைப் பூண்டோடு அழிக்கத் திட்டமிட்டுக்கொண்டிருந்தனர். ராணியின் பாரம்பரியத்தைத் துலக்கும் மற்ற கொடியை மணிமண்டபத்திலிருந்தும் அகற்றிவிட வேண்டுமென்று சதிகாரக் கும்பல் சூழ்ச்சி வலை வீசிக்கொண்டிருந்தது. எந்தக் கணமும் இரக்கமற்ற இந்தப் புல்லுருவிகளின் வாள் வீச்சுக்கு ராணியின் இளங்குழந்தை இரையாகலாமென்ற பீதி மாளிகையில் நிறைந்திருந்த நாட்கள் இவை.

இருள் கவிந்த இரவு. பயங்கரமான அமைதி பரிபாலனஞ் செய்துகொண்டிருந்தது. மாளிகையில் மங்கலாக எரிந்துகொண்டிருந்த சில விளக்குகளைத் தவிர மனிதசஞ்சாரமே இல்லையென்று கூறலாம். உலகமே துயில்கொள்ள ஆரம்பித்து விட்டது. இந்த ஆழ்ந்த அமைதியைத் துணையாகக்கொண்டு ஒரு காலடிச் சத்தம் மாளிகையை நோக்கி ஒடிவந்துகொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து ஆபத்து ஒன்று வந்துகொண்டிருப்பதுபோல மோதியின் மனதிற்பட்டது. ஒருகணத்தில் வாயிற காவலாளி ஒருவன் மூச்சுத் திணற மோதியின் முன்னிலையில் [illegible] ஓடி:

"மோதி, ஆபத்து" இதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. மோதி கனவுகண்டு விழித்தவள்போல அவளை ஏக்கத்துடன் பார்த்தாள்.

"மோதி, ராணியின் எதிரிகள் எங்கள் காவலாளிகளில் நன்றியற்ற சில கடையரை, முதலெலும்புந் தன்மானமுமற்ற சில இனத்துரோகிகளை, பசாசுத்திகளைப் பணங்கொடுத்து வாங்கிவிட்டார்கள். நேர்மையான நெஞ்சிற் கட்டாரிகளுடன் விழுந்து கிடக்கிறார்கள். இதோ வந்துகொண்டிருக்கிறார்கள். சீக்கிரம் குழந்தையுடன் ஒழிந்துகொள்", என்று கூறிவிட்டு மின்னல் வேகத்தில் மறைந்தான் அந்த அபாய அறிவிப்பான்.

பால் குடித்துக்கொண்டிருந்த ராணியின் குழந்தையை ஓரமூச்சில் கீழ வைத்தாள் மோதி. அடுத்த கணம் ராணியின் குழந்தையின் மணியுடையில் தன் மகனை அலங்கரித்தாள். அடுத்து கண்ணீர் நிறைந்த ஓர் அன்பு முத்தம். மறுவிநாடி அந்த இடத்தில் மோதியின் குழந்தை அரசவுடையில் தவழ்ந்துகொண்டிருந்தது. மோதியையும் ராணியின் குழந்தையையும் காணவில்லை.

இராசத்துரோகிகள்—இரத்த வெறியர்—நீதியின் இலட்சணமேயறியாத நீசர்கள்—வந்தார்கள். மோதி தன் குழந்தையுடன் ஒடிவிட்டானென நினைத்தனர். தரையில் தவழ்ந்துகொண்டிருந்த தங்கப் பதுமையின் மீது ஒரே வாள்வீச்சு.

தன் மன்னனுக்காக மரணத்தை ஏற்றுக்கொண்ட அந்த மாணிக்கம் மலர்ந்த முகத்துடன் மண்ணிலே துண்டாடப்பட்டுக் கிடந்தது.

மோதியின் தியாகத்துக்குப் பரிசாக மாடமாளிகைகளின் விலையுயர்ந்த முத்தாரங்கள், பொற்குவைகள், கண்ணைப் பறிக்கும் உடைகள்...

ஆனல் அன்றிரவே ராணியின் குழந்தையை மரணத்தின் கோரப் பற்களினின்றும் பிடுங்கி வந்த பெண்ணரசி தன் குழந்தைக்குப் பால் கொடுக்கவில்லையே என்று துடிதுடித்தாள்.

அடுத்த நாட் காலை மோதியின் அன்பு கனிந்த இதயத்துள் ஒரு கட்டாரி புதைந்து கிடந்தது.

சுகாதார பரிசோதகர் சங்க காரியதரிசி

திரு பாலசுப்ரமணியம் நியமனம்

சுகாதாரக் கல்வி உபகரணங்கள் உற்பத்திப் பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றும் சுகாதாரப்போதனாசிரியர் திரு க. பாலசுப்பிரமணியம் இலங்கைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் கௌரவ காரியதரிசியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர், மின்னேரியாவில் நிறுவப்பட்டிருக்கும் ஐக்கிய நாட்டுக் கல்வி, விஞ்ஞான, கலாசாரதாபனத்திலபயிற்சி பெற்றவர். சமீபத்தில் உலக சுகாதாரதாபனத்திலிருந்து சுகாதாரக் கல்வி ஆலோசகராக வந்திருக்கும் டாக்டர் எ. எல். சோஸரால் களுத்துறையில் ஒழுங்கு செய்யப்பட்ட சுகாதார இயக்கக் கல்விப் பயிற்சித் தாபனத்திலும் பயிற்சி [illegible] வார்.

தமிழ் உரிமைப் போராட்ட நிதி

தமிழ் மொழி, தமிழ் பேசும் இனம், தமிழ்ப் பேசும் மக்கள் வாழும்பிரதேசம் ஆகிய எல்லாம் அழிந்தொழியுமோ என்னும்படி அபாயகரமான தாக்குதல்களுக்குள்ளாகியிருக்கின்றன. முதற்கண், உயிரினும் மேலான தாய்மொழியை—தமிழ் மொழியை—பாதுகாக்க வேண்டியிருக்கிறது. மொழி அழிந்தால் இனம் அழியும்; இனம் அழிந்தால் சமுதாயம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்.

மொழிப் போராட்டம், இனப் போராட்டம், நிலப் போராட்டம் யாவையும் நடத்தி வெற்றி காண வேண்டிய தவிர்க்க முடியாத கடமை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஒன்றைத்தான் சார்ந்திருக்கிறது. ஏனென்றால் தமிழ் அரசுக் கட்சியொன்றுதான் இந்த அபாயத்தை ஆறு ஆண்டுகளுக்கு முன்னரே எடுத்துரைத்து, அன்றுமுதல் இன்றுவரை நிலையான கொள்கையோடு குலையாத உறுதியோடு தமிழ் உரிமைக்காக போராடி வருகிறது.

1949ம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்தோம். கட்சியின் கொள்கைகளே தமிழ்ப் பேசும் மக்களாகிய உங்கள் திருமுன் படைத்தோம். அக்கொள்கைகளின்மீது 1952ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டோம். எங்கள் கொள்கைகளை அப்போது தமிழ்ப் பொதுமக்களாகிய நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் எங்களைத் தோற்கடித்தீர்கள். ஆயினும் நாங்கள் தளரவில்லை. காரணம் எங்கள்தோல்வியும் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதல்ல. தமிழ் மொழியைத் தமிழ் இனத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதே எங்கள் இலட்சியமாக இருந்தது. எனவே எங்கள் கொள்கைகள் என்றுவது வெற்றி காணும் என்ற நம்பிக்கையோடும் உறுதியோடும் தமிழ்ப் பணியை ஆற்றி வந்தோம்.

இன்று நாங்கள் எடுத்துக் கூறிய கொள்கைகளையே மாறிமாறும் ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட்டுவிட்டது. அரசாங்கத்தோடு ஒட்டியிருந்தவர்களும் ஆதரிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. தமிழ்ப் பேசும் மக்களுக்கு வேறு வழி இல்லை என்ற உண்மை புலனாகிவிட்டது.

இந்த நிலையில் எங்கள் போராட்டத்தை மேலும் மும்முரமாகத் தொடர்ந்து நடத்த வேண்டியிருக்கிறது. இதற்கு வேண்டிய ஊழியர்களும், உழைப்பாளிகளும் இருக்கிறார்கள். திட்டமும் கொள்கையும் இருக்கின்றன. திறமையும் உறுதியும் இருக்கின்றன, வேண்டியிருப்பது நிதி ஒன்றுதான்.

வேண்டிய நிதியைத் தமிழ்ப் பேசும் மக்களாகிய நீங்கள்தான் தந்து தமிழ் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டும்.

தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிடப்பட்ட இடங்களில் குடியேற்றத்தை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டியிருக்கிறது. சத்தியாக்கிரக அடிப்படையில் பலவிதமான போராட்டங்களை நடத்த நாம் திட்டமிட்டுள்ளோம். இதற்கு நிதி தேவை.

பெப்ரவரி 20ந்திகதி தமிழ்ப்பிரதேசங்களில் தமிழ்ப் பேசும் மக்கள் ஒரு சாத்வீக ஹர்த்தாலை நடத்த வேண்டும். தமிழுக்கு சமஉரிமை கோருவது இலங்கையில் தங்களுடைய பித்தலாட்டமே தவிர அது தமிழ்ப்பேசும்பொதுமக்களின்ஏகோபித்தகோரிக்கையல்ல என்று சிங்கள அரசியல்வாதிகள் சொல்லிவருகிறார்கள். சமஅந்தஸ்துகோரிக்கை தமிழ்பேசும்மக்களின் ஒருமுகமான கோரிக்கைதான் என்பதை நிரூபிக்க ஹர்த்தால்போன்ற ஆர்ப்பாட்டங்கள் அவசியம். ஹர்த்தாலை நடத்துவதற்கும் நிதி வேண்டியிருக்கிறது.

பொதுத் தேர்தல் எதிர்நோக்கி வருகிறது. தமிழ்ப் பேசும் மக்கள் இந்த நாட்டில் வாழ்வதா மாள்வதா என்பதைத் தீர்மானிக்கும் ஒரு பலப் பரீட்சையாக இந்தப் பொதுத் தேர்தல் அமையப் போகிறது. தேர்தலுக்கு முன்பு மக்களிடையே போதிய பிரசாரம் செய்ய வேண்டியிருக்கிறது. இதற்கும் நிதி தேவை.

எனவே தமிழ்ப் பேசும் பொதுமக்கள் தங்களால் இயன்ற நிதியுதவி அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். நிதியுதவி அளிப்பவர்கள் தங்கள் பெயரிலோ பகிரங்கப்படுத்த விரும்பாவிட்டால் அவை இரகசியமாக வைக்கப்படும். நிதி அனுப்புபவர்கள் யாவருக்கும் பற்றுச் சீட்டுகள் அனுப்பப்படும்.

"நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காகுகள் தாரீர்"

நிதி அனுப்பவேண்டிய முகவரி:

கௌரவ பொருளாளர்,
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி,
16, அல்பிரட் ஹவுஸ் கார்டன்,
கொழும்பு — 3.

இவண்,

ஆ. அன்னியசிங்கம், எம். ஜே. வி. செல்வநாயகம்
கௌரவ. இ: தா: அ: கட்சி. பொதுச் செயலாளர்,
இ: தா: அ: கட்சி.

20—1—56.

Advt.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



46 தமிழ்ப் படங்களில் 5 படங்களே சுத்த சுயப்பிரகாச தமிழ்க் கதைகள்!

பெரும்பாலும் தழுவலும் 'டப்பிங்'மே

பணப் பெட்டிமீது கண்வைத்தும் தாண்டவக் கோன்களாகவே பட முதலாளிகள் இருக்கிறார்கள்

சென்ற ஒராண்டில் தமிழ் நாட்டில் திரைப் படங்கள் எத்தனை வெளிவந்துள்ளன, அவற்றின் தரா தரம் என்ன என்பதை ஆராய்வோம். இந்த ஆராய்ச்சி தமிழ் மக்களின் கலையுணர்வை நிர்ணயிக்க ஓரளவு உதவும்; கலை உலகி லுள்ள கருத்தோட்டங்களை யும் ஒருவாறு நமக்குப் புலப் படுத்தும்? கலையுலகில் முற் போக்கானருடைய கை ஒங் கியிருக்கிறதா என்பதும் தெளிவாகும்;

தென்னிந்திய பிலிம் சேம்பர் கணக்கு

அண்மையில் தென்னிந் திய படத் தயாரிப்பாளர் சங்கம் (சவுத் இந்தியன் பிலிம் சேம்பர் ஆப் காமர்ஸ்) "1955ல் தென்னாட்டி லுள்ள 23 ஸ்டூடியோக்கள் 101 படங்களைத் தயாரித் துள்ளன" என்று ஒரு அறிக்கை வெளியிட்டிருக் கின்றது. அவற்றின் விவரம்;

தமிழ்ப் படங்கள்	46
தெலுங்கு படங்கள்	24
கன்னடப் படங்கள்	15
மலையாளப் படங்கள்	7
இந்திப் படங்கள்	5
இங்கிலீஷ்ப் படங்கள்	4
	101

தமிழ்ப் படங்களின் விவ ரம் அந்த அறிக்கையில் காணப்பெறவில்லை. எனி னும், நான் குறித்து வைத் துள்ள 1955ம் ஆண்டு தமிழ்ப் படங்களின் எண் ணிக்கை வருமாறு;

எனது கணக்கு

1; வள்ளியின் செல்வன் 2. மிஸ்ஸியம்மா 3. குணசுந் தரி 4 மங்கையர் திலகம் 5 செல்லப் பிள்ளை 6 நல்ல தங்கை 7 பெண்ணரசி 8 டவுன் பஸ் 9 கதாநாயகி 10 மஹேஸ்வரி 11 டாக்டர் சாவித்திரி 12 போர்ட்டர் கந்தன் 13 காவேரி 14 மாமன் மகள் 15 மேதா விகள் 16 கல்வனின் காதலி 17 சோமதியின் காதலன் 18 கோடீஸ்வரன் 19 குலே பகாவலி 20 நீதிபதி 21 முதல் தேதி 22 மேனகா 23 நல்ல வன் 24 எல்லாம் இன்பமயம் 25 கணவனே கண்கண்ட தெய்வம் 26 நம் குழந்தை 27 ஆசை அண்ணு அருமைத் தம்பி 28 கல்யாணம் செய் துக்கோ 29 ஜெயகோபி 30 விப்ரநாராயணு 31 மனோ ரதம் 32 அனார்கலி 33 லட்சாதிபதி 34 நாட்டியதாரா 35 ஜெயஸிம்மன் 36 சாம் ராட் 37 பத்மினி 38 வீரகுந் தர் 39 முல்லைவனம் 40 நல்ல பிள்ளை 41 கிருஹலட்சுமி 42 அவன் யார்? 43 உலகம் பலவிதம் 44 வானரதம் 45 நல்ல பெண்மணி 46 சந்நிப்பு

12 டப்பிங்

மேற்கூறிய 46 படங்களில் ஜெயகோபி, விப்ரநாரா யணு, அனார்கலி, லட்சாதி பதி, நாட்டியதாரா, ஜெய சிம்மன் ஆகிய ஆறு படங் களும் தெலுங்குப் படங்களின் தமிழ்ப் பதிப்பு (டப்பிங்) ஆகும்.

வானரதம், நல்லதங்கை, சாம்ராட் ஆகிய மூன்று படங்களும் இந்திப் படத் தின் தமிழ்ப் பதிப்பு (டப் பிங்) ஆகும்.

மனோரதம் ஒரு கன்னடப் படத்தின் தமிழ்ப் பதிப்பு.

நல்ல பெண்மணி, அவன் யார்? ஆகிய 2 படங்களும் மலையாளப் படத்தின் தமிழ்ப் பதிப்புகள் ஆகும்.

மேற்கூறிய தமிழ்ப் பதிப் புகள் 12ஐயும் கழித்துவிட் டால், மீதமுள்ள 34 படங் களும் சுத்தத் தமிழ்ப் படங் களே ஆகும்!

ஒரிஜினலா, தழுவலா?

மேற்கூறிய சுத்தத் தமிழ்ப் படங்களின் கதைகள் தமிழ் நாட்டு ஆசிரியரால் எழுதப் பட்டவையா, அல்லவா என் பதையும் கீழே காணுங்கள்;

1. வள்ளியின் செல்வன்— முக்ராம் ஷர்மா என்னும் இந்தி எழுத்தாளர் எழுதிய 'அவுலத்' என்னும் படத் தின் தழுவல்.

2. முதல் தேதி—'தாதா மிராஸி' என்னும் மராத்தி எழுத்தாளர் எழுதியதின் தழுவல்.

3 கோடீஸ்வரன்—மாமா வரேர்தர் என்னும் மராத்தி ஆசிரியர் எழுதியதின் தழு வல்.

4. மங்கையர்திலகம்-'வஹி னிஞ்சியா பங்கடியா' என் னும் மராத்திப் படத்தின் தழுவல்.

5. மஹேஸ்வரி — பங்கிம் சந்திரர் எழுதிய 'தேவி சௌதராணி' என்னும் நாவ லின் தழுவல்.

6. மிஸ்ஸியம்மா—மீனு ஷோரி நடித்த ஒரு இந்திப் படத்தின் தழுவல்.

7. போர்ட்டர் கந்தன்— செங்கையா என்னும் தெலுங்கு எழுத்தாளர் எழு திய கதையின் அவியல்.

8. கணவனே கண்கண்ட தெய்வம் — தெலுங்கு பால நாகம்மா, தெலுங்கு குண சுந்தரி கதா, ஷேக்ஸ்பியரின் 'லியர்-மன்னன்' ஆகியவற் றின் அவியல்!

9. முல்லைவனம்—ஒரு ஆங் கிலநாவலின் தழுவல்.

10. கதாநாயகி-ஒரு ஆங் கிலப் படத்தின் தழுவல்.

மற்ற படங்கள்

சுத்தசுயம்பிரகாச தமிழ்க் கதைகள் என்று சொல்லக் கூடியவை வடுவூராரின் 'மேனகா' கல்கியின் 'கள் வனின் காதலி' தேவனின் 'சோமதியின் காதலன்', சோலைமலையின் 'நீதிபதி', நாராயணனின் 'டவுன் பஸ்' —இவைதாம்போலும்! (நாக ராஜனின் 'பெண்ணரசி' ஜூபிடர் 'மனோகரா'வின் தழுவல்!!) இந்த ஒரிஜினல் படங்களில் சில சுமாரான வரவேற்புப் பெற்றன; பல படங்கள் படுதோல்வி அடைந்தன என்பதும் நாம் கவனத்தில் கொள்ளவேண் டிய செய்தியாகும்

தமிழ்ப் படங்களின் கருத்துக்கள்

ஒரிஜினலோ, தழுவலோ, அவியலோ, கூட்டோ—எப் படியாயினும் 1955ல் வெளி வந்துள்ள தமிழ்ப் படங் களின் கருத்தோட்டத்தைக் கவனிப்போம்.

மேற்கூறிய 43 படங்களை யும் சமூகக்கதைகள், சரித் திரக் கதைகள், நாடோடிக் கதைகள் என்ற பிரிவில் அடக்கலாம். இவற்றில் எவ் வாவற்றையும் இங்கு ஆராய் வது இயலாது. கீழ்க்காணும் 13 சமூகக் கதைகளின் கருத் துக்களை மட்டும் வெகு சுருக் கமாகக் குறிப்பிடுவோம்;

படம்—கருத்து

1. வள்ளியின் செல்வன்— வேலைக்காரனின் தியாகம்;

2. மங்கையர் திலகம்— அண்ணியின் தியாகம்.

3. ஜெயகோபி-சிறுவனின் தியாகம்.

4. கல கல தெய்வம்— மனைவியின் தியாகம் (பதி பக்தி).

5. முதல்தேதி-குமாஸ்தா வின் வாழ்க்கை.

நி. க. சிவசங்கரன்

6. போர்ட்டர் கந்தன்— ரயில்வே போர்ட்டரின் வாழ்க்கை (?)

7. டவுன் பஸ்—பஸ் தொ ழிலாளியின் வாழ்க்கை (?)

8 மிஸ்ஸியம்மா—லவ் வில்லாத் திண்டாட்டம் (?)

9 கோடீஸ்வரன்—வர தட்சிணைக் கொடுமை (?)

10. ஆசை அண்ணு, அரு மைத் தம்பி—சகோதரரின் வாஞ்சை;

11; நீதிபதி—சகோதர வாஞ்சை.

12; கல்வனின் காதலி— சகோதர வாஞ்சை,

13. நல்லதங்கை—சகோ தர வாஞ்சை;

மேற்கூறிய படங்களில் "முதல் தேதி" மட்டுமே குமாஸ்தாவின் வாழ்க்கை யைக் கண்கூடாகப் பிரதி பலிக்கின்றது. "போர்ட்டர் கந்தன்" "டவுன் பஸ்" "மிஸ்ஸியம்மா", "கோடீஸ் வரன்" ஆகியவை பிரச்னை களைத் தொட்டும் தொடா மலும், விட்டும் விடாமலும், நிரித்தும், மறைத்தும் குட் டையைக் குழப்புகின்றன. "கலைஞர்" நாகராஜன் எழு திய "டவுன் பஸ்" மோட் டார் தொழிலாளியின் வாழ்க்கையைக் கேலிசெய் கிறது! அது இயற்கைச் சித் திரமல்ல; கேலிச் சித்திரம்!

"மிஸ்ஸியம்மா"வும் ஒரு சோமாலிக் கதைதான்! மிகைப்பட்ட சித்திரம் தான்!

வெற்றிப் படங்களும் படமுதலாளிகளும்

பணவசூல் பொறுத்த மட்டில் "மிஸ்ஸியம்மா" "கணவனே கண்கண்ட தெய்வம்" "மனோகரா" "வள்ளியின் செல் வன்" "கல்வனின் காதலி" ஆகிய படங்கள் பட முதலாளிகளுக்கு நல்ல வெற்றி யையும், "முதல் தேதி" "போர்ட்டர் கந்தன்" "டவுன் பஸ்" "கோடீஸ் வரன்" ஆகியவை தோல்வி யையும், ஏமாற்றத்தையும் தந்திருக்கின்றன.

"முதல் தேதி"யை எடுத்த பத்மினி பிக்சர்ஸின் பாகஸ்தரும், அப்படத்தை டைரக்ட் செய்தவருமான ப. நீலகண்டன் "இனிமேல் இம்மாதிரிப் படங்களை நாம் எடுக்கமாட்டோம்" என்று பகிரங்கமாகக் கூறி யுள்ளார்.

பணப்பெட்டிமீது கண் வைக்கும் தாண்டவக்கோன் களாகவே நமது பட முத லாளிகள் இருக்கிறார்களென் பது முக்காலும் உண்மை.

'முதல் தேதி' யின் தோல் விக்கு அப்படத்தின் கதை யோ, நடிப்போ காரண மல்ல. திரைக்கதை அமைப்பு, டைரக்ஷன், பாடல்கள், இசையமைப்பு இவைதாம் காரணம்.

"ஆடத்தெரியாத நாட்டி யக்காரி தெருக்கோணல்!" என்றானாம். அப்படி இருக் கிறது தமிழ்ப்பட முதலாளி களின் வாதம். நல்ல கருத் துள்ள கதையை, நல்ல முறையில், கலையழகோடு அவர்களுக்குப் படம் எடுக் கத் தெரியவில்லை, இதுதான் உண்மை! (தொடரும்)

தமிழ்ப் பேரறிஞர்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

புப்பற்றி ஒரு சில சொல்ல வேண்டியது அவசியம். பத் துப் பாட்டிலும், எட்டுத் தொகையிலும் அடங்கிய பாடல்களைப் பாடிய புலவர் களின் பெயர்களை அகராதி வரிசையில் கொடுத்து அவர் எல்லா நூல்களிலும் பாடிய பாடல்களை ஒரு சேர முறைப்படுத்தித் தந்துள்ள னர். இப்பதிப்பில் பலவகை யான ஆராய்ச்சிக் குறிப்பு களும் எழுதியிருக்கிறார்.

எழுத்தாளர்களின் பாராட்டு

திரு வையாபுரிப் பிள்ளை யின் இலக்கிய சேவையைப் பாராட்டி 1955 பிப்ரவரி யில் கடந்த சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்க மகா நாட்டில் அவருக்கு ஒரு கேடயம் பரிசளிக்கப்பட் டது.

திரு வையாபுரிப் பிள்ளை யின் கட்டுரைத் தொகுதி யாகிய "கம்பன் காவிய" மும் அதே மகாநாட்டில் அரங்கேற்றப்பட்டது;

ஆழ்வார்களின் பாடல் களாகிய "முதலாயிர" த் தை பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில் அவர் பதிப்பித்து சமீபத்தில்வெளி யிட்டார். இந்நூல் அரை வரும் வாங்கக்கூடிய விலை யில் பதிப்பாக வெளிவந்துள் ளது. நாலாயிர திவ்யப் பிர பந்தம் முழுவதையும் இது போல் பதிப்பித்து வெளி யிடும் பொறுப்பை அவர் ஏற்றிருந்தார்.

தமிழ், ஆங்கிலம் தவிர், சம்ஸ்கிருதம், மலை யாளம், ஜெர்மன், பிரெஞ்சு ஆகிய மொழிகளையும் திரு வையாபுரிப் பிள்ளை நன்கு கற்றிருந்தார்.

திரு வையாபுரிப் பிள்ளை யின் கட்டுரைத் தொகுதி யாகிய "கம்பன் காவிய" மும் அதே மகாநாட்டில் அரங்கேற்றப்பட்டது;

ஆழ்வார்களின் பாடல் களாகிய "முதலாயிர" த் தை பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில் அவர் பதிப்பித்து சமீபத்தில்வெளி யிட்டார். இந்நூல் அரை வரும் வாங்கக்கூடிய விலை யில் பதிப்பாக வெளிவந்துள் ளது. நாலாயிர திவ்யப் பிர பந்தம் முழுவதையும் இது போல் பதிப்பித்து வெளி யிடும் பொறுப்பை அவர் ஏற்றிருந்தார்.

தமிழ், ஆங்கிலம் தவிர், சம்ஸ்கிருதம், மலை யாளம், ஜெர்மன், பிரெஞ்சு ஆகிய மொழிகளையும் திரு வையாபுரிப் பிள்ளை நன்கு கற்றிருந்தார்.

வெளியிடவேண்டுமென்பது திரு வையாபுரிப்பிள்ளையின் லட்சியம். அதற்காக அவர் பெரு முயற்சி செய்து வந்தார்;

அவரது மக்களில் மூத்த புதல்வர் அண்ணாமலை சர்வ கலாசாலையில் மெக்கானிகல் என்ஜினீயரிங் ஆசிரியராக சேவை செய்து வருகிறார். மற்றொரு புதல்வர் வைத்திய மேல் படிப்புக்காகலண்டன் சென்றிருக்கிறார்.

"தினமணி கதிர்" இலக் கிய மண்டபம் என்ற தலைப் பின்கீழ் திரு வையாபுரிப் பிள்ளை தொடர்ச்சியாகப் பல கட்டுரைகள் எழுதியி ருக்கிறார். "பண்டைத் தமிழ் நாடும் சமயமும்" "பக்திக்கனியின் திருஞானம்" "வடநாட்டில் கண்ணன்" "பக்தி வெள்ளத்தில் விளைவு" "அவதாரங்களும் தென்னாட்டுத் தொடர்பும்" "ராதாவும் கிருஷ்ணனும்" "சொல்லின் ஒலி வடிவும் வரி வடிவும்" "கற்றலின் பயன்" முதலிய கட்டுரை கள் இவற்றில் குறிப்பிடத் தக்கவையாகும். பல நூல் களுக்கு "தினமணி கதிரில்" அவர் மதிப்புரைகளும் எழுதி வந்தார். அவருடைய கடைசி இலக்கிய சேவை இவையே எனலாம்;

கடைசி மரியாதை

திரு வையாபுரி பிள்ளையின் தகனக்கிரியை கடந்த சனிக் கிழமை பகல் 12-30 மணிக்கு நடந்தது.

"தினமணி" ஆசிரியர் திரு ஏ. என். சிவராமன் துணை ஆசிரியர் திரு ஏ. ஜி. வெங்கடாச்சாரியார். "இந்து ஸ்தான் எக்ஸ்பிரஸ்" துணை ஆசிரியர் திரு ஏ. சுவாமி நாதன் மற்றும் திருவானைக் காவல் பிரமுகர்களும் சேதுப் பிள்ளை, "தூரன்" ஆர். மகாதேவன், "நாடோடி" "கல்கி" சதாசிவம், "சோமு" வி. வா. ஜகந் நாதன், மரீரேராஜம், பெ. நா அப்புசாமி, சச்சிதானந்த பிள்ளை முதலியோர் இன்று காலை அவரது இல்லத் திற்குச் சென்று தங்கள் கடைசி மரியாதையைச் செலுத்தினர்.

"தினமணி"

களுத்துறையில் சங்கீத வகுப்பு ஆரம்ப விழா

களுத்துறை ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி மண்டபத் தில் இலங்கை வானொலி தமிழிசைக்கலைஞர் சங்கீத பூஷணம் திரு எஸ். இராஜ் அவர்களை இசை ஆசிரியரா கக் கொண்டு சங்கீத வகுப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

இதுசம்பந்தமான வைபவத் துக்கு கொழும்பு மேற்கு பகுதி வித்தியாதரிசி திரு ஏ சரவணமுத்து தலைமை வகித்துப் பேசுகையில், களுத்துறைப் பகுதியில் சங் கீதவகுப்பு ஆரம்பிப்பதைப் பற்றி தமிழ் பாடகர்கள் பாராட்டுவதாகக் கூறினார். மேலும் அவர் கூறியதா வது.

நமது தாய்மொழியாகிய தமிழோடு இசை எவ்வளவு இணைந்துள்ள தென்பதை சமயக் குரவர்களான அப் பர், சுந்தரர், மாணிக்கவா சகர் திருநாவுக்கரசர் ஆகி யோர்களின் பாசுரங்க ளில் காணலாம். சுவீடனர் லாந்தில் இசைமூலமாகவே ஆரம்பப்பள்ளிகளில் பாடங் கள் போதிக்கப்படுகின்றன;

விழா ஆரம்பம் தேவார இன்னிசையுடன் நடைபெற் றது விழாவில் திருவாளர் கள் எஸ். சிவகுரு, வீ. சொக்கலிங்கம், வி. டி. செல்லையா, பி. கனகரத்தி னம் மற்றும் மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரும் கலந்து விழாவைச் சிறப்பித் தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்குச் சம....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் இருத்தல் கூடாது மேற்கு நாட்டு நாகரிகம் நமது தமிழ் சமூகாரத்தை குழிதோண்டிப் புதைக்கும் அளவுக்கு தமிழ்பெண்கள் நடந்து கொள்ளுதல் கூடாது. எனது பெண்ணினே ஒதி ஒருத்தி பத்தய விளையாட்டொன்றில் ஈடுபோது சைக்கிள்மேலேறிச் சவாரி செய்தது என்னே உண்மை விலேயே தலைகுனியச் செய்தது. இனிமேலும் இந்த முறை வளரவேண்டாம். இந்தப்பழக்க வழக்கங்களை இப்போதெ ஒழித்துக்கட்ட வேண்டுமென்று ஓசை கிளப்பி செயலிலீடுபடுவோம்.

தான் பெற்ற பிள்ளையைத் தாலாட்டி பாலூட்டி வளர்த்து, சம்பாதனியம் தேடச்சென்ற கணவன் திரும்பிவந்த விடத்தில் அவனே இன்முகம் கொண்டழைத்து குடும்பக்கடமையின் நிறைப்பான பண்பை பெண்கள் நிலைநாட்டவேண்டும் இது அல்லாமல் கணவனுத்தியோகத்துக்கு இளம்பு முன்னரே தானும் தான் தோன்றித்தனமாக நடக்கும் முறையில் வெளியே சென்று சமூகத்திலே தொழில் செய்ய முற்படுகிறவர்கள் பெண்குலத்தை அழிவுக் கடலில் தள்ளுகிறவர்களே!

ஒரு அளவு கல்வியறிவைப் பெற்றுவிட்டு வீட்டுடனிருந்து குடும்பக்கடமையை வளர்ப்பது பெண்களின் பிறப்புரிமையான கடமையேயாகும். எனவே, பெண்கள் ஆண்களுடன் எதுவிதத்திலும் விதண்டா வாதம் பண்ணுது அவர்களுக்கு அடங்கியும் அன்போடும் பணிவுடனும் நடந்தும் வாழ்க்கையை அமைதியாகவும் சிறப்பாகவும் நடத்த வேண்டும்.

இந்த நிலைமையை நிருஷ்டிக்க பெண்களாகிய நாம் ஒவ்வொருவரும் 'எமக்கு சம அந்தஸ்து வேண்டாமென்று, ஒரு பட்ட கோஷத்தை எழுப்ப வேண்டும். அறிவுள்ளபல எடுத்துக்காட்டுகளை சமூகத்திலே கூறி இளப்பப்பட்ட 'ஆண்களோடு ஐம்பதுக்கு ஐம்பது' என்ற வீண் கருத்தை இல்லாமல் செய்து பெண்குலத்தை வளர்ப்போமாக.

கலாமேதை.....

(10 ம் பக்கத் தொடர்ச்சி)

குறவஞ்சி, ஞான ஆனந்தக் களிப்பு ஞானபுச்சுடர் பதிகம், ஞானக் அமிர்தக்கு, ஞானக் களஞ்சியம், ஞான சாரநூல், மிஸ்ராஜ்வம், பிஸ்மில் குறம், மஸ்ரிபத்துமாலை, திருநெறிநீதம் முதலியவைகள். இன்று நம் கண்ணோட்டத்திற்கு அகப்பட்ட நூற்கள் படித்துப் பயன்பெற வேண்டிய நூல்கள். இலவசமாக் மடைத்துத் தந்த நம் மாச்சபரும் மெஞ்ஞான சொரூபர் பீர்முஹம்மது ஜாஹிபு ஒலியுல்லா அவர்களது முன்னூறு ஆண்டுகட்கு முன இவ்வையகம் வாழ்த்த மறைந்த அந்த சோகத் திருநாளை நினைவுநாளாக மக்கள் பொன்னுளாக கருதி இற்றைய 1956ம் ஆண்டு பெப்ரவரி 26 ஞாயிற்றுக்கிழமை நஜ்பு பிறை 14ம் இரவு (அன்றிரவு) இன்ற தினமகானவர்களின் நினைவு விழா தினத்திலே மக்கள் நாம் சபதம் கொள்வோமாக. அன்னாரை முன்மாதிரியாகக்கொண்டு அவர் காட்டிய அறநெறியிலே அன்புபாதையிலே, அறிவுத் திசையிலே சென்று சீரோங்கி, நலமோங்கி வாழ உறுதிகொள்வதோடு உத்தமர் அவர்களின் ஆத்மா சாந்தி அடைந்து அன்னவர்களின் நாமம் நிலைபெற்று என்றும் வாழ வல்லோனை இறைஞ்சுவோமாக.

ஆங்கிலத்திற்கு அனுகூலமாக

தமிழ்ப் பாடசாலைகள் மட்டம் தட்டப் படுகின்றன

தமிழ் மொழியை இலங்கையில் இருந்து இ—ம் தெரியாமல் குழிதோண்டிப் புதைத்துவிடுவதில் சிங்கள மொழி வெறியர்களும் அவர்களின் ஆதிக்கத்திற்குட்பட்ட அரசாங்கமும் ஆவேசம் கொண்டுள்ள இச்சமயத்தில் நம் மொழியின் வளர்ச்சிக்கு மற்றோர் தடையும் யாழ்ப்பாணத்தில் தோன்றி வளர்ந்துவருகிறது. அதாவது இங்குள்ள ஆங்கில பாடசாலைகளின் வளர்ச்சியிலும் ஆங்கில மொழியின்மீதும் அக்கறை கொண்டுள்ள வித்தியா பகுதி அதிகாரிகள் தமிழ்ப் பாடசாலைகளின் வளர்ச்சியை மட்டந்தட்டுவதன் மூலம் தம் எண்ணத்தை நிறைவேற்ற முயன்று வருகின்றனர்.

ஆங்காங்குள்ள பல தமிழ் ஆரம்ப பாடசாலைகளின் முகாமைக்காரர் தம் பாடசாலைகளில் மேல் வகுப்புகள் வைத்து நடத்த வித்தியா பகுதியாருக்கு விண்ணப்பமனுப்பிரை களாயினும் அந்த விண்ணப்பங்களெவையும் அங்கீகரிக்கப்படவில்லையாம். இதனல் பெருந்தொகையான பிள்ளைகள் தமிழ்ப் பாடசாலைகளில் 4ம் 5ம் வகுப்புகளுக்கு மேல் படிக்க முடியாமல் ஆங்கிலப் பாடசாலைகளில் போய்ச் சேரவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டிருக்கிறது. தாய் மொழியைக் கற்பதில் பெரும் ஆர்வமும் அக்கறையில் ஏற்பட்டுள்ள இக்காலத்தில் ஆரம்ப தமிழ்ப் பாடசாலைகளில் மேல் வகுப்புகள் வைக்க அனுமதியளித்தால் ஆங்கில பாடசாலைகளின் சராசரி வீழ்ந்துவிடுமென அதிகாரிகள் அஞ்சுகிறார்கள் என அறிவிக்கப்படுகிறது.

அனுமதிக்கு விண்ணப்பித்துவிட்டு மேல் வகுப்புகளை வைத்து நடத்திய பல பாடசாலைகள் இந்த ஏமாற்றத்தின் காரணமாக அவ்வகுப்புகளைக் கலைக்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது. தம் பிள்ளைகளுக்குத் தாய்மொழிக் கல்வியூட்டுவதில் ஏற்பட்டுள்ள கஷ்டமும் பற்றி அதனால் பாதிக்கப்பட்டுள்ள பெற்றோர் கவலை கொண்டுள்ளனர்.

ஹர்த்தால்.....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலையை மூடிவிட்டது எதிரும் புதிருமான ஹர்த்தாலின் வெற்றியைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

மல்லாகத்திலும் பாடசாலைகளும் கடைகளும் முற்றிலும் மூடிவிட்டன. யாழ்ப்பாணம் நகரில் உள்ள கடைகளும் மூடப்பட்டன. திங்கட்கிழமைகளில் முறையாக நடக்கின்ற சுன்னாகம் சந்தையில் எந்தவிதமான கொள்வனவு விற்பனவும் நடக்கவில்லை. தங்களுடைய வெறுப்பைக் காண்பிக்கும் முறையில் சந்தையை எவரும் எட்டியும் பார்க்கவில்லை.

யாழ்ப்பாணம் நகரில் உள்ள பிரதான பஸ் நிலையத்தில் காங்கேசுருவிலிருந்து தவிர பிரயாணிகள் ஒருவரையும் காணவில்லை. கிட்டத்தட்ட பதினைந்து பஸ்கள் நின்ற நிலையில் மத்தியான வெய்யிலுக்குடிதின. யாழ்ப்பாணத்தில் ஹர்த்தாலை எதிர்த்தவர்கள்கூட ஹர்த்தாலை நடத்தியவர்களையும் தமிழ் அரசுக் கட்சித் தலைவர்களையும் கண்டு வெற்றிக்காகப் பாராட்டினர்.

திருவள்ளுவர்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

விரும்பினால் பிறர் கவிதைகளைக் காணுத சிறு கவிதைகளையும் தங்கள் கவிச் சுவைக்கு நிவேதனமாக ஆக்கித்தர விரும்புவர். இளம் குழந்தைச் சிறு மொழி பண்ணுடைய பலரும் கேட்பர். ஆனல் அம்மழலை மொழிபற்றி நம்தெய்வ அருட்கவி.

"குழளினிது யாழினிது
எனபர் தம் மக்கள்
மழலைச் சொற் கேளாதவர்"

என்று அழகாகக் கூறியுள்ளார். திருக்குறள் அறத்தினை உணரத் தலைப்படுவோர்க்குக் ஒரு பேராநூல். அரசியல் நூல், ஞான நூல், கவிச் சுவையையிரும்புவார்க்குக் காவியம் பேரின்பத்தை விரும்புவோர்க்கு பேரின்ப நூல், காமச்சுவையை விரும்புவோருக்குக் காம நூல். வாழ்க்கை நெறி வரும்புவோருக்கு வாழ்க்கை வழிகாட்டும் நூல் எனதம் தம விருப்பப்படி ஒவ்வொருவரும் வகுத்துக் கொள்கிறனர். இந்நூல் உலகம் அழியும் வரை மண் மாயும் வரை மங்காதமாணிக்கமாகவிளங்கும் என்பதற்கு சந்தேகமே இல்லை.

கிளிவெட்டியில் ஹர்த்தால்

கிளிவெட்டி வாசிகளை வாய்ப்பேச்சு வீரர்களை செய்கையில்தான் அவர்களுக்குரிய நம்பிக்கையுண்டு என்பதை சென்ற 20 ந்திகதி நேரிலாகவே காண்பித்து விட்டனர். இப்பகுதி பள்ளிக் கூடங்கள் மூடப்பட்டன. கடைகள் பூட்டப்பட்டன.

பிரயாணம் செய்யவேண்டியவர்களும் ஹர்த்தாலை அனுஷ்டிக்கும் முகமாக தம் வீடுகளில் அமைதியாக அமர்ந்திருந்தனர்.

துறைநீலாவணையில் ஹர்த்தால்!

20 ம் திகதி ஏராளமான துறைநீலாவணை வாசிகள் ஹர்த்தாலை அனுஷ்டித்தனர் 95 வீதம் மாணவர்கள் பாடசாலைக்குச் சமூகமளிக்காது விட்டனர். தொழிலாளிகள் தங்கள் தங்கள் தொழிலைளுக்குச் செல்லவில்லை. வீடு தோறும்—அதருக்கள் தோறும் கறுப்புக் கொடிகள் காட்சியளித்தன. துறைநீலாவணை த. அ. க. வாலிப முன்னணிப் (கிளை) பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அங்கத்தவர்கள் எல்லாம் உண்ணுவிரதம் இருந்தனர். பொதுபடக் கூறின இவைகள் எல்லாவற்றுக்கும் த. அ. க. வாலிப முன்னணி அங்கத்தவர்களின் ஈடுபாடுமே காரணம்.

பல இடங்களில் . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சித் தொகுதியில் எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறுது பாதுகாத்துக் கொண்டிருந்த நியாயவாதி திரு வி. எ. நவரத்தினம், பட்டினசபை அங்கத்தவர் திரு ஜெயரத்தினம், திரு ஏ. சே இராமலிங்கம் முதலியோருக்கு எட்டியதும் அவர்கள் உடனடியாகப் பொலீஸ் நிலையத்துக்கு விரைந்து சென்றனர். இதையடுத்துப் பல ஆசிரியர்களும் சாவகச்சேரிப் பட்டின சங்கத் தலைவர் திரு சே. இராமநாதன், மாஜி பட்டின சங்கத்தலைவர் திரு எ. அருணசலம் முதலியோரும் பொலீஸ் நிலையத்திற்குச் சென்றனர். அதில் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

வேல் தைலம்

இது ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய சமய சஞ்சீவி. தலைவலி, ஜலதோஷம், வாதம், வாய்வு, பிடிப்பு, வீக்கம், ரத்தக்கட்டு, சளுக்கு முதலிய வியாதிகளை ஆச்சரியமாய்க் குணமாக்கும்.

உபயோக விபரம் மருந்துடன் இருக்கிறது;

புட்டி 1க்கு ரூ. 1-25 தபால் செலவு வேறு;

இலங்கை ஏஜண்டுகள்:

எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,
34, செட்டியார் தெரு. கொழும்பு—11.

ரீகல்

காலை 10-00, பிற்பகல் 3-30, மாலை 6-30, இரவு 9-30

"வெற்றியின் திருநாள்"
(டே ஆப் ட்ரயம்ப்)

இதுவரை வெளிவந்துள்ள படங்களிலெல்லாம் மிகவும் பெரிய சித்திரம்; கிறிஸ்துநாதரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் முழு நீளக் கலர்ப் படம்.

மகத்தான 3வது வாரம்

எல்பின்ஸ்டன் ரொக்ஸி

காலை 10-00, பிற்பகல் 3-00, மாலை 6-00, இரவு 9-30

ஆர். கணேசன், ராஜசுலோசனை நடித்த "நீதிபதி"

செல்லமஹால்

மாலை 6-00 மணிக்கும், இரவு 9-30 மணிக்கும்

பானுமதி நடித்துள்ள

விப்ரநாராயணா

மகத்தான 16 வது வாரம்!

கெயிட்டி

காலை 10-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கும்

குலேபகாவலி

சிறந்த அச்சு வேலைகளுக்கு
அழகான எழுத்துக்கள் அவசியம்

எமது முறைப்படி அச்செழுத்துக்களை வார்க்கும் உயர்தரமான இயந்திர சாதனத்தை நாம் புதிதாக நிறுவியுள்ளோம் என்பதை நமது நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

8, 10, 12, 14, 16, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

நாம் இப்பத்திரிகையில் உபயோகிக்கும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. இவ்வெழுத்துக்கள் உயர்தரமான உலோகத்திலும், தரம் சற்று குறைந்த உலோகத்திலும் விலைக்குத் தக்கபடி கிடைக்கும். வேண்டியவர்கள் விவரத்திற்கும் விலைப் பட்டியலுக்கும் எழுதவும்.

10 பொயிண்ட் ரோமன்
10 பொயிண்ட் போல்ட்
12 பொயிண்ட் ரோமன்
12 பொயிண்ட் போல்ட்
14 பொயிண்ட் போல்ட்
18 பொயிண்ட் போல்ட்

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக்கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக்கொள்ளலாம்.

சுதந்திரன் ரைப் பௌண்டரி,
194 ஏ, கட்டாகொடை. கொழும்பு—12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர் மதி

சுதந்திரன் மாணவர் மன்றம்.

அன்பான மருமக்களே!

ஏராளமான மருமக்கள் அங்கத்தவர் மனுப் பத்திரங்களை நிரப்பி அனுப்பியிருக்கிறார் கள். அவர்கள் பெயர்களை இப்போது வெளியிட இடமில்லையல்லவா? 11-3-56ம் திகதிய 'வளர் மதி' யில் அவைகள் வெளியிடப்படும். மகிழ்ச்சி தானே.....?

மிக்க அன்புள்ள,
சுதந்திரன் மாமா.

நீங்களும் கேட்கலாம்

மாணவர்களாகிய உங்களுக்கு எத்தனையோ விஷயங்களுக்கு விடை தெரியாமலிருக்கலாம். நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு 'சுதந்திரன்' மாமாவினூல் இப் பகுதியில் விடையளிக்கப்படும். ஆனூல் கேள்விகள் பெயர் விலா சத்துடன் போஸ்ட் கார்ட்டில் மட் டும் எழுதப்பட வேண்டும். 'வளர்மதி' சுதந்திரன் மாண வர் மன்றம், C/o சுதந்திரன், தபால் பெட்டி இல: 1183, கொழும்பு—12 என்ற விலாசத் திற்கு கேள்விகளை அனுப்பி வைக்க வேண்டும்.

எம்: ஏ: சத்தியநாதன்
அவிசாவெல்ல

கே: மனிதன் ஏன் பிறந் தான்?

ப: தானும் புனிதமாக வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைக்க:

எஸ். ஏ. எஸ்: மகுமூது
ஓட்டமாவடி

கே: மாணவர் மன்றத்தை மாற்றி 'வளர்மதி' என பெயர் இட்ட காரணம் என்ன?

ப: புதிதாக விஷயங்களை ஆரம்பிக்கும்போது பெய ரிலும் ஒரு புதுமை வேண் டுமாம் அதனல்தான்!

செல்வி சகுந்தலா நாகராஜா
யாழ்ப்பாணம்

கே: பெண்கள் விளையாட் டில் பங்குபற்றலாமா?

ப: நன்முகப் பங்குபற்ற லாம்: உலகத்தின் வளர்ச் சியே பெண்கள் உடல் வளர்ச்சியில்தானே தங்கியிருக்கிறது!

செல்வி காந்திமதி நாகராஜா
மட்டக்களப்பு

கே: தற்போது பரதநாட் டியத்தில் சிறந்துவிளங்குப வர் யார்?

ப: (குமாரி) கமலா என்று சொல்லலாம். பத்மினி, வைஜயந்திமாலா, குச லகுமாரி, கேரள சகோதரி களும் குறிப்பிடத்தக்கவர் களே!

அ. சுந்தரலிங்கம், கொக்குவில்

கே. கடுதனான மொழி களில் மொழிபெயர்க்கப் பட்ட பிறமொழி நூல் எது?

ப: கிறிஸ்தவ பரிசுத்த வேதாகமம்.

இ. நவரேன், கண்டி

கே. இலங்கையில் பெண் டொக்டர்கள் இருக்கிறார் களா?

ப: ஆமாம்:

த. சுரேந்திரநாதன்,
வவுனியா

கே: றெயில் தண்டவாளங் களுக்கிடையில் ஏன் ஒரு இடைவெளி இருக்கிறது.

ப: சூட்டினல் தண்டவா ளங்கள் நீளும்போது, முட் டிக்கொள்ளாமலிருக்கத் தான்!

மு. தங்கராசா, குறுமண்வெளி

கே: இளநிக்கல் பரீட்சை யில் தேறியவர்களுக்கு என்ன சம்பளம் கிடைக் கிறது?

ப: தற்போது ரூபாவும் அலவன்சும் கிடைக்கிறது: மூன்ரு 70ம் அலவன்சுமே கொடுக்கப்பட்டது.

புலவர்களும் சமூக சேவையும்

ஓர் சமூகத்தின் கலாச் சாரத்திற்கு ஜீவ நாடி யாக இருந்தவர்கள் புலவர் கள். இவர்கள் தாங்கள் உண்டாக்கிய கவிகளின் மூல யாகவே சேவை செய்தனர். ஓர் சமூகத்திற்குப் பல தேவைகள் இருக்கலாம். தேவையின்மை இருக்க லாம். சமூகம் எத்தகையது? அதன் தேவை என்ன? என் பவற்றை அறிந்து செய்ய வேண்டியது புலவர் கடமை யும்.

இக்காலத்தைவிட்டுஅக்கா லத்திற்குப் போனல் அன்று சமூக சேவையையே கடமை யாக உணர்ந்த நீதிகளும் உண்மைகளையும் பொதித்த அருமையான குறட்பாக்கள் பாடிய வள்ளுவ நாயனு ருக்கே முதல் இடமுரியது. பல்வேறு பாஷைகளிலும் இந்நூல் மொழிபெயர்த்தி ருப்பதிலிருந்தே அது சமூக சேவையை யாம் மதிப்பிட முடிகின்றது.

அலிவரசாட்சி, உரிமை இயக்கம், தாய்நாட்டுப் பற்று, மொழிப்பற்று ஆகிய வற்றில் சமூக சீர்திருத்தம் பற்றி மகாகவி பாரதியார் தெள்ளிய பாக்களில் பொ ழிந்திருக்கின்ருர். "பிர மணனே" ஐயன் என்றும் பறங்கியதை 'துரை' என்றும் அழைத்த காலம்போயிற்று. ஏய்ப்போருக்கு ஏவத்தொ ழில் செய்யும் காலமும் போ யிற்று என்று எவ்வளவு அழ காக "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" என்ற பாட் டில் பொருளைப் பொதித்து வைத்திருக்கின்ருர். நிலை கெட்ட இம்மனிதரைக் கண்டு நெஞ்சு பொறுக்கா மல் "நெஞ்சு பொறுக்கு தில்லையே" என்று பாடி யுள்ளார்.

பண்டை நூல்களாகிய பாரதம் மணிமேகலை, இரா மாயணம் ஆகியவை நீதியை உணர்த்துகின்றன. "சிலப் பதிகாரம்" கண்ணகியின் கற்பின் மாண்புத்வத்தையும், கொடுங்கோன்மையையும் தெள்ளிதில் விளக்குகிறது. இப்படிப் புலவர்கள் சமூகத் தின் தேவைகளை உணர்ந்து பாக்களை பாடி உள்ளனர். இன்று சமூக சேவையே குறி கோளாகக் கொண்டு தொண்டு செய்யும் அன்பர் பாரதிதாசன் என்ருல் மிகை யாகாது.

—செல்வி கு. பத்மாவதி

சாரணியம்

சேர் ரொபட் பேடன் பவுல் ஓர் ஆங்கி லேய இராணுவவீரர். 1908-ம் ஆண்டில் இங் கிலாந்தில் இவ்வியக்கத்தை ஆரம்பித்தார். அப்போது பலர் அவரை கேலி செய் தார்கள்.

நாங்கள் படித்த படிப்பில் பயனை அடைவதற்கு சார ணர் இயக்கம் தோன்றியுள் ளது: சாரணியத்தில் உள்ள வர்கள் தங்கள் தலைவருக்கு கீழ்ப்படிந்து நடக்கவேண் டும். அவர்கள் பிறருக்கு உத வி செய்ய வேண்டும். பிறருக்கு உண்டா கும் துன்பங்களையும் அபாயங்களையும், நீக்கசக்தி உள்ளவர்களாக இருக்க வேண்டும். அன்பு இரக்க முள்ளவர்களாய் திகல வேண்டும் வீண் செலவு செய்யாமல் சிக்கனமாய் இருக்க வேண்டும்.

சாரணியத்தில் உள்ளவர் கள் பதினலு வயது தொடக் கம் பதினெட்டு வயது வரை யும் உழைக்கலாம். சுறு சுறுப்பு உள்ளவர்களாய் இருக்க வேண்டும். சாரணி யத்தில் சேரவிரும்பு வோர் கீழ்க்காணும் மூன்றுவிதங்களை சத்தியம் செய்து கொடுக்க வேண்டும். முதலாவது: கட வுளுக்கும், தேசத்துக்கும், என்நேரமும் எச்சமைத்தும், அமைந்து எல்லோன திற மையைகாட்டுவேன். இரண் டாவது: எச்சாதியாருக்கும், எச்சமயத்தினருக்கும். என் நேரத்திற்கும், அவர்களுக் கும் உதவி செய்ய தயா ராய் இருப்பேன். மூன்ருவது:- சாரணிய கட் டளைகளுக்கு என்னேரமும் அமைய ஆபத்தமாக இருப் பேன்.

இம் மூன்று கட்டளைகளை யும் சத்தியம் செய்து நிறை வேற்றுபவர்களை உத்தம சாரணியர் ஆவர்.

—எம் ஏ. சத்தியநாதன்.

தெரிந்து கொள்ளுங்கள்

★ மாட்டுச் சாணத்தினி ருந்து ஒரு வித வாயுவை (Gas) எடுக்கும் முறையை லக்ஷ்மணபுரி விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இந்த வாயுவைக் கொண்டு உணவு சமைக்கவும், விளக்கு எரிக்கவும் முடியும் என்று கூறப்படுகின் றது. ஆகவே சாணியிலி ருந்து வெளிச்சம் பெறலாம் என்பது முடிவு.

★ ஒரு பிணம் இறந்து எவ் வளவுநேரம் ஆகியுள்ளதென் பதை இலகுவில் கண்டு பிடிக்க, இறந்து போன பிணத்தின் உடல் வெப்ப நிலையை முதல் காணவேண் டும். பின்பு அவ்வெப்ப நிலை யை மிதமான வெப்ப நிலை யான 98.6 of லிருந்து கழித்து, கழித்து வரும் எண் ணை 1.5 ஆல் வகுக்க வேண் டும். வகுத்து வரும் ஈவு என் தான் இறந்த பின்பு சென்ற நேரமாகும்.

★ 'டாலர்' (DOLLAR) என்பதற்குப் பள்ளத்தாக்கு என்று அர்த்தம். 16-ம் நூற் ருண்டில் வழங்கிய தெனெர் என்ற ஜெர்மன் நாணயப் பெயரின் 'திரிபு' டாலர்: பொஹீமியாவிலுள்ள ஜோச்சம் பள்ளத் தாக்கில் செய்த நாணயம் தெனெர் ஆகும்.

★ எமது உடம்பிலுள்ள பாஸ்பரசைக் கொண்டு 2000 தீக்குச்சிகள் செய்ய லாம்:

★ உலகில் முதன் முதல் காகிதம் செய்தோர்-சீனரே. கி. மு. 170 ல் செய்தனர்:

★ மிகசார விளக்குகளை முதன் முதலில் 1874ல் லண் டனில் கோடிக்வித்; கோல் லாப் என்னும் இருவர் கண்டு பிடித்தனர்.

★ அமெரிக்காவை முதன் முதலில் நார்திமேன் என்னும் சாதியர் கி. பி 975ல் கண்டு பிடித்தனர்: கொலம்பஸ் 1492ல் கண்டு பிடித்தனர்.

—என். பி கே. லிங்கம்

நீரமகளிர்

மட்டக்களப்பு வாவியில், பூரண இரவு நேரங்களில், நீரினுள் இருந்து இனிமையாகப் பாடும் செந்நிற நீரர மகளிர் என வர்ணித்து மகிழ்ந்தார் "யாழ்நூல்" ஆசிரி யர் சுவாமி விபுலானந்த அடிகள்.

"நீருளிருந்தெழுந்து நின்றுரரமகளிர்
பைம்புலின் மேறபடர்ந்த பாரிநிகர் கூந்தலார்
அம்பொன்னின் மேனி அரையின்கீழ் மீன்வடிவம்
செங்கமலம் போற்கரகள் திங்கள் மதிமுகத்திற்
பொங்கிய புன்முறுவல் பூத்தார் புலமையார்"

என்ற அடிகளாரின் பாடலுக்கொப்ப அமைந்திருக்கிறது; மட்டக்களப்பு, திமில தினைச் சேர்ந்த மருமகன் என்; கிருஷ்ணபிள்ளை அனுப்பியிருக்கும் இச்சித்திரம்.

—சுதந்திரன் மாமா

'வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். மேலே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூர்த்தி செய்து அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள்தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப்பத்திரங்களை 'வளர்மதி''யில் அங் கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர் மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இல 1183, கொ ழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படு வதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப் படும். அத்துடன் அத்தாட்சி பத்திரமும் வழங்கப்படும்.

வளர் மதி

சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல: 3

பெயர்.....வயது.....

பாடசாலை.....

விலாசம்.....

.....

.....
பெற்றோர் அல்லது குரியவர்

.....
கையெழுத்து

திருவள்ளுவர்

திருவள்ளுவர் ஓர் உலக கவி. உலககவிகளுள் தலை சிறந்த கவி; அவர் உள்ளத்தில் தோன் றிய கருத்துக்களனைத்தும் உலகமக்கள் அனைவருடைய உள்ளங்களையும் கவரும் தன்மை உடையன. ஆசிரி யர் அவர் தம் அறிவின் கெ ரத்தில் நின்றும் விசயத்தை அவை என்ற பொய்யா மொழிகளோடாயும். ஐந்தி பல செல்லும் அவர் மொழி கள் உள்ளத்தைத் குவை விடுகும். அவை எந்தன் நாட்டுக்கும் பொருத்தமா தன்மையன:

வள்ளுவர் தமிழ் அன்னைக பெற்ற ஒரு தெய்வப்புதல் வர். அவர் எடபோ தோன் நிலுர் என்பது சந்தேகம். அவர் உலகிலுள்ள விசயங் களனைத்தையும் மூன்று வகுத்துக் கூறினர்: அவை அறம், பொருள், இன்பம். என்பன. அவர் கூறவேண் டிய விசயங்களை எதுவித புனைந்துரையுமின்றி உண் மையை மறைவைக்காத தெளிவாகக் கூறினர். கவி மணிமை சுவிதபதி சாட்ட

(13-ம் பக்கம் பார்க்க)

காலைக்காட்சி

கதிரோன் எழுந்தான் கரைந்தது காகம்
காரிருள் நீக்கிற்று நீங்கினவெண்பனி
இலைகளில் துஞ்சும் இன்னிகள் பறந்தன
ஓழ்த்திசை வெளுத்தது, வெளுத்தது வானம்
குருகுகள் யெம்பின கூகைகள் மறைந்தன
கூவும் பொற்கோழி குறைத்தது நாதத்தை
கெலித்தது புலரி திக்கெட்டும் பரவி மாந்தரே!
கேட்டீரோ! பார்த்தீரோ! பாரினில்
காலைக்காட்சி!!

—பி. ஜி. கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச் செய்திகள்

ஜனநாயகத்தின் பேரால் தமிழ்ப் பேசும் மக்களின் உரிமை வேட்டை

ஒற்றையாட்சி ஒழியுமட்டும் ஒன்றுக வாழமுடியாது

"ஜனநாயகம் என்ற பெயரால் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களின் உரிமை நாளுக்கு நாள் பறிக்கப்பட்டு வருகின்றது. சோல்பரி அரசியல் நிட்டம் தமிழ் மக்களே நாடுகடத்தி இலங்கைத் தீவை ஒரு சிங்களத் தீவாக்கும் எண்ணத்துடனே உருவாக்கப்பட்டது. ஒற்றைக்கண் சோல்பரி பிரபுவும், காலம் சென்ற டி. எஸ். சேனநாயகாவினாலும் உண்டாக்கப்பட்ட சதித் நிட்டமே இது. ஒற்றை ஆட்சியின் கீழ் தமிழ் மக்களும், சிங்கள மக்களும் ஒற்றுமையாக வாழ முடியாது "தவறுதல்" என்று கூறி தமிழ் மொழியையும், தமிழ் இனத்தவர்களையும் புறக்கணிக்கின்றார்கள் யு. என். பி.—கொத்தலாவலை வகுப்புவாத அரசாங்கம். இனிமேலும் நாம் வாளாவிருப்பதால் பயனில்லை. தமிழ்ப் பேசும் பெருமக்கள் 'வாழுவோம் தமிழனுக அன்றேல் மாழுவோம் தமிழனுக" என்று சபதம் செய்து சுதந்திரப் போரில் குதிக்கவேண்டும்."

இவ்வாறு வடமராட்சி தமிழ் மன்றத்தின் சார்பில் இலங்கை சுதந்திர தினத்தில் தமிழ் மக்கட்கு உலகுவத்த சோல்பரி அரசியல் நிட்டத்திற்கு சாவுமணி வடிக்க மேளங்களுடனும், கறுத்தக் கொடிகளுடனும் நடைபெற்ற மரண ஊர்வலத்தின்பின் கிராவவெளி சோவிற்சந்தை மைதானத்தில் நடைபெற்ற பிரமாண்டமான கூட்டத்தில் தமிழரசுக் கட்சி வடமராட்சிக் கிளை திர்வாகக் கமிட்டி அங்கத்தவரும் தமிழ் மன்ற காரியதரிசியுமான திரு ஆ. சிவதாசன் சொற்பொழிவாற்றுகையில் கூறினார்:

இதன் பின் திருவாளர்கள் எம். சமலநாதன், வி. வேலுப்பிள்ளை, எம். கந்தவனம் முதலியோர் பேசினர்கள்:

தமிழ்த்தாய் உரிமைக்காகப் போராடுவோம்

தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் பிரதேசம் ஆகியவெல்லாம் அழிந்தொழியுமோ என எண்ணும்படி அபாயகரமான தாக்குதல்கள் எதிர்நோக்கி வருகின்றன.

நம் தாய்மொழி அழிந்து விடும். இதன் போராட்டத்துக்காக பொதுத்துவில் தொகுதி மக்கள் எதிராய் வரும் பொதுத் தேர்தலுக்குப் போட்டியிடவிருக்கும் எவராயினும் சரி, தமிழ் மொழிக்கு, தமிழ்த் தாய்க்கு, தமிழ் இனத்துக்குப் பாடுபட எவர் வருகின்றாரோ, இலங்கைத் தமிழரசுக்கட்சிக்காக எவர் உதிரம் வடிக்கின்றாரோ, அவரையே எங்கள் தொகுதிப் பிரதிநிதியாக அனுப்பவேண்டுமென்று பொதுத்துவில் தொகுதி மக்கள் அனேகமான வட்டாரங்களில் போராடி வருகின்றார்களெனத் தெரியவருகின்றது: இந்தக் கருத்தைத்தான் சமீபத்தில் சோளாவிற் கிராமத்தில் திருக்கோவில் அறப்போரணியின் ஆதரவில் நடத்த மொழிக் கிளர்ச்சிக் கூட்டத்தில் அணித் தலைவர் திரு ஏ. வி. எஸ். அரியநாயகம் வெளியிட்டார்:

பெண்கள் ஆண்களின் இருகண்கள் போன்றவர்கள்

"ஆண் தனித்து நின்று நடாத்தும் வாழ்க்கை காட்டாட்டாற்றைப் போன்றது. அதை அவ்வப்போது அணைபோட்டுத் தடுத்து மெல்லென ஊர்ந்துசெல்லும் அழகு நதியாக்குவது பெண்ணின் பெருமைகான். பெண்கள் ஆண்களின் இருகண்கள் போன்றவர்கள்." இவ்வாறு செல்வன் வி. கே. தங்கயசிங்கம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர் மன்றத்தின் பொதுக்கூட்டமொன்றில் "பெண்களுக்கு ஆண்களுடன் சரிசம அந்தஸ்து அளிக்கவேண்டுமா?" என்ற விவாதத்தின்போது அளிக்கவேண்டுமென்ற கட்சியினருக்குதி தலைமைவகித்துப் பேசும்பொழுது கூறினார்.

கூட்டத்திற்குச் செல்வி எம். அம்பிகையம்மா தலைமைவகித்தார். பல நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகளும் பல ஆசிரிய ஆசிரியைகளும் சமுகமளித்திருந்தனர்.

விவாதத்தை எதிர்த்துச் செல்வன் கே. ஞானப்பிரகாசமும், விவாதத்தை ஆதரித்துச் செல்வி எஸ். நவநீதவல்லியும் மிகுந்த உணர்ச்சியுடன் பேசினர்கள்:

மெய்யைமத் தன்மையினராகிய பெண்களுக்கு ஆண்களுடன் சமஉரிமை கொடுப்பது ஏற்றதல்ல வென்று செல்வன் எம். கணகசபை விவாதத்தை எதிர்த்துப் பேசினார்:

செல்வி எஸ். நீலாம்பிகை விவாதத்தை ஆதரித்தும், செல்வன் எஸ். அம்பலவாணர் எதிர்த்தும் பேசினர்:

கிராம முன்னேற்றசங்கம் பன்குடாவெளி

பன்குடாவெளி கி. மு. ச. வருடாந்தக் கூட்டம் 8.2-56ல் அக்கிராசனர் திரு க. பொன்னையா தலைமையில் கூடியது

ஏழு கோ. காரியாதிகாரி திரு ரி. பாலச்சந்திரன், கிராமாபிவிருத்தி உத்தியோகஸ்தர், திருஷிகப் போதகாசிரியர், ஓவசியர் முதலியோரும் பெருந்தொகைக் கிராமவாசிகளும் சமுகமாயிருந்தனர்:

திருஷிகப் போதகாசிரியர், திரு பொ. இராமலிங்கம் ஆசிரியர், திரு க. கந்தையா ஆசிரியர் முதலியோரும் குறிப்புரைகள் கூறினர்.

அடுத்த வருட உத்தியோகஸ்தர் பின்வருமாறு தெரியப்பட்டனர்.

தலைவர்: திரு க. பொன்னையா, உபதலைவர்: திரு பொ. இராமலிங்கம், காரியதரிசி: திரு இ. தியாகராஜபிள்ளை, தஞ்சதிகாரி: திரு பூ. மார்க்கண்டு. திருவாசகசபையில் கிராமத்தில் ஏற்படும் ஒரு பிணக்குகளை விசாரிப்பதற்கென ஒரு பஞ்சாயமும் தெரிவு செய்யப்பட்டனர்.

கிராமாதிகாரி திரு த. நவரெத்தினம் அவர்களால் நன்றியுரை கூறப்பட்ட பின் கூட்டம் முடிவுற்றது.

இளைஞர் முன்னேற்றக் கழகம்

வாழைச்சேனை இளைஞர் முன்னேற்றக் கழகக்கூட்டம் சென்ற 11-2-56ல் வாழைச்சேனை அரசினர் முஸ்லிம் பாடசாலை மண்டபத்தில் தலைவர் ஜனாப் எம். எஸ். மீராசாகிப் தலைமையின்கீழ் கூடியது.

திருவாளர்கள்: இ. அழகரெட்ணம், என். எம். இஸ்மாயில், ஏ. யூ. எம். (ரமணி) ஆகியோர் பேசினர்.

அகில இலங்கைத் திருக்குறள் போட்டி

இலங்கைத் தமிழ் மறைக் கழகம் நடத்தும் அகில இலங்கைத் திருக்குறள் போட்டியில் ஏறக்குறைய ஆறுயிரம் பேர் பங்குபற்றுகின்றார்கள். இவர்களுள்ளே பத்து வயதுச் சிறுவர்களும் வளர்ந்தவர்களும் உளர்; ஆசிரியர்களும் அரசினர் உத்தியோகத்தரும் உளர், சகோதரர்களும் தந்தையரும் மக்களும் உளர்.

வெற்றி பெறுபவர்களைத் தெரிவு செய்வதற்கு 20 இடங்களில் மே 17-3-56ல் தேர்வு நடைபெறும். தேர்வுக்குரிய நுழைவுச் சீட்டுகள் இம்மாதம் முடிபுழன் தேர்வுக்குத் தோற்றுபவர்களுக்கு அனுப்பப்படும்.

நவாலி வாலிப கிறிஸ்தவ சங்கம்

நவாலி வாலிப கிறிஸ்தவ சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் சங்கத் தலைவர் திரு ஜே. ஜே. இரத்தினராசா தலைமையில் சென்ற(4-2-56) சங்கமண்டபத்தில் கூடியது

ஆசிரியர் திரு ஞானசம்பந்தன், திரு ஜே. ஜே. இரத்தினராசா, டாக்டர் எச். பி. செல்லையா முதலியோர் பேசினர்கள். கூட்டத்திற்கு திரளான மக்கள் சமுகமளித்திருந்தனர். கடைசியாகச் சங்கக் காரியதரிசி திரு ஏ. டபிள்யு. ஞானசிகாமணி நன்றி கூறிக் கூட்டத்தை முடித்தார்:

முந்தலில் காந்திஜியின் அமர தினம்

மகாத்மா காந்திஜியின் அமர தினம் கடந்த 30-1-56ல் முந்தல் கமலாம்பிகை வித்தியாசாலை மண்டபத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது:

இறை வணக்கப் பாடலின் பின் தலைவர் தம் முன்னுரையில் காந்தியடிகளின் இலட்சியத்தைப்பற்றி விரித்துரைத்தார். அடுத்து நரக்களி ஆர். சீ. தமிழ்க் கிரேஷ்ட பாடசாலை ஆசிரியர் திரு வீ. எஸ். பிள்ளை "காந்தியடிகளின் வாழ்க்கை வரலாறும்—காங்கிரசின் சிறந்த சேவையும்" என்பதுபற்றியும், புத்தளம் சாகிராக் கல்லூரி ஆசிரியர் திரு ஏ. எம். ஜ. நெய்னா மரைக்கார், "காந்தியடிகளின் தேசத்தொண்டுகள்" என்பதுபற்றியும், புத்தளம் பகுதிச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம். வேதாரணியம் "காந்தியடிகளின் சுதந்திரப் போர்" என்பதுபற்றியும் முந்தல் கமலாம்பிகை வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் பண்டிதர் மா. மாணிக்கம் "காந்தி மகான் வாழ்வில் சில முக்கிய சம்பவங்கள்" என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினர்: பின்னர் குமாரி எம். எஸ். சமலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் தேர்ச்சிச் சங்கம்

"மாணவர்க்கு தேர்ச்சிச் சங்கம் என்பது ஒரு இன்றியமையாத்திற்கு அதன் மொழிவளர்ச்சிபோன்றது. நாளை பாராளுமன்றங்களில் இருப்போர்தான் இன்று பள்ளிக்கூடங்களில் இருக்கின்றீர்கள்"

மேற்கண்டவாறு நானுஓயா அரசினர் சிங்கள தமிழ் பாடசாலையில் 10-2-56ல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட மாணவர் தேர்ச்சிச் சங்கத்தில் ஆசிரியர் திரு வி. சபாபதிப்பிள்ளை கூறினார்:

சங்க உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு வி. சபாபதிப்பிள்ளை, காரியதரிசி திரு ஏ. சுப்பிரமணியம், தஞ்சதிகாரி: செல்வி ஜே செல்லம்மா

வள்ளுவர் நாடக மன்றம்

வள்ளுவர் நாடக மன்றத்தின் அமைப்புக் குழு கூட்டம் கடந்த 12—2—56ல் கொள்ளுப்பிட்டி மார்சல் எலிமென்றி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

அமைப்புக் குழு செயலாளர் தோழர் வை. மு. அழகேசன் வரவேற்புரை கூறியபின் தோழர் எம். எஸ். குமார் மேற்படி கூட்டத்திற்கு தலைமைதாங்குமாறு கேட்டுக்கொண்டார்.

தலைவரின் தலைமையுரைக்குப்பின் கீழ்க்காணுபவர்கள் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: மா. போ. தேவராஜன், செயலாளர்: அன்பரசன், உதவி செயலாளர்: எம். எஸ். குமார், பொருளாளர்: வி. கே. செல்லப்பா, விளம்பரச் செயலாளர்: கே. எம். டி. கலைதாசன்.

கூட்டுப் பிரார்த்தனைக் குழு

நவாலி முருகமூர்த்தி கோவில் மண்டபத்தில் "முருக நாம பஜனைக் குழு"வின் நான்காவது ஆண்டு ஆரம்ப விழா கொண்டாடப்பட்டது. விழாவிற்குத் தலைமை தாங்கிய திரு. வை குணசேகரம் பேசியபின் பஜனையில் பங்குபற்றும் சிறுவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

பின் திரு இ. சிவசம்பு பேசுகையில் 'சைவத்தைப் பற்றி காடறக் கற்றலும் அதன்வழி நின்றலும்தான் சிறந்தது' என்று குறிப்பிட்டார்: திருவாளர்கள் க. நடேசன், மா. சிவபாலன்

திக்கம் - அல்வாய் த. அ. கட்சிக் கிளை

"தமிழன் தமிழனுக வாழவேண்டுமானால் சமஷ்டி அரசே சிறந்த வழியாகும் அப்போதுதான் அவன் மொழியும், பண்பாடும், கலாச்சாரமும் வளர்ந்தோங்கும்" என்று தமிழரசுக் கட்சி அமைத்தவரான செல்வன் வி. பி. சுந்தரலிங்கம், திக்கம் நடைபெற்ற தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியின் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்:

பின்னர் நடப்புவருட உத்தியோகஸ்தர்கள் நியமனம் நடைபெற்றது.

தலைவர்: பி. கே. சிதம்பரப்பிள்ளை, உபதலைவர்: சி. சிவஞானசுந்தரையர், செயலாளர்: வி. பி. சுந்தரலிங்கம், உபசெயலாளர்: ஏ. பொன்னையா, தஞ்சதிகாரி: க. பரிபாலன்:

கொம்பன்குளம் கி. மு. ச. ஆண்டுவிழா

கொம்பன்குளம் கிராம முன்னேற்றக் கழகம் இலங்கைக் கிளையின் மூன்றும் ஆண்டு விழா சமீபத்தில் செம்பட்டாத் தெரு 140ம் இலக்க கட்டிடத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கூட்டத்திற்கு தோழர் இ. ஆறுமுகம் தலைமைவகித்தார். அனைவரையும் வரவேற்று கழகச் செயலாளர் தோழர் மு. கா. இராசன் பேசினர். தோழர் சொர்ணலிங்கம் ஆண்டறிக்கையை சமர்ப்பித்தார்.

தோழர்களான சு. கா. சுந்தரராசன், ஆர். ஆர். கேடேஸ், பி. எம். ஜலால், தி. இளங்கதிர், எல். தர்மதாசன் "உரிமைக் குரல்" ஆசிரியர் தோழர் வி. எஸ். முருகன் முதலியோர் பேசினர்கள்: பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

(1) தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டை ஆகிய பகுதிகளை தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும்.

(2) இலங்கையின் ஆட்சி மொழியாக தமிழ் மொழிக்குச் சமஅந்தஸ்து அளிக்கப்பட வேண்டுமென்று இலங்கை அரசியலாளரைக் கேட்டுக்கொள்கிறது:

தோழர் மு: கா. இராசன் நன்றி நவில விழா இனிது முடிந்தது:

ஆயோரும் பேசியபின் திரு வே. சிற்றம்பலம் நன்றியுரை கூறினர்:

அழகான புத்தக வேலைகள்

கதை - கட்டுரை நூல்கள், பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்கள், சஞ்சிகைகள் அச்சிட விரும்புவோருக்கு அரிய சந்தர்ப்பம்:

சுதந்திரன் ரைப் பவுண்டரியில் தயார் செய்யப்பட்ட அழகான புதிய 10 பொயிண்ட் 12 பொயிண்ட் எழுத்துக்களைக் கொண்டு புத்தகங்கள் அச்சிட விரும்புவோர் சுதந்திரன் ஜொப் டிபார்ட்மென்டைக் கலந்தாலோசிக்கவும். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு பாஷைகளிலும் புத்தக வேலைகள் ஏற்றுக் கொள்ளப்படும்:

குறைந்த கட்டணத்தில், நிறைந்த வேலைப்பாடுகளுடன், குறிப்பிட்ட நேரத்தில் உங்கள் புத்தகங்களை அச்சேற்றித்தரவல்ல அச்சகம் சுதந்திரன் பிரஸ் ஒன்றுதான்.

இன்றே உங்கள் தேவைகளுக்கு எழுதுங்கள்:

194 A, தட்டா தெரு, கொழும்பு-12:

மானேஜர், சுதந்திரன் பிரஸ்

என்ன? மூன்றுவது வெற்றிகரமான வாரமா?

ஆம்!

ஏககாலத்தில் 6 திரைகளில்

கிங்ஸ்லி
கொழும்பு

ஸைபயர்
கொழும்பு

வெலிங்டன்
யாழ்ப்பாணம்

விஜயா
மட்டக்களப்பு

மொடர்ன்
பதுளை

ஸ்ரீபாத
ஹட்டன்

உங்கள் அபிமான நட்சத்திரங்களாகிய

ஜெமினி கணேஷன், சாவித்திரி, எம். என்.
ராஜம், கே. ஏ. தங்கவேலு, ஸி. எஸ்.

பாண்டியன் திறம்பட நடித்த

19-ம் நூற்றாண்டில் நடந்த உன்னதமான
உணர்ச்சிமிக்க சித்திரம்!

கண்குளிரப் பார்த்து மகிழ்வதற்கு,
குத்துச்சண்டைகள், குதிரையோட்டங்கள்,
அற்புத, நடனங்கள், பயங்கர கடல் சண்டைகள்
நிறைந்த சிறந்த படம்!

கடலோடி வெள்ளையர் தமிழ்நாட்டைச் சூரையாடச்
சதி செய்த காலத்து நிகழ்ந்த அற்புதமான
சம்பவங்களை உள்ளடக்கிய சிறந்த
தமிழ்ப் பேசும் சித்திரம்!

மாடர்ன் தியேட்டர்ஸாரின்

மகேஸ்வரி

பண்டைக்காலத்தில் தனிக் கொடியின்கீழ் பாராண்ட தமிழன் அன்னியனுக்கு
அடிமைப்பட்டு வாழ மறுத்து அறப்போர் செய்த அற்புதத்தை, ராணி ரங்கம்மாவின்
சீற்றத்தைக் கண்டு மகிழ வேண்டுமென்றால் மேற்கண்ட
திரைகளை நாடுங்கள்!

இப்பத்திரிகை கொழும்பு தட்டாதெரு 196-ம் இலக்கத்தில் கதிரேசு எஸ். டி சிவநாயகம் அவர்களால் மனோன்மணி நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் என்ற ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு [illegible] அச்சிடப்பட்டு 1956 பெப்ரவரி 26-ந் திகதி பிரசுரம்செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org